ரிஜிஸ்டர்ட் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.
ஆசிரியர்:- ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ ஆடி௴ 11௨ (26—7—1931) | மலர் 13

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்ற பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார் செய்யப்பட்டது)

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

குழந்தை மருந்துகள்

கோரோஜனை மாத்திரை பாட்டில் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா 8. கரப்பான எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் எல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாங்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். கமீஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,
தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

வெளிவந்து விட்டது! வாங்கத்தவராதீர்கள்!!

முந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டுமீ த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முககியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் ௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

(வக்கில், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள்ளூர்) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

அரசாங்க இஞ்சினியர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர் சென்னை

அகத்தியர் ஆராய்ச்சி.

இது சென்னை இராஜதானி கலாசாலை தமிழ் ஆசிரியரும் கலாவல்லவருமான பண்டிதர் உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் அனேக நூல்களை ஆராய்ச்சி செய்து பல ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டதாகும்.

விலை அணா 0—2—0 தான். வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

பகுத்தறிவே விடுதலை.

அல்லது ஜீவாத்மா இல்லை, என்னும், இப்புத்தகம் சிறந்த ஆராய்ச்சி நூலாகும். முன், பின், ஜென்மம், மூடப்பழக்கவழக்கங்கள் முதலியன ஆராயப்பட்டிருக்கின்றன. சடங்குகள், அதுவே சிலவு; கடவுள் ஆராதனை விக்ரக வணக்கம் முதலியன கண்டிக்கப்பட்டிருப்பதோடு பல ஆதாரங்களினாலும், மேற்கோள்களாலும் விளக்கப்பட்டிருக்கின்றது. சித்திரப்படங்களுடன் 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணா 6, 7 அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

நிமிஷத்திலே குணமடைவதைவிட்டு ஏன் கஷ்டப்படுகிறீர்?

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சிதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல் அடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவைகளையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியடின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணா. 4.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,

அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

சோல் ஏஜண்டுகள்:—

தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெரு மதராஸ்,

K. S. மேதா & Co., 234, சைனாபஜார் ரோட் மதராஸ்,

வெள்ளச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்

சித்த ரசம்.

சகலவியாதிகளுக்கும் ஏற்றது ஒரு முறை பரீட்சியுங்கள்.

புட்டி 1க்கு ரூ. 1—0—0

டஜன் 1க்கு ரூ. 10—0—0

ஏஜண்டுகள் தேவை

அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்புக

சி. பி. சாமி, சித்தமருந்து செய்சாலை பழனி S. I.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.

வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூற்று)

சி. சுவாமி சிவநேசம்,

"சன்மார்க்கன்" பழனி.

கடந்த 12 வருஷங்களாக இந்திய ஏழைமக்களின் கல்வி விஷயமாய் தபால் மூலமும், நேரிலும் உழைத்துவரும் ஸ்தாபனம் இதுவே!

முந்துங்கள்! 2000 மாணவர்கள். | தமிழ்நாட்டு பெற்றோர்களே! | முந்துங்கள்!! 2000 மாணவர்கள்.

மெட்ரிக்குலேஷனுக்குரிய அறிவை

உங்கள் பிள்ளைகள் ஹைஸ்கூலில் படித்துப் பெற சந்தர்ப்பமில்லாவிடில், தபால்மூலம் வீட்டிலிருந்தபடியே, தொழில் செய்துகொண்டு சவகாச நேரங்களில் கற்றுக்கொள்ளலாம். கவர்ன்மெண்ட் பரீக்ஷைக்கு போக இஷ்டப்படின் போகலாம். S. S. L. C. படித்து தவறியவர்கள் நமது கோர்ஸ்களை முடித்து சீனியர் பாஸ்செய்து காலேஜில் சேரலாம். தமிழ் (or) இங்கிலீஷ் பிராஸ்பெக்டசுக்கு 1-அணா ஸ்டாம்பு உடன் அனுப்பவும்.

டைரக்டர்,

அன்பையன்ஸ் கேப்பிசிட்ஜ் இன்ஸ்டிடியூட், ஆறுமுகநேரி. S. I. R.

பார்ப்பானும், படித்தனும், பணக்காரனும் பாமரமக்களின் பரம விரோதிகளேயாவார்கள்.

(ரஷிய ஞானி—லெனின்.)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

காந்தியின் 'ராம' ராஜ்யம்.

(பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப்)

கட்டுரை 3.

முன் தொடர்ச்சி.

இவ்வாறு ஜப்பானியர்கள் ஆதியில யுத்த முறைகள் தங்கள் மதக்கொள்கைகளுக்கு விரோதம் என்றுணர்ந்த போதிலும், அவசியத்தின்பொருட்டு மேல்நாட்டு யுத்தமுறைகளைப் பயில ஆரம்பித்தார்கள் என்று சொன்னேன். ஜப்பான் இன்னும் என்ன செய்தது தெரியுமா? தனது கிராம வாழ்க்கையின் அழகை (திரு. காந்தியின் கிராம வாழ்க்கைக் கருத்தைவிட பன்மடங்கு அழகுடையது என்பது ஞாபகத்திலிருக்கட்டும்) வேண்டுமென்றே விட்டொழித்து, தற்கால இயந்திரத்தைக் கைகொண்டு, இயந்திரத்தொழில் முறையையும ஏற்றுக்கொண்டது. ஏனெனில் தன் கௌரவத்தையும், சுயமரியாதையையும் காப்பாற்ற வேண்டுமானால், தன்னை எதிர்க்கும் தேசங்களை ஜெயிக்கவேண்டுமானால், அந்நிய நாடுகளோடு தான் வியாபாரம் செய்ய வேண்டுமானால்,— தனது நாட்டுச் செல்வத்தையெல்லாம் வியாபாரத்திலும் இயந்திரத் தொழில் முறையிலும் வாரி இறைத்து சண்டைக்கப்பல்கள், துப்பாக்கிகள், பீரங்கிகள் முதலிய மேல்நாட்டுப் போர்முறைகளையும் இயந்திர சாதனங்களையும் கையாள வேண்டியதைத் தவிரவேறு வழியில்லையென்பதையும் உணர்ந்து கொண்டது.

இனி சைனாவைப்பற்றிக் கவனிப்போம். சைனாவோ, ஜப்பானுக்குப் பிறகு நாகரீகமடைந்த தேசமென்றாலும், எல்லாவற்றிலும ஜப்பானையே பின்பற்றியது. சைனாவின் புராதன நாகரீகமானது, கிட்டத்தட்ட வேத காலத்திலிருந்தே ஏற்பட்டது என்று சொல்லலாம். அதனுடைய அரசியல் சரித்திரமானது ரோம் தேசத்தின் சரித்திரத்தைவிட அதிகப்பெரிதென்று கூடச் சொல்லலாம். இவ்வளவு புராதனத்தன்மையைக் கொண்டிருந்துங்கூட தேசியத்தற்புகழ்ச்சியோ பெருமையோ கொண்டு கண்மூடித்திரியாமல், ஐரோப்பிய நாடுகளை எதிர்த்துப் போராடக்கூடிய சக்தி தனக்கு வேண்டும் என்ற காரணத்திற்காக, தான் ஐரோப்பாவின் காலடியில் இருந்தாவது அதனுடைய இயந்திர முறைகளையும் விஞ்ஞான சாதனங்களையும் அறிந்துகொள்ள வேண்டியதே அறிவுடைமை யாகும் என்பதை நிச்சயித்துக்கொண்டது.

ஜப்பான், ரஷியாவைத் தோற்கடித்துத் தலைநிமிர்ந்து நின்ற காக்ஷியை ஒரு நாடகம் போலவே நம் கண்முன் பார்த்தோம். இன்று இவ்விரண்டும் உலகத்தின் உன்னத தேசங்களிலொன்றாக நிற்பதையும் நாம் பார்த்துக் கொண்டுதானிருக்கின்றோம். இதைப்போலவே சைனாவின் முன்னேற்றமும், சுதந்திர வளர்ச்சியும், சுயமரியாதை உணர்ச்சியும் உலகமறிந்த ன்றாகும்.

இனி, இஸ்லாம் தேசத்தை எடுத்துக்கொள்வோமேயானால், கிறிஸ்துவ நாடாகிய ஐரோப்பாவினின்றும் தப்பிக்கவேண்டுமென்றால், தாங்களும் தற்கால நாகரீகத்தை ஏற்றுக்கொள்வதே சிறந்ததென்று முடிவுசெய்து அவ்விதமே அவைகள் செய்து கொண்டிருப்பதையும் காணலாம். துருக்கி தேசமானது, சுவர்ஸ் சமாதானத்தில் அடைந்த தோல்விக்கும், அவமானத்திற்கும் பின்பு ஒன்றுக்குமுதவாத 'கிலாபத்'தை உதறித்தள்ளிவிட்டு, குடியரசை ஸ்தாபித்துக் கொண்டதை நாம் கண்டோம். துருக்கி ராஜீயவாதிகளெல்லோரும், தங்கள் தேசம் ஒருபுறம் கிரீஸ் தேசத்தோடு போர்புரிந்து கொண்டிருக்க, தாங்கள் மற்றொருபுறம் அங்கோராவிலிருந்துகொண்டு தேசத்தை நவீன நாகரீகத்தில் பழக்கிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். "காஜிமுஸ்தபா கமால் பாக்ஷா துருக்கிதேசத்தை ஒரு நவீன நாகரீகமுடையதாக ஆக்கிவிட்டார்." அவருடைய ஜனங்கள் எத்தனையோ உடுத்தியிருந்த உடைகளைக் கழற்றியெறியச்சொல்லி, ஐரோப்பிய உடைகளை உடுத்தச்செய்து விட்டார். எத்தனையோ வழங்கிக்கொண்டிருந்த சொந்த பாஷையை விட்டு, ரோமன் பாஷையைக் கற்கச் செய்து விட்டார், பெண்கள் முகத்தில் மூடியிருந்த துணியை எடுத்தெறியச்செய்து விட்டார். இவ்வளவும் செய்து, துருக்கி ஒரு நவீன ராஜியம் என்பதை ஐரோப்பாவும், அதனுடைய ஜனங்களும் அறிந்து அதன்படி அதற்கேற்ற மரியாதையுடன் நடத்தப்பட வேண்டுமென்பதையும், துருக்கியும் ராஜதந்திரம், யுத்தம் முதலியன அறிந்த ஒரு தேசமென்பதையும், உலகம் அறியட்டுமென்று கர்ஜனை செய்கிறார்.

இம்மாதிரியே மற்றொரு முகமதிய ராஜியமாகிய ஆப்கானிஸ்தானத்தை எடுத்துக்கொள்வோமேயானால், அமானுல்லாகான் நவீன நாகரீகத்தை வெகுவேகமாகப் பரப்பியதற்காக அவரை விரட்டிவிட்டாலும், அவருக்குப்பின் வந்த நாதர்ஷாவும் அதே உணர்ச்சியைக் கொண்டவர்தான் என்பது காணக்கிடக்கும்.

இவை எல்லாவற்றையும்விட சிறந்த உதாரணமென்னவென்றால், ஐரோப்பாவானது சில வருஷங்களாக ஒருகெடுதியாகத் தோன்றினாலும், பிறதேசங்கள் ஐரோப்பாவோடு நவீன நாகரீகத்தில் போட்டி போட முடியாமல் தவிக்கும் பல ஹீனத்தின் காரணமாகத்தான் ஐரோப்பாவைக் கண்டு இதர தேசங்கள் வெறுக்க ஆரம்பித்திருக்கின்றன.

ஐரோப்பாவிற்கு இதர தேசங்களை விட அதிக பலம் இருப்பதற்குக் காரணம் என்ன? ஐரோப்பாவிலுள்ள சுதந்திரஸ்தாபனங்கள் ஒன்று. தர்க்க முறையினால் சர்க்கார் நடத்தப்படுவது இரண்டு. தன்னுடைய கொள்கைகளைப் பரப்புவதில் தயவு தாக்ஷண்யமில்லாமல் பலாத்காரத்தை உபயோகப்படுத்துவது மூன்று. இந்த மூன்று வழிகளைக்கொண்டு இந்தியாவும் இதர தேசங்களும் தங்கள் தங்கள் [illegible] ஸ்தாபித்து இனி மேல் ஐரோப்பா தங்கள் விஷயங்களில் தலையிடுவது சரியல்ல வென்பதை உலகிற்குக் காண்பிக்குமேயானால், அப்போது ஐரோப்பாவினுடைய விஞ்ஞான சாஸ்திரம், கலைகள், போர் முறைகள், சர்வாதிகாரத்தன்மை, ராஜதந்திரம் முதலியவைகளைப் பற்றி ஒரு தேசமும் குற்றம் சொல்லவும் முடியாது; இப்போது செய்யப்படுவதுபோல் அவைகள் மனிதசமூகத்திற்கே ஒரு ஆபத்தாக வந்திருப்பதாகச் சொல்வதற்கு இடமிருக்காது.

ஆகவே இதிலிருந்து ஏற்படுவது என்னவென்றால், உலகத்தில் சமாதானமும் சமத்துவமும் ஏற்படவேண்டுமென்றால், ஐரோப்பாவிடமிருந்து இதர தேசங்கள் என்னென்ன அறிந்துகொள்ள வேண்டுமோ அவைகளை அறிந்துகொண்டு அதன்படி நடந்து உலகக்ஷேமத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். நம்முடைய தத்துவஞானங்களும் சமூகச் சட்டங்களும் எவ்வளவோ மேலானவை என்று [illegible]க்கொள்ளலாம். அவைகளில் அழகுசொட்டுவதாகப் பெருமை பாராட்டிக்கொள்ளலாம். என்ன சொன்னாலும் சரி. ஐரோப்பாவிடம்தான் அதிகாரத்தின் சக்தியிருக்கிறதென்பதை நாம் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அந்த ரகசியத்தை நாமும் தெரிந்துகொண்டாலொழிய வேறு எவ்வழியிலும் ஐரோப்பாவை ஜெயிக்கமுடியாது என்பதையும் நாம் உணரவேண்டும். அந்தரங்கமான சக்தியில் கெடுதியான மந்திரம் இருக்கலாம். ஆனால் அந்தக் கெடுதியானது, அதை அறியமுடியாதவர்களுக்குத்தான் கஷ்டமாகத் தோன்றும். இந்தியாவானது தன்னுடைய அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமென்றால், நம் சந்ததியார் சுதந்திர இந்தியாவில் வாழவேண்டுமென்ற விருப்பமிருந்தால், ஐரோப்பாவானது எந்த முறையில் தன் செல்வத்தை விர்த்தி செய்து கொண்டிருக்கிறதோ அதே வழியில் இந்தியாவும் தன் செல்வத்தை உபயோகப்படுத்தவேண்டும். ஐரோப்பா எந்த முறையில் யுத்தம் செய்யக் கற்றுக் கொண்டிருக்கிறதோ அதே முறைகளை இந்தியாவும் கையாள வேண்டும். இதை விட்டுவிட்டு வேறு எந்த விதமான குட்டிக்கரணங்கள் அடித்தாலும் அது வெறும் பகற்கனவாகவே முடியுமென்பது நிச்சயம்! நிச்சயம்!! நிச்சயம்!!!

இனி, மேற்சொன்ன விஷயங்களை வைத்துக்கொண்டே நான் காந்தியின் 'ராமராஜ்யத்'தைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்போகிறேன்.

முதலாவதாக, ஒரு விஷயத்தை முடிவு செய்து கொள்ளவேண்டும். அதாவது திரு. காந்தியவர்கள் இயந்திரத்தில் நம்புவதாகவும், ராணுவம் உபயோகப்படுத்துவதை ஆதரிப்பதாகவும், பணம் சம்பந்தமாக உள்ள ராஜதந்திரங்களை ஏற்றுக்கொள்வதாகவும், பலாத்காரத்தைக் கூட ஆதரிப்பதாகவும், சில நண்பர்கள் சொல்லுகிறார்கள். அதாவது திரு. காந்தி காலவர்த்தமானத்தையும் நமது நிலைமையையும் உத்தேசித்து, வேண்டுமென்றே அஹிம்சா தர்மத்தை ஒரு தந்திரமாகக் கையாளுகிறாரேயொழிய அவருக்கு அதில் முழுநம்பிக்கை இல்லையென்றும், ராணுவத்தைப் போலவே தானும் ஒரு படையைச்சேகரித்து யுத்தம் செய்யாமலிருப்பதன் காரணம், அவ்விதம் செய்தால் ஜெயம் பெற முடியாதென்று அவர் உணர்ந்திருப்பதால் தான் என்றும் சொல்லப்படுகிறது. இது ஒரு முழுப்புரட்டு என்றே நான் தைரியமாகச் சொல்லுவேன். ஏனெனில் எனக்கும் திரு. காந்தியிடம் சிறிதாவது நெருங்கிய பழக்கம் உண்டு. நானும் அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரனாகச் சிறிது காலம் இருந்திருக்கிறேன் என்பதையும் வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் அவரோடு பழகியமட்டில் அவர் அன்பும் அஹிம்சையும் ஒன்று என்றே நினைத்திருப்பதோடு இவையிரண்டால் தான் மனித சமூகம் ஜெயமடைய முடியுமென்றும் பூர்ணமாய் நம்பிக் கொண்டிருக்கிறார் என்பதை உங்களுக்கு உறுதியாய்க் கூறுகிறேன். அவர் அஹிம்சையே உண்மை என்றும் நம்பியிருக்கிறார். ஆனால் உண்மை எதுவென்றால், மனித வாழ்க்கையானது பலாத்காரத்திற்கும் அன்பிற்கும் மத்தியிலும், இரக்கத்திற்கும், அழிவுக்கும் மத்தியிலும் ஒரு ஆபத்தான இடத்தில்கட்டப்பட்டிருக்கிறதென்பதே ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையும், பிற ஜீவன்களுக்கு இம்சையோ, ஆபத்தோ விளைத்துத்தான் நடைபெறவேண்டிய நிலையில் அமைந்திருக்கிறதென்பதையும் கூர்ந்து சிப்போர் அறியக்கூடும்.

திரு. காந்தியவர்கள் உண்மையையும், அஹிம்சையையும் தனது சுவாசமாகவேக்கொண்டிருக்கிறார்என்பது எனக்குத் தெரியும். இதை இல்லை என்று சொல்பவர்கள் அவரை அயோ

[தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க]

காங்கிரஸ் பொது என்பது எப்படி முடியும்? சமதர்மக்கொள்கையை ஆதரிப்பவர் காங்கிரசில் இருக்க முடியுமா?

(உடுமலை கனகராஜன்)

அன்பர்களே! அன்பர்களே!!

நான் கீழே எழுதும் விஷயங்களை ஆழ்ந்து ஆராயுங்கள். அதில் குற்றமிருப்பின், அதை எடுத்துச் சொல்லி என்னை நேரான வழியில் திருத்தும்படி செய்யுங்கள். இல்லையேல் நீங்களாவது திருப்தியடைந்து உங்கள் கொள்கைகளை தகுந்தபடி மாற்றிக்கொள்ளுங்கள். "சுயமரியாதையும் வேண்டும், காங்கிரசும் வேண்டும், நானும் சுயமரியாதைக் காரன், ஆனால், காங்கிரசையும் ஆதரிக்கிறேன்" என்று சொல்லுவது நியாயமா? அதில் அர்த்தமிருக்கிறதா? இவ்விரண்டு கொள்கைகளும், ஒரே சமயத்தில், ஒரு மனிதனால் கையாளக்கூடியதா? என்று தனியே ஓரிடத்திலிருந்து யோசித்துப்பாருங்கள்.

சுயமரியாதைக் கட்சி, ஏழைகள் கட்சி, ஒடுக்கப்பட்டவர்கள் கட்சி, சமத்துவக் கட்சி, என்பது யாவரும் அறிந்ததே.

சுயமரியாதைக் கட்சிக்கு விரோதமாகவுள்ளது, ஜாதி, மதம், குருக்கள், குருக்களால் கற்பிக்கப்பட்ட கடவுள், அக்கடவுளைக் காப்பாற்றும் வேதம், புராணம் முதலியனவாகும். அதில், 'கடவுள் செயல்' என்ற எண்ணமே, ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள் பேரில் மேல் ஜாதிக்காரர்கள் முதலாளிகள், இராஜாக்கள் என்பவர்கள் செலுத்தும் ஆதிக்கத்திற்கு உபபலமாயிருப்பதால், அதை ஒழிப்பதே நமது முதற்கடமை யாகும்.

ஆகையினால், நாம், மேற்சொல்லியவைகளிடத்தில் மக்கள் கொண்டுள்ள மோகத்தை தணிக்கும் பொருட்டு, அதற்கு வேண்டிய பிரசாரங்களை செய்து வருகிறோம். ஒரு முறையை அல்லது கொள்கையை நிலைநாட்டவேண்டுமானால், முதலில் அதைப் பிரசாரம் செய்து, தகுந்த ஆதரவு கிடைத்த உடன் அதை செயலில் கொண்டுவரவேண்டும். அதுதான் முறை. அதுதான் ஒவ்வொரு இயக்கங்களின் தத்துவம்—ஒவ்வொரு இயக்கங்களின் இயல்பு. இது இவ்வாறிருக்க, சிலர் நம்மைப்பார்த்து "காங்கிரசை என் குறை கூறுகின்றீர்கள்? நீங்கள் செய்யுங்கள், என், நீங்கள் செய்யுங்களே" என்று சொல்லுவது வியப்பைத்தருகின்றது. நம் கொள்கைகளுக்கு பிரசாரத்தின் மூலம், ஆதரவு இன்னும் வேண்டிய அளவு கிடைக்கவில்லை. இன்னும் மக்கள் இதனுடைய உண்மைத் தத்துவத்தை அறியாமலிருப்பது மன்றி, அநேகர் பொதுமக்களிடத்தில் விஷமப்பிரசாரம் செய்து துவேஷத்தையும் உண்டுபண்ணிவைத்திருக்கிறார்கள். அப்படியிருக்க "நீங்கள் செய்யுங்களே" என்று சொல்லுவதில் அர்த்தமிருக்கிறதா? இப்பொழுது காங்கிரஸுக்குள்ள செல்வாக்கு மாதிரி, நம் இயக்கத்திற்கு இருக்குமாயின், சுயராஜியத்திற்கு இவ்வளவு சமாதானமா? இவ்வளவு வட்ட மேஜை மகாநாடுகளா? ஒருவர் சுயராஜியம் கொடுத்து ஒருவர் அதை வாங்குவதா? ஒரே நிமிஷத்தில் 'சுயமரியாதை இந்தியாவில்தான் வாழ்வோம்,'' என்று உறுதியாக ஞாபகத்தில் வைத்துக்கொண்டு எழுந்தால் நாம் அடையமுடியாதா? என்று கேட்கின்றேன்.

நான் நமது லட்சியத்திற்கு, ஜாதி, மதம், கடவுள் செயல், முதலியவைகள் விரோதமுள்ளவைகள் என்று சொன்னேன். அவைகள் மனிதனை, மனிதன் அடிமைபடுத்த ஏதுவாயிருக்கிறது என்று சொன்னேன். அதற்குச் சாட்சியம் என்னவென்றால், வெளிதேசத்தில் இம்மாதிரி சமதர்மக் கொள்கைகள் தலை தூக்குமிடங்களிலெல்லாம், கோவில்கள் இடிபடுவதும், மதங்கள் விரட்டியடிக்கப்படுவதுமே யாகும்.

இது இவ்வாறு இருக்க, காங்கிரஸ் கொள்கை என்ன? காங்கிரஸ் சர்வாதிகாரியார்? காங்கிரஸ் முடி சூடா மன்னர் யார்? அவருடைய கொள்கை என்ன? என்று பார்க்கும் பொழுது அது நம் கொள்கைக்கு ஏறுமாறாக இருக்கின்றது. நாம் எது கூடாது என்கிறோமோ, அது தான் அவர் வேண்டும் என்கிறார். நாம் 'கடவுள் செயல்' என்பதை அறவே ஒழிக்க வேண்டுமென்கிறோம். அவர் 'கடவுள் செயல்' தான் பிரதானம் என்கிறார். நாம் இராமராஜியத்தையும், வர்ணாச்சிரம தர்ம இராஜியத்தையும், பார்ப்பன இராஜியமென்கிறோம். அவர் "அதுதான் விசேஷமான ராஜியம். அது தான் என்னுடைய சுயராஜ்யம்" என்கிறார். நாம், வருணாச்சிரம தர்மந்தான், ஜாதிக் கொடுமைக்குக் காரணம், இந்தியா அடிமையானதிற்குக் காரணம் என்கிறோம். அவர் "வர்ணாச்சிரம தர்மம் தான் வேண்டும். அதுதான் இந்தியாவின் விடுதலை" என்கிறார்.

இப்படி எடுத்ததற்கெல்லாம் கடவுள் பிரார்த்தனை ராம பஜனை, ராமத்தியானம், ராம ராஜியம், கடவுள் சித்தம், தலைவிதி, வர்ணாச்சிரம தர்மம், என்று நமது விடுதலைக்கு நேர் விரோதமானவைகளை பிரசாரம் செய்து கொண்டிருக்கும், காந்திஜியாரை, சர்வாதிகாரியாய் நியமித்துள்ள ஒரு ஸ்தாபனத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா? அதை எதிர்க்காமலிருக்கமுடியுமா? அவர் கொள்கைக்கு, முரண்பாடாயுள்ள, நமது கொள்கைகள், அவர் இயக்கத்திற்கு முட்டுக்கட்டையாயில்லாமலிருக்க முடியுமா? காந்திஜீயின் கொள்கையை அஸ்திபாரமாகக் கொண்ட சுயராஜியம், [நமக்கு] [சுயமரியாதைக்கு] தாழ்த்தப்பட்ட வர்களுக்கும், பெண்களுக்கும், எமராஜியமாயில்லாமலிருக்க முடியுமா?

காரியம் இம்மாதிரியிருக்க, 'நீங்கள் காங்கிரசை தாக்காதீர்கள், அது தேசத் துரோகம்' என்று பயமுறுத்தினால் நியாயமா? நமது கொள்கை சமத்துவத்தை அடிப்படையாகக்கொண்டது, நாம் அதைப் பின்பற்றித்தான் செல்வோம். அப்பாதையில், சமத்துவப்பாதையில், மகாத்மாவோ தேசியமோ, கடவுளோ; மதமோ, எதுவாகிலும் குறுக்கிடுமாகில் நாம் அதை விலக்கிவிட்டு அப்பால் செல்லுவோம். சமத்துவத்திற்கு விரோதமாக, எந்த சமூகமோ, தேசியமோ, மகாத்மாவோ, கடவுளோ இருப்பின், அவைகளைத் தாக்கித்தான் பேசுவோம். அதனால், சமத்துவத்திற்கு விரோதமாக வுள்ளவைகளைத் தாக்குவதினால், எந்த நாஸ்திக, தேசத் துரோகப்பட்டம் வந்தாலும், இன்னும் எதாவது வந்தாலும், அவைகளை வரவேற்கிறோம்.

"காங்கிரஸ் எல்லோருக்கும் பொது" வென்று சொல்வதைக் கேட்டால் நகைப்புண்டாகிறது. முதலில் கடவுள் விஷயத்தை எடுத்துக்கொள்வோம். காங்கிரஸ் சம்பந்தப்பட்ட மீட்டிங்குகளில், கடவுளைப்பற்றி உண்டு, அல்லது, இல்லை, அல்லது அது இருந்தால் இருந்து கொண்டுபோகட்டும், என்று இதில் எதாவது ஒரு மாதிரி பேசுவோமாகில், அது சிலருக்கு திருப்தியையும் சிலருக்கு அதிருப்தியையும் கொடுத்தே தீரும். அல்லது அது பற்றி பேசாவிட்டாலும், ஒரு சாராருக்கு சந்தோஷமாக விருக்காது. சிலர், "கடவுள் வணக்கம் செய்யாத கூட்டத்திற்கு இனி வரக்கூடாது" என்று நினைப்பார்கள். ஆகையால் எப்படி ஒரு ஸ்தாபனம் எல்லோருக்கும் பொதுவாக இருக்கமுடியும்? அங்கு கடவுளைப்பற்றிப் பேசுவார்களாகில், கடவுள் நம்பிக்கை மக்களுக்கு விஷம் போன்றது என்ற கொள்கையை யுடைய கூட்டத்தார் அந்த ஸ்தாபனத்தைத் திரும்பியுங்கூட பார்க்காமலிருப்பது மன்றி, அதை பகிஷ்கரிப்பார்கள். காங்கிரஸ் தலைவர்கள் முதல் காங்கிரஸ் அங்கத்தினர்கள்வரை, யாராகிலும், காங்கிரஸ் சம்பந்தப்பட்ட இடங்களில், ராமராஜியத்தையோ, வர்ணாச்சிரம தர்மத்தையோ, கடவுளையோ, அல்லது, தீண்டாமை வேண்டும், வேண்டாது என்று சொல்லுவதானால், இந்தியர்களில், ஒரு பகுதியோரையாவது பாதித்தேதீரும். அப்படியிருக்க காங்கிரஸ் இந்தியர்கள் எல்லோருக்கும் பொது எப்படியாகும்?

வருணாச்சிரமதர்மம் வேண்டுமென்றால் ஒரு சாராரை பாதிக்கின்றது. வேண்டாமென்றால் மற்றொரு சாராரை பாதிக்கின்றது. ஆகையால் "காங்கிரஸ் எல்லோருக்கும் பொது" என்று சொல்லுவது களங்கமற்ற வார்த்தையாகாது. காங்கிரஸ் பொது என்பதில் தான் புரட்டு இருக்கிறது. பணக்காரனுக்கும், ஏழைக்கும் பொது, பார்ப்பனனுக்கும் பறையனுக்கும் பொது என்பது எவ்வாறு முடியும்? பணக்காரனுடைய போக போக்கியங்களை பாதிக்காத திட்டத்தில் ஏழைகளுக்கு எதாவது நன்மையிருக்க முடியுமா? ஏழைகளின் உயர்வை நோக்கமாகக்கொண்ட திட்டம், பணக்காரனை பாதிக்காமலிருக்கமுடியுமா? காங்கிரஸ் பொது, காங்கிரஸ் எல்லோருக்கும் பொது என்ற மந்திரத்தை ஜெபித்து எல்லோருடைய ஆதரவையும், அனுதாபத்தையும், வாழ்த்துகளையும், பெறவேண்டுமென்ற காங்கிரசின் கொள்கையை நினைத்தால் "தடியும் ஒடியக்கூடாது பாம்பும் சாகக்கூடாது" என்ற பழமொழி நினைப்புக்கு வருகிறது. ஒரு சத்தியமான, உண்மையான, சமத்துவமான கொள்கை ஒன்றை வைத்துக்கொண்டு ஒரு ஸ்தாபனம் வேலை செய்யாமல் ஒவ்வொருவரைக்கண்டால், ஒவ்வொரு பேச்சு பேசுவது, ஆபத்தை உண்டு பண்ணக் கூடியதாயிருக்கின்றது. நிலச்சுவான்தாரர்களைக்கண்டால் 'உங்கள் உரிமைகளை பாதிக்க கனவிலும் கருதவில்லை' என்பதும், 'ஏழைகளுக்குத்தான் சுயராஜியம்'' என்று மற்றொரு பக்கம் சொல்லுவதும், புரட்டா? அல்லவா? இம்மாதிரி சொல்லிக்கொண்டு "நாங்கள் சமத்துவத்திற்குப்பாடுபடுகிறவர்கள்" என்று சொல்லுவதில் பித்தலாட்டமில்லாமல் இருக்க முடியுமா?

சத்தியமாக நெஞ்சின்மீது கைவைத்துச்சொல்லுங்கள். அப்படியும், இப்படியும் தத்து வார்த்தம் செய்யாதீர்கள். மழுப்பாதீர்கள். நியாயபுத்தியோடுசொல்லுங்கள். எந்தக்கட்சியாயிருந்தாலென்ன? ராமனுண்டாலென்ன? ராவணனுண்டாலென்ன? உண்மைதான் வேண்டுவது, சமத்துவம்தான் வேண்டுவது, எல்லோருக்கும் சம சௌகரியந்தான் வேண்டுவது, சம அந்தஸ்துதான் வேண்டுவது, திரு ராமசாமி சொன்னாலென்ன, திரு காந்தி சொன்னாலென்ன நியாய மல்லாதவைகளை உதரித்தள்ள வேண்டியது தான்.

தீண்டாமை ஒழிய வேண்டுமாம்! வருணாச்சிரம தர்மமும் இருந்து தானாக வேண்டுமாம்! முதலாளிகளுடைய நிலச்சுவான்தாரர்களுடைய போக

தொடர்ச்சி 21ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஹிந்தியும் காந்தியும்.

தமிழ்ப்பண்டிதர்களே! இன்னுந் தூக்கமா?

(திரு. அ. இராகவன்)

செந்தமிழ் நாட்டு சிரியமக்களுக்குச் சில்லாண்டுகளுக்கு முன்னர் "ஹிந்தி" யென்றால் இன்னதெனத் தெரியவராது. உயர்திரு. காந்தியவர்கள் அரசியலில் புகுந்து தனது செல்வாக்கை யுயர்த்திக்கொள்ள முதலாவதாக பார்ப்பனர்களின் தயவைநாடி, பார்ப்பனர்களுக்கு அரணும் ஆயுதமும்போன்ற இந்துமதத்தையும் ஸ்மார்த்த மறைகளையும் போற்றி, பார்ப்பன பாஷையாகிய சமஸ்கிருதத்தை உயிர்ப்பிக்க நாடி அதில் பயன்பெற முடியாதென்று காணவே அதன் பிள்ளையாகிய "ஹிந்தியை" ஆதரிக்க முனைந்து, வெள்ளைக்காரர்கள்மேல் வெறுப்புக்கொண்ட நம்மக்களிடம் "ஆங்கிலம் படிப்பது அடிமைப்புத்தியை வளர்க்கின்றது, எனவே ஆங்கில கல்லூரிகளை பகிஷ்கரியுங்கள். நம்நாட்டு ஹிந்தி மொழியைப் பயிலுங்கள், ஹிந்திபாஷை நம்நாட்டில் மூன்றில் இரண்டு பாகத்தில் பரவியிருக்கிறது; அதுவே நம்நாட்டுப்பொதுபாஷை யாவதற்கு முற்ற தகுதியுடைய" தென்றுகூறிய பின்னர் தான் "ஹிந்தி" என ஒரு பாஷையுண்டென்று நம்மில் பலரறிந்தனர். "தீண்டாமையை ஒழித்துவிடவேண்டும், இன்றேல் நாம் சுயராஜியம் பெறலரிது" என்று கூறிய பொழுதும், தாழ்த்தப்பட்ட மக்களென்போர்களை பல்லாயிரக்கணக்கான வருடங்களாய் இந்நாட்டு பார்ப்பனர்களும் அவர்கள் வால்பிடித்து நிற்கும் பார்ப்பனரல்லாத மக்களிற் பலரும் கொடிய ஹிம்சைகள் புரிந்தும் கோயிலினுள் வரவொட்டாது தடுத்தும் வந்திருக்க, திரு காந்தியவர்கள் அதைப்பற்றி ஒன்றும் பேசாதிருந்துவிட்டு தன்னை, ஆலயத்தினுள் விடமறுத்தபின்னே "வேசிகளின்வீடுகளில் கடவுள் வீற்றிருந்தாலும் வீற்றிருப்பர்; கோயில்களில் கடவுள் ஒரு பொழுதும் வசியார்" என்று (காந்தி) ஆத்திரப்பட்டு மொழிந்த வார்த்தைகளைக் கேட்டு அவரைப் தம்வாய் கொண்டமட்டும் திட்டிய வைதீகப்பார்ப்பனர்களெல்லாம் காந்தி பார்ப்பனீயத்தையும் வடமொழியின் பிள்ளையாகிய ஹிந்தியையும் ஆதரித்து அதன் மூலம் பார்ப்பனரல்லாத மக்கள் சுயமரியாதையைப் பறித்துவிட்டதோடு பார்ப்பனரல்லாத மக்கள் ஆங்கிலம் படித்து பார்ப்பனரோடு உத்தியோகத்தில் போட்டிபோடாமல் தடுக்க ஆங்கிலம் படித்தல் கூடாதென்று கூறி சமஸ்கிருத சாயலிலுள்ள தேவநாகரலிபியைக்கொண்ட ஹிந்தியைப் பொதுப்பாஷையாக்கி பார்ப்பனரல்லாத தமிழ் மக்கள் படிப்பதற்கு மிகக் கஷ்டமான அப்பாஷையால் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தைத் தடுத்துவிட வேண்டுமென்றும் ஹிந்திப் பிரசாரத்தின் மூலமாய் பல பார்ப்பனர்களுக்கு வயிற்றுப்பிழைப்பும் நடக்கவே, காந்தியை மகாத்மா எனப் போற்றினர். விஷ்ணுவின் அவதாரமெனப் பாத நமஸ்காரம் புரிந்தனர். தேவர்கள் வந்து பேசிப்போகின்றனர் என்று நாடெங்கும் பொய்ப்பிரசாரம் பண்ணினர். விஷ்ணுபோன்று பாம்பின் மேல் பள்ளிகொண்டிருக்க பக்கத்தே அவர் மனைவி கஸ்தூரிபாய் காந்தி "லக்ஷிமி" போன்று வீற்றிருப்பது போன்றும், வெள்ளைக்காரன் ராக்ஷதனைப்போன்று நிற்கவும் காந்தி விஷ்ணுபோன்று இராட்டினத்தை (சக்கராயுதத்தை) கையிலேந்தி சம்ஹாரஞ் செய்யவந்து நிற்பது போன்றும் படம்போட்டு நாடெங்கும் பரப்பினர். காந்திபடத்தை தேரில் வைத்து இழுத்தனர், சப்பரத்தில் வைத்துப் பல மக்கள் தூக்கி தெருவெங்கும் சுற்ற பலமக்கள் தேங்காய்பழம் சூடம் சாம்பிராணி முதலியவைகள் கொடுத்து தூப, தீப ஆராதனை செய்து வணங்கச் செய்ததோடு இவைகளையெல்லாம் பார்ப்பனப் பத்திரிகைகளெல்லாம் வானமளாவ புகழ்ந்ததுடன் காந்திக்குப் பெரும் பேற்றை யுமுண்டாக்கி விட்டது. காந்தியை ஒரு மடாதிபதியாயும் (சங்கராச்சாரியாய்) ஆக்கி அவர் மடத்தை இக்காலத்திலில்லாவிட்டாலும் பிற்காலத்திலாவது பார்ப்பனச்சோம்பேரிகளுக்கு ப்புகலிடமாயிருக்கும்படி செய்துவிட்டார்கள் என்பது சமரச நோக்கமுடைய பலரும் அறிவர்.

மேலும் "ஹிந்தி" சமஸ்கிருதத்தின் பிள்ளையெனக்கூறவும், அஃது பார்ப்பனீயத்தை ஸ்திரமாய் ஸ்தாபிக்கவும் செய்யும் சூழ்ச்சியேயாம் என்பதற்கு "ஹிந்தி முதற்பாட புத்தகத்தில்" முகவுரையில் 5-ம் பக்கத்தில் "நம்முடைய தாய்ப்பாஷைகளுக்குத் தாயாகிய ஸமஸ்கிருதத்தின் மேல் அபிமானம் யாருக்குண்டோ அவர்கள் அவசியமாய் [ஹிந்தியையும்] அதையும் கற்றுக்கொள்வார்" என்று கூறப்பட்டிருக்கிறது. (இந்நூல் சென்னை ஹிந்தி சாஹித்ய சம்மேளன் பிரசார காரியத்தாரால் வெளியிடப்பட்டது) இந்தியாவிலுள்ளவர்களில் மூன்றில் இரண்டு பாகத்தினர் "ஹிந்தி" பேசிவருகின்றனர் என்று கூறுவது முற்றிலும் புரட்டேயாகும். இந்தியாவிலே தமிழ், தெலுங்கு, கன்னடம், துளுவம், மலையாளம், சிம்ஹளம், மராட்டி, குஜராத்தி, சௌராஷ்டிரம், பஞ்சாபி, வங்காளி, உரியா; பார்ஸி, ஹிந்தி, ஹிந்துஸ்தானி, அரபி, ஆங்கிலம், பிரஞ்சு முதலிய 229 பாஷைகள் பேசப்பட்டு வருவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அதில் ஹிந்துஸ்தானிமாத்திரம் பேசுவோர் 18 கோடி யென்று கணக்கிடப்பட்டிருக்கிறதென்றால் 2|3 ஹிந்தி பேசுகிறார்கள் என்று கூறுவது எத்தனை புரட்டு என்பது விளங்கும். அது உண்மையாயிருந்தாலும் ஒரு மொழியை அதிகப்பேர் பேசுகின்றார்களென்பதற்காக அதைப்பொது மொழியாக்கிவிடலாமா? அதன்இலக்கண, இலக்கியத்தன்மைகளையும் அதிலடங்கிய இதரநூல்களின் பெருமையையும் நாம் ஆராயவேண்டாமா? இன்று ஆங்கிலத்தை பொதுமொழியாக்கிக் கொள்ளுவதற்காக இருக்கும் வசதிகள் ஹிந்தியிலுண்டா? உலகத்திலேயே பெரும்பாலோர் பேசுவது ஆங்கிலமன்றோ? ஒருபாஷை மனிதனுக்கு எவ்வாறு அடிமைப்புத்தியை யுண்டாக்கும்? இன்று ஆங்கிலம் படித்தவர்களே சுதந்திர புருஷர்களாய் விளங்குகின்றனர். காந்தியும், நேருவும், இதர பார்ப்பன தலைவர்களும் ஆங்கிலம் பயிலாவிட்டால் அவர்களுக்கு சுதந்தர உணர்ச்சி தோன்றியிருக்குமா? நம்நாட்டில் ஆங்கிலப்படிப்பில்லாதவர்கள் எத்தனைபேர் சுதந்தர நினைவுடனிருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்தால் உண்மைவிளங்கும். ஹிந்தியில் விஞ்ஞான சாஸ்திரங்களோ, அரசியல் நூல்களோ, சுதந்தர உணர்ச்சியை யூட்டும் நூல்களோ உண்டா? லிங்கபுராணம், கூர்மபுராணம், வராஹபுராணம், பத்மபுராணம், மஹாபாரதம், இராமாயணம், தேவி பாகவதம், ஸ்காந்தம் முதலிய புராணங்களைத்தவிர வேறு எந்தமேலான நூற்கள் ஹிந்தியிலுண்டு? மேலும் எல்லாவற்றிற்கும் மெஜாரட்டியைக் கவனிக்கலாமா? உலகிலே பெரும்பாலார் குடியர்களாயிருந்தால் குடியை ஆதரித்து எல்லோரும் குடிக்கவேண்டுமென்று கூறல் நீதியாகுமா? மெஜாரட்டியார் கொள்கையாயிருந்தாலும் மைனாரட்டியார் கொள்கையாயிருந்தாலும் அக்கொள்கையின் தன்மையையன்றோ ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். ஹிந்திப்பிரசாரத்தால் பார்ப்பனீயத்தை நிலைநாட்ட முயற்சித்தால் சுயமரியாதையுடைய எந்த மனிதனும் பார்த்துக்கொண்டிருக்கலாமா? இதுபற்றியே சென்னையினின்று வெளிவரும் ஒரு அரிய வாரவெளியீட்டின் ஆசிரியர் குறிப்பில் "இந்தியாவில் நடப்பதென்ன? பார்ப்பனர்கள் தங்கள் பழைய பல்லவியைபாட ஆரம்பித்துவிட்டார்கள். ஹிந்திசழகத்தினரை ஏமாற்றி அவர்கள் தலைமீதமர்ந்தாகிவிட்டது. இனி இதர சழகத்தினரையும் வசப்படுத்த வழி

தொடர்ச்சி 19ம் பக்கம் பார்க்க.



கோட்டாறு சுயமரியாதை வாசிப்புசாலையின் ஆண்டுவிழாவன்று எடுக்கப்பட்டது.

நடுவரிசையில் உட்கார்ந்திருப்பவர்கள்:-திருவாளர்கள் P. முத்தையா, பூ. திரவியம், திருவண்ணாமலை, V. V. இராமசாமி, W. P. A. சௌந்திரபாண்டியன் M. L. C. (விழாத்தலைவர்) ஈ. வெ. இராமசாமி, K. V. அழகர்சாமி, அ. பொன்னம்பலனார், சுலோச்சனா.

யாருமற்ற 'பாவி!'

[உ. க.]

இந்து மதத்தாலே நிர்ணயிக்கப்பட்ட எண்ணிறந்த வகுப்புகளிலே பஞ்சமவகுப்பு மொன்று. கடைசி எண்ணிக்கையைச் சார்ந்த அப்பஞ்சம வகுப்பிலே யான் பிறந்த காரணத்தாலே ஊருக்குப்புறம்பாயுள்ள தனியிடமே என் வாசஸ்தலமாய் விளங்கியது. மற்றவர்கள் தங்கள் வீட்டைப் பிரித்து மேயும்போது அவர்களுக்கு உதவாது என்று கழித்துக் குப்பையில் தள்ளிய தென்னந் தடுக்குகளாலேயும், பனை ஓலைகளாலேயுமே மேய்ந்து சூரியனும், சந்திரனும் விளையாடும்படி அமைந்ததே என் வீடு. சப்பாத்துப் புதரே என் இல்லத்தின் வெளிமதில். அப்புதரிலே வாசஞ்செய்யும் கொடிய சர்ப்பங்களே நான் அனுதினமும் பழகி வரும் நண்பர்கள். ஓட்டைத்தகரக்குவளை ஒடிந்த பீங்கான் தட்டு, மேல்பாகம் போன மண் சட்டி, முதலிய "விலையுயர்ந்த" பொருள்களே என் வீட்டில் நிறம்பிய சாமான்கள். கோவண மொன்றே எனது ஆடை. அழுக்கடைந்த மேனியே எனது ஆபரணம். சுடுகாட்டிலும், இடுகாட்டிலும் வரும் பிணங்களுக்குப் மூடி வந்த துணியில் ஒரு முளமும், அதன் வாயில் கொட்டிய அரிசியில் ஒரு பிடி அரிசியுமே எனது மிராசு வரும்படி. "பஞ்சமன்" "சண்டாளன்," தோட்டி "தீண்டப்படாதான்," "தாழ்ந்த வகுப்பான்," "இழிகுலத்தான்" முதலிய வாக்கியங்களே எனக்குச் சூட்டும் பட்டங்களாகும்.

என்னைப்போன்ற ஏனைய மனிதவர்க்கத்தைக் காணின் அவர்கள் கண்ணெதிரே படாமல் மறைவதும் அவர்களது திக்கு நோக்கிச் 'சாமீ' என்று கூப்பாடு போட்டுத் தெண்டனிடுவதும், நான் ஜன சமூகத்தில் பழகும் முறையாகும். "மகத்தான பாவத்தைப் பூர்வஜன்மத்தில் செய்ததால், இச்சன்மத்திலே இந்தியா தேசத்திலேயுள்ள சனசமூகத்தால் வெறுக்கப்பட்டு யாவராலும் இழித்துரைக்கும் ஜீவனாய் விளங்குகிறேன். 'கடவுள் ஆக்கினை இதுவேயாகும்'' என்னும் மந்திரத்தைச் சதா மனதிருத்தித்திருப்தி அடைந்து கொள்வதே நான் பெற்ற பாக்கியமாகும். எழுத்து வாசனையை நான் அறிய முற்படுவதோ, சாஸ்திர புராணங்களிலேயுள்ள அற்பவார்த்தையும் என் காதில் விழக்கூடிய சந்தர்ப்பத்தையுண்டாக்கிக் கொள்வதோ, உயர்குல பிராமண மேதாவிகள் கண்ணெதிரே நான் தோன்றுவதோ, பிறதி ஜீவ சகல ஜீம்சங்களிலேயும் எனக்குச்சமானமாய் விளங்கும் மற்ற மனிதர்கள் என்னைத்தீண்டும்படி நான் அணுகி நிற்பதோ, சகலருக்கும் பொதுவான இவ்வுலக சுகத்திலே எனக்குரிய பங்கை நான் எடுத்துக்கொள்ள உரிமை கேட்பதோ ஆகிய இவைகளில் நான் எக்"குற்றத்தை"ப் புரியினும் இம்மையில் எனக்கு அடியும் உதையும் கிடைப்பதுடன், "மறுமையில் எனது பாவங்கள் பன்மடங்கு பெருகி ரௌரவாதி நரகத்திற்குச் சென்று, அடுத்த சன்மத்தில் மனித தேகமேயாக முடியாமல் அற்ப ஜந்துவாகப் பிறந்து அல்லலுறுவேன்'' என்பதே அனுபவத்திலும் சாஸ்திர வேதங்களிலுமுள்ள உண்மையென்று எனது சகோதரர்கள் எனக்கெடுத்துக்காண்பிக்கும் நீதியாகும். இந்நிலையிலேயேதான் எனது முன்னோர்களும். நானும் எனது சாதிகளும் நிரந்தரமாய் வீற்றிருக்கக் கடமைப்பட்டவர்கள் என்பதை வலியுறுத்தி இப்பாதாளலயிலேயே நாங்கள் என்றென்றும் கிடந்துழல இந்துமதம் அரும்பாடுபட்டு நிற்கின்றது. உதைக்கும் காலை நாங்கள் எங்கள் இரு கை கொண்டு தெண்டனிட்டு வணங்கி, எங்களை துன்புறுத்திய காலுக்கு இன்பமூட்டுவதே எங்கள் குலத்தவரின் கடமையாய்ப் போய் விட்டமையால், ஏராளமான கொடுமைகளை எங்கள் மீது சுமத்தி, அட்டூழியக்கொடுரங்களுக்கு நாங்கள் பாத்திரராகும்படி செய்து கொண்டிருக்கும் பெருமைவாய்ந்த இந்து மதத்தை, எங்கள்பழைய குருட்டு அபிமானத்தினால் நாங்கள் குரங்குப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு இன்னும் அதனையே பூஜித்து வருகிறோம். இந்துமதத்தை அறவேவெறுத்துத்தள்ளி அதனிடத்தே அபரிமிதமான துவேஷத்தைக்கொண்டு அம்மதத்தையே விட்டு விலகி அன்னியாது மதமான மகமதிய மதத்தைத் தழுவி நிற்கும் எங்கள் குலத்தவரிலே பலர், மேன்மை பெற்று, இந்துமதத்திலே பிறந்த மேலான ஜாதியாராலேயே பூஜிக்கப்பட்டும் வருகின்றனர். நாங்களோ "எங்கள் பழைய மதமான இந்துமத அபிமானம்" எங்களை விட்டுநீங்காமையால் இந்துமதத்திலேயே கிடந்துழன்று, மனித வர்க்கத்தாரால் புறக்கணிக்கப்பட்டு, விடுதலையடைய வழியின்றி, மீட்சி பெற மதமாற்றும் தொழிலையும் அடைய மனமில்லாமல் இருதலைக்கொள்ளி எறும்பாய் உழன்று வருகிறோம். எங்கள் பரிதாபக்கோலத்தைக்காணச்சகியாமல், எங்களைக் கரையேற்றி உய்விக்க முயற்சிக்கும் தியாக மூர்த்திகளை "கோடரிக் காம்புகள்'' என்றும் "மதத் துரோகிகள்'' என்றும் சொல்வதாகவலிமைபொருந்திய வஜ்ராயுதத்தைப் பிரயோகித்து அப்பரோபகார மூர்த்திகளது நெஞ்சம் பிளவுபடும்படிச் செய்கின்றனர். மதம்மாறும தன்மையாகிய இந்த அற்ப காரியத்தைச் செய்துகூட மனிதத்தன்மை அடைய தைரியமற்றக் கோழைகளாயிருக்கும் நாங்கள் சத்தியாகிரகத்தாலோ, பலாத்காரத்தாலோ எங்களையே விடுவித்துக் கொள்வதென்றால் அது நினைக்கவாவது சாத்தியமான காரியமா? எங்களுக்கு ஜன்ம விரோதியாயிருக்கும் மதமும், அம்மதத்தின் பேரால் எங்கள் தலையிலே காலை வைத்தமுக்கிக்கொண்டு நிற்கும் மத பக்தர்களும் என்று மறைந்து பூண்டற்றுப்போகின்றார்களோ அன்றன்றே நாங்கள் விடுதலை இன்பம் அடையுங்காலம்! எங்களை அநேகவருஷங்களாக கொடுந்துன்பத்திற்காளாக்கி, நடைப்பிணங்களாகப்பாவித்து, ஜாதிகர்வத்தால் எங்களை அடக்கி ஆண்டு, ஜாதி என்னும் ஒரு காரணத்தைக்கொண்டே உலக சுகபோகத்தை எல்லாம் தாமே அனுபவித்துக்கொண்டுவரும் சுயநலமிகளான இத்தேசத்துரோகிகளை எந்த ராணுவம் ஒழித்து, அத்தன்னலமிகளின் ஆதிக்கத்தை அறவே மறையச் செய்கிறதோ, அந்த ராணுவத்திமிர் கொண்ட சுயராஜ்யமே நாங்கள் விரும்பும் அரசு! "நாங்களும் மனிதர்கள் தான்'' என்று வெளி உலகுக்கு அறிவித்து, காரியத்திலே எங்களுக்கு சமபங்கு உரிமை அளித்து எங்களது வம்சபாரம்பரையான அடிமை இரத்தத்தை சமத்துவ உணர்ச்சியின்பம் அனுபவிக்கும் இரத்தமாய் மாற்றி வீரக்களையோடு நாங்கள் உலாவும்படி எந்த சுயராஜ்யம் செய்கிறதோ, அந்த சுயராஜியமே நாங்கள் போற்றும் அரசாங்கம்! இதுவரை மேலான ஜாதியார் அனுபவித்துவந்த இன்பத்திற்கு பங்கம் வந்தாலும் கவலையின்றி, எங்கள் துன்பங்களைப் போக்குவதிலே பகிரங்கமாக தங்கள் தைரியத்தைச் செலுத்தி உலகம் போற்றுமாறு எங்கள் சமூகக்கட்டுப்பாடுகளை அறுத்தெறிந்து நாங்களும் உலகத்தோடு நாகரீக முன்னணிக்கு நடந்து வருமாறு எந்த அரசாங்கம் செய்கிறதோ அந்த அரசாங்க நீதியே நாங்கள் துதித்திடும் ராஜநீதியாகும்!

வேத சாஸ்திரத்திற்கும் அவற்றின் பழக்க வழக்கங்களுக்கும் பயந்த—அவற்றைக் காப்பாற்றுவதாய் உறுதிகூறுகிற-எங்களது சுதந்திரத்திற்கு அணுவளவாவது தடையான எந்த ராஜ்யமோ, பூரண சுயேச்சையோ வருமானாலும் அவற்றையெல்லாம் எங்களுக்கு ஆபத்தென்றே உதறித்தள்ளுவோம். இனிவரும் கொடுமைகளையும், சுயநலத்தோடு கலந்த சூழ்ச்சியின் அட்டூழியத்தையும் வேரோடு அழிக்க பகுத்தறிவோடு கலந்து நிற்கும் எங்களது வலிமை பொருந்திய வீரமேதான் எங்களது ஜயத்திற்கு பூர்ண உதவிபுரியும்! எங்கள் முன் ஜாக்கிரதையான வீரத்தின் முன்னே சுயநலமிகளது "சூழ்ச்சி'' "தந்திரம்'' ஆகிய சுயராஜ்யம் என்பது இனி பகல் கனவாகவே முடியும்.

(தொடரும்)

C. விஜயராகவாச்சாரியார்.

எல்லா இந்திய இந்து மகாசபை மகாநாடு ஆகஸ்ட் மாதத்தில் அகோலாவில் சேலம் உயர்திரு சி. விஜயராகவாச்சாரியார் அவர்கள் தலைமையில் கூட ஏற்பாடாயிருக்கின்றது.

மராட்டா பார்ப்பனர்.

பூனாவில் உள்ள பார்ப்பனர்கள் உயர்திரு திலகரைப் போலவே படு வருணாச்சிரம தர்மிகள் என்பதும், அவர்கள் பெரிதும் திரு திலகர் கொள்கைகளைப் பின்பற்றுகின்றவர்கள் என்பதும் யாவரும் அறிந்ததே யாகும்.

உயர்திரு காந்திக்கும், பூனா பார்ப்பனர்களுக்கும் ஒரே ஒரு விஷயத்தில்தான் முக்கியமான அபிப்பிராயபேதம் உண்டு. அது

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தஞ்சை ஜில்லாவில்

சுயமரியாதைப் பிரசாரம்.

ஈ. வெ. இராமசாமி
எஸ். இராமநாதன்
சொ. முருகப்பா
கே. வி. அழகர்சாமி.

"காங்கிரஸ் புரட்டு-காந்தி தவறு."

கார்குடி.

தஞ்சை ஜில்லா சுயமரியாதை பிரசாரத்தை முன்னிட்டும் திருவாளர்கள் கார்குடி ரெ. சின்னைய அவர்கள் குமாரன் திருமணத்திற்கும், மற்றும் சுற்றுப்பிரயாணத்திற்குமாக திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி, எஸ். இராமநாதன், பட்டுக்கோட்டை கே. வி. அழகிரிசாமி, எஸ். வி. லிங்கம், காரைக்குடி சொ. முருகப்பா, ந. வீரப்பா ஆகியவர்கள் 15உ காலை 9 மணிக்கு மாயவரம் ஸ்டேஷனில் வந்திறங்கினார்கள். அங்கு ரயில்மேடையிலேயே தஞ்சைஜில்லா சுயமரியாதைச் சங்கத்தைச்சேர்ந்த திருவாளர்கள் ரயிலடி சின்னையா முதலிய பல வாலிபர்கள் மிக்க குதூகலத்துடன் வரவேற்று திரு எஸ். சம்பந்தம் பிள்ளை அவர்கள் பங்களாவுக்கு அழைத்துச் சென்று சிற்றுண்டி அளித்து நேரே கார் மார்க்கம் கார்குடிக்கு அழைத்துச் சென்றார்கள்; அங்கு கல்யாணவிருந்து நடந்தபின் மருகன் காலையில் கல்யாணக்கொட்டகையில் ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தபடி திரு ஈ. வெ. இராமசாமி அவர்கள் அக்கிராசனம் வகிக்கவேண்டுமாய் திரு கார்குடி ரெ. சின்னையா அவர்களை கேட்டுக்கொண்டதற்கிணங்க திரு இராமசாமி அக்கிராசனத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அதுசமயம் திரு சொ. முருகப்பா அவர்கள் 'கல்யாணம், காதல்' என்னும் விஷயங்களைப் பற்றி புராண சம்பந்தமான கருத்துக்களுக்கும் நடைமுறையில் உள்ள அனுபவங்களுக்கும் உள்ள வித்தியாசங்களை மிக்க பரிகசிக்கத்தக்கதாக எடுத்துச் சொன்னார்.

திரு. அழகர்சாமி அவர்கள் பொருளாதாரக் கஷ்டத்தை எடுத்துச்சொல்லி சமூக கட்டுப்பாடுகளாலும், கடன் கொடுக்கல் வாங்கல் முறைகளாலும், தொழிலாளர் சமூகத்திற்கும் மத்தியதர சமூகத்திற்கும், நாட்டிற்கும் ஏற்படும் கஷ்டங்களை எடுத்துச்சொல்லி கடன் மறுப்புச்சங்கம் என்பதாக ஒன்று ஆரம்பித்து மக்களின் கடன் தொல்லைகளை நிவர்த்தித்து பொதுவாக எல்லோருக்கும் பொருளாதாரக்கஷ்டத்தை ஒழிக்க வேண்டும் என்று பேசினார்.

பிறகு தலைவர் முடிவுரையாக திரு இராமசாமி பேசுகையில் மேல்ஜாதிக்காரன் தொல்லையும், செல்வவான் தொல்லையும், அரசாங்கத்தின் தொல்லையும் பொதுஜனங்களுக்கு ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றதென்றும் இம் மூன்று ஆதிக்கமும் ஒரே அஸ்திவாரத்தின் மீதுதான் கட்டப்பட்டிருக்கின்றதென்றும், மூவருக்கும் புத்திவந்து அவர்கள் தாங்களாகவே சமதர்மத்திற்கு இணங்காத வரையில் கீழ்ஜாதிக்காரன் என்பவனும், ஏழை என்பவனும், குடியானவன் என்பவனும் பலாத்காரத்தில் பிரவேசித்துத்தான் தீரவேண்டியவனாகி விடுவான் என்றும், உலகில் அஹிம்சையைப்பற்றி, யார் எவ்வளவு பேசினாலும் வலிமையுள்ளவன் என்று கருதுகின்றவனுக்கு பலாத்காரமும் வலிவற்றவன் என்று கருதிக்கொள்ளுகின்றவனுக்கு அஹிம்சையும் தான் இயற்கையாக இருந்து வருகின்றதே தவிர, இரண்டும் எல்லோருக்கும் பொது என்று சொல்லிவிட முடியாதென்றும், ஆனதினால் அஹிம்சை தத்துவ ஏமாற்றமும், பலாத்காரத் தத்துவ மிரட்டலும் இனிச் செல்லாது என்றும், ஒவ்வொருவரும் மற்றவர்களை ஏமாற்றுவது கொடுமைப்படுத்துவது என்பதைவிட்டொழிக்க வேண்டும் என்றும், இங்கு நடந்த இந்தக்கல்யாணமானது சுயமரியாதை முறையில் நடத்தப்பட்டதாக சொல்லமுடியாது என்றும், மிக்க ஆடம்பரமாக பிரபுத்தன்மையில் நடைபெற்றிருக்கின்றதென்றும், இதற்கு யார் பொறுப்பாளியானாலும் இதைஎடுத்துச்சொல்லாமலிருக்க முடியவில்லை என்றும், திரு சின்னையா அவர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டியாய் இருக்க வேண்டியவர் என்றும், இனியாவது மற்றவர்கள் தாக்ஷண்யத்திற்குபயப்படாமலும், பிரபுக்கள்கூட்டத்தில் இருக்க ஆசைப்படாமலும், சமதர்மக்கொள்கைக்கு உழைக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும் சொன்னார்.

பிறகு திரு. சின்னையா அவர்கள் சம்பந்தியும், ஜில்லா போர்டு மெம்பரும்தாலூகா போர்டு பிரசிடெண்டாயிருந்தவருமான ராவ்சாயபு திரு இரத்தினம் பிள்ளை அவர்கள் திரு முருகப்பா பிரசங்கத்தைப் போற்றி புகழ்ந்து மற்ற பிரசங்கங்களைப் பற்றி பேசுகையில் சாந்தமாய் இருக்கின்ற கிராம வாசிகளுக்கிடையில் இப்பிரசங்கங்கள் கலவரத்தை உண்டாக்கி விடுமோ என்று அஞ்சவேண்டி இருக்கிறதென்றும், அவர்கள் சொல்லுவது நியாயமாய்த்தான் தோன்றுகின்றதாய் இருந்தாலும், படிப்படியாய்த்தான் எதிர்பார்க்க முடியுமென்றும், மற்றும் பெரியோர்கள் ஏற்படுத்திய திட்டங்களும், முறைகளும் ஜனசமூக நன்மைக்கே ஏற்பட்டதென்றும், திரு. சின்னையா கூடியவரையில் சுயமரியாதை முறையில்தான் கல்

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.)



கோட்டாறு சமதர்ம மண்டபம்.

நடுவரிசையில் உட்கார்ந்திருப்பவர்கள்:-திருவாளர்கள் ஆறுமுகத்தேவர், சி. ஆறுமுகம், வி. சி. பிச்சையா, இ. இராமசாமி (காரியதரிசி) ஆ. சுப்பையா, பூ திரவியம் (தலைவர்) அ. சரவணே, அ. இ. பெருமாள், ஸ்ரீ கிருஷ்ணப்பெருமாள், ராம. கந்தசாமி.

என்னவென்றால் திரு காந்தி தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்று (வாயில் மாத்திரம்) பேசி வருவதை பற்றியதாகும். அவர் காரியத்தில் ஆரம்பித்தால் திரு காந்தியை பூனாப்பார்ப்பனர்கள் கொன்றே விடுவார்கள், அப்படிப்பட்ட மராட்டா பார்ப்பனர்கள் இன்று, அவர்களது "மராட்டா" என்னும் பத்திரிகையில் காங்கிரஸ் காரியக்கமிட்டி தீர்மானத்திற்கு அதாவது:- ஒவ்வொரு வகுப்பாருடைய பாஷை, எழுத்து புஸ்தகம், புராணம், கல்வி, தொழில், மதசம்பந்தமான பழக்கம் வழக்கம், மததர்மம் ஆகியவைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதான தீர்மானத்தை வெகு அன்பாக ஆதரித்து இருப்பதுடன், இதை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதாக ஒரு வேண்டுகோளும் விடுத்து, இந்து மகாசபை இதை ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும், திரு விஜயராகவாச்சாரியாரும் ஒப்புக்கொள்வார் என்றும், எழுதியிருக்கின்றது. ஆகவே காரியக்கமிட்டி தீர்மானம் பூனா வருணாச்சிரம பார்ப்பனர்கள் ஒப்புக்கொண்டு போற்றுவதில் அதிசயமில்லை.

தனித்தொகுதி.

மௌலானா ஷௌகத்அலி அபிப்பிராயம்.

"முஸ்லீம் கடைகளுக்குமுன் மறியல் செய்தால் கலகம் ஏற்படும்."

—:0:—

'இந்து' பத்திரிகையின் நிருபருக்களித்த பேட்டியின் சாராம்சம்.

"காரியக்கமிட்டியாரின் தீர்மானத்தின் எல்லா அம்சங்களையும் நான் ஆட்சேபிக்கின்றேன். காங்கிரசிலுள்ள சில முஸ்லீம்களை திருப்தி செய்யவே அத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்து-முஸ்லீம் ஒப்பந்தமேற்பட்டு விட்டதாக, வட்டமேஜை மகாநாட்டில் சொல்லக்கூடும். இதனால் தேசமக்கள் ஏமாந்துவிடமாட்டார்கள். டாக்டர் அன்சாரி அவர்களும், மௌலானா அப்துல்கலாம் ஆசாத்து அவர்களும் இத்தீர்மானங்களை செய்ய உடந்தையாயிருந்தது வருந்தக்கூடிய விஷயமாகும். இத்தீர்மானத்தால் காந்திக்கும், காங்கிரசுக்கும், பொதுஜனங்களிடம் இனி மதிப்பிருக்காது.

தனித்தொகுதிவேண்டுமென்பதற்கு பலகாரணங்களுண்டு. இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் பாஸ்பர நம்பிக்கையில்லை. கான்பூர், மிதுனப்பூர், காசி, அலகாபாத், ஆக்ரா, முதலியவிடங்களில் காங்கிரசுக்கு மதிப்பில்லை. இவ்விடங்களில் இந்துக்களுக்கும்-முஸ்லீம்களுக்கும் பெரும் பகையிருந்து வருகின்றது. மெஜாரட்டியான இந்துக்கள் முஸ்லீம்களை நசுக்க சூழ்ச்சி செய்கின்றார்களென்கிற சந்தேகம் முஸ்லீம்களுக்குள்ளிருந்து வருகின்றது. இந்துக்களின் மனப்பான்மை முஸ்லீம்களால் ஒப்புக்கொள்ளக்கூடியதன்று. ஆண்-பெண் அடங்க, எல்லோருக்கும் ஓட்டுரிமைகொடுப்பதாயிருந்தாலும் முஸ்லீம்களின் பெண்கள் கோஷாவானதால் அவர்கள் தாராளமாய்வந்து, ஓட்டு செய்யமாட்டார்கள். ஆதலால், இந்துக்களுடைய ஓட்டுக்கு முன்னால் முகமதியர்களின் ஓட்டு மிக சொற்பமாகிவிடும். கோஷாப்பெண்கள் ஓட்டுரிமை வழங்க முன் வரும்படி செய்யும் வரையில் தனித்தொகுதி இருந்துதான் தீர வேண்டும்.

முஸ்லீம்கள் சமூக சீர்திருத்தம் செய்து, தங்கள் சமூகத்தை புனருத்தாரணம் செய்யவேண்டிய வேலையெவ்வளவோ யிருக்கின்றது. அதுவரையில், அவர்களுக்குத்தனித்தொகுதிதான் வேண்டும். இந்நிலைமையில் அன்னிய நாட்டுத்துணிகளின் மறியலென்பது இப்பொழுது முடியாது. முஸ்லீம் கடைகளுக்கு முன் மறியல் செய்வதாயிருந்தால் வீண்கலகங்களே ஏற்படும். காங்கிரசுக்காரர்கள் அதிகாரவெறி பிடித்தவர்களாயிருக்கின்றார்கள்.

தேசபக்தியென்பது காரியக்கமிட்டியாருக்கு மாத்திரம் சொந்தமல்ல. காரியக்கமிட்டியார் தேசத்தைப்பெரியகஷ்டத்திற்கும் துக்கத்திற்குமாளாக்கபோகின்றார்கள். முஸ்லீம்களோடு சண்டைபோடப்பார்ப்பது ஆபத்தானகாரியமாகும். முஸ்லீம்களுக்கு வேண்டிய அரசியலைப்பற்றி இந்துக்களேன் நிர்ப்பந்த மேற்படுத்த வேண்டும்? இந்துக்கள் பொதுத்தொகுதியைநிர்ப்பந்தப்படுத்துவதாலேயே, அவர்களிடம் சந்தேகம் கொண்டு முஸ்லீம்கள் தனித்தொகுதியே கேட்கவேண்டியிருக்கின்றது. காங்கிரஸ்காரர்களுக்கு மனமாறுதலேற்பட்டு, நாணயமாய் நடக்கும்போது நான் பொதுத்தொகுதியே ஆதரிப்பேன். முஸ்லீம்களுக்கு காங்கிரஸ் காரர்கள் உத்திரவிடுவதை யினிபொறுக்க முடியாது ஆதலால் கண்டிப்பாக தனித்தொகுதியேதான் முஸ்லீம்களுக்கு வேண்டும்" என்று சொன்னார்.

———

கல்கத்தா முஸ்லீம்களின் அபிப்பிராயம்:

கல்கத்தா மௌலானா அபுல் மஜீத் பட்டாணி அவர்களின் தலைமையில் முஸ்லீம்களின் பொதுக்கூட்டமொன்று நடைபெற்று அடியில் குறிப்பிட்ட ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

'காரியக்கமிட்டி தீர்மானமானது நேரு அறிக்கையை விட முஸ்லீம்களுக்காபத்தை விளைவிக்கக்கூடியதாகவும், அது இந்து மகா சபை மனப்போக்கையே கொண்டதாகவு மிருப்பதுடன், இதனால் இரு சமூகத்தாருக்குள்ளும் வேற்றுமையை அதிகரிக்கத்தான் செய்யும்.'

திருப்பாலக்குடி தீர்த்தத்தின் தீமை.

———

(ப. வா. சி. காதர் இப்ராகீம்)

இராமனுதபுரத்திலிருந்து சுமார் 15மைல் தூரத்திலிருக்கும் திருப்பாலக்குடி என்னும் ஒரு சிறு கிராமத்தில் சில மாதங்களாக எங்கிருந்தோ ஒரு மஹான் தோன்றியிருப்பதாகவும், அவரைச்சிலர் தன் சுயநலம் கருதியோ அல்லது எக்காரணங்கொண்டோ, பெரிய ஒலியுல்லா என்றும், மஸ்தான் என்றும், அவுலியா என்றும் காரணக்கடல் என்றும் பறைசாற்றி வருகிறார்களாம். அவர் உண்மையில் மஸ்தானாகவோ, அவுலியாவாகவோ இருக்கலாம். அதைப்பற்றி நமக்கொன்றும் கவலையில்லை. அதைத்தவிர இன்னும் அனேகம் சுயமரியாதையற்ற இந்துக்களில் பலர் ஷை மஸ்தான் அவர்கள் அவதார புருஷர் என்றும், தீர்க்கதரிசி என்றும், கடவுள் என்றும், சாமியார் என்றும் கும்பிடுகிறார்களாம்! ஆனால் மேற்கூறிய இந்துக்களோ கல்லையும், செம்பையும் கண்டவிடத்தில் கடவுள் என்று கையெடுக்கும் சுபாவம் உடையவர்கள். அவர்களைப்பற்றி நாம் குறைகூற முன்வரவில்லை. ஆனால் அன்னாரின் அன்னையும், அருளையும் பெறவேண்டி பாமர முஸ்லீம் ஆண், பெண் பாலரின் அறியாச்செய்கையைக்கண்டு எந்த உண்மை முஸ்லீமும் வருந்தாதிருக்க முடியாது.

ஒரு குக்கிராமத்தை ஒத்த அத்திருப்பாலக்குடி இப்போது பெரிய பட்டணமாதிரி ஜனத்திரளாக இருக்கிறதென்றால் அங்குசெல்லும் ஜனங்களின்தொகையையாம் விபரித்துரைக்க வேண்டியதில்லை. இவ்வாறு செல்லும் அனைவரும் தத்தம் வியாதிகளை நிவர்த்தித்துக்கொள்ளவும் தாம் கோரிய காரியம் சித்தியாவதற்கும் அங்கு செல்லுகின்றார்களாம்! இவர்கள் ஷை மஸ்தானால் எவ்வித சிகிச்சை பெறுகின்றார்கள் என்பதை கேட்கும் பொழுது யாரும் நகைக்காதிருக்க முடியாது. என்னே! ஜனங்களின் மூட நம்பிக்கை!

அங்குவரும் ஒவ்வொருவரும் பாட்டில்களிலோ அல்லது தகர டின்களிலோ தண்ணீர் எடுத்துக்கொண்டு கையில் ஏந்தியவண்ணமாகவே நிற்கவேண்டுமாம்! மஸ்தானெனப்படுவோர் தண்ணீர் ஏந்தியவர்களின் முன்வந்து வரிசைக்கிரமமாக தண்ணீரை வாயால் ஊதி இவர் இஷ்டம்போல் தமது விரல்களில் ஒன்றிரண்டை காண்பிக்கிறாராம்! அவருக்கு சிஷ்யராக பின்னால் வருகிறவர்கள் 2 விரல் காண்பித்தால் 20 நாளும், 3 விரல் காண்பித்தால் 30 நாளும், 4 விரல் காண்பித்தால் 40 நாளுமாகச் சாப்பிட வேணுமென்றும் அவ்விதம் சாப்பிட்டால் தங்கள் வியாதியும் நிவர்த்தியாவதுடன், கோரிய காரியமும் சித்தியாகுமென்றும் மஸ்தானவர்கள் நியமித்தகாலம்முடிவதற்குள் யாரேனும் தங்கள் வியாதியைப்பற்றி விசாரித்தால் 'சௌகர்யம்' என்றே சொல்லவேண்டுமென்றும், அதில் சிறிதும் தவறினால் நிவர்த்தியாகாதென்றும், ஷை தீர்த்தத்தை பாம்புகடி, தேள்கடிகளுக்கும் கடிவாயில் தடவினால் எவ்விஷமும் இறங்கிவிடுமென்றும் பறைசாற்றுகிறார்களாம்! அக்கூற்றின்படியே நடைபெற்றால் இனி ஆஸ்பத்திரிகளும், அவைச்சார்ந்த டாக்டர்களும் வைத்திய நிபுணர்களும், அனேகம் சர்ட்டிபிகேட்டுகள் பெற்ற இங்லீஷ் மருந்துகளும் தேவையில்லை.

தவிர ஷை மஸ்தானவர்களுக்கு சுமார் வயது 30 இருக்குமாம்! அவரின் உடைபாவனைகளோ விலையுயர்ந்த பட்டாடைகளுடன் கண்ணாடி பூட்ஸ்களுடன் வெகுகம்பீரமாக இருப்பாராம்! அவர் என்றும் வாய்பேசுவதே கிடையாதாம்! மேலும் பெரிய தனவந்தர்கள் அவரவர்கள் ஊர்களில் ஆயிரக்கணக்கானரூபாய்களை செலவு செய்து கொட்டகை போட்டு வாணவேடிக்கை மேளவாத்தியத்துடன் வரவேற்றாலும் அவ்வூருக்கு விஜயம் செய்து தண்ணீர் ஊதிக்கொடுப்பாராம்! ஆனால் சிலர் ஓதிக்கொடுப்பதாகவும் சொல்லிக்கொள்கிறார்கள். ஊதிக்கொடுப்பதைத் தவிர ஓதிக்கொடுப்பது கிடையாது. அதுவும் தவிர, சென்ற 5-7-31௳ காரைக்குடியில் ஓர் நாட்டுக்கோட்டை தனவந்தரின் அழைப்புக்கிணங்கி அவ்வூரில் இரண்டு தினங்கள் வந்திருந்ததும் பலரும் அறிந்த விஷயம். இம்மட்டோ அவரின் கிருபை! பிள்ளை பேற்றவர்களுக்கு பிள்ளைபேறளிப்பாராம்! பிள்ளை இல்லாதவர்கள் எலுமிச்சம் பழம் வாங்கிப்போனால் அதையும் ஊதிக்கொடுப்பாராம்! என்னே காலத்தின் போக்கு! அங்கு செல்ல விரும்புவோர்க்கு அதன் தவறுதலை எடுத்துச்சொல்லப் போனால் அவர்களுக்கு வரும் கோபத்திற்கோ அளவே கிடையாது. எவ்வளவோ பெரிய பெரிய மனிதர்களும் தனவந்தர்களும்தெரியாமலா செலவு செய்து கொண்டு போகிறார்கள்? என்று சொல்லி விடுகிறார்கள். ஆனால் அதைப் பற்றி நமக்கு துவேஷமில்லை. சில வருடங்களுக்கு முன் வண்ணாரப்பட்டி, துவரங்குரிச்சி, நார்த்தாமலை, போன்ற ஊர்களில் பல உச்சாட்டங்கள் நடைபெற்று சில தினங்களில் அது மறைந்த மாயமும் பலரும் அறிந்த விஷயம். ஆனால் ஆரம்பத்தில் இந்துக்கள் மட்டுமதான் போய்க்கொண்டிருந்தார்கள். இப்போது ஏராளமான முஸ்லீம்களும் போகத்துணிந்தவுடன் பெண்பிள்ளைகளையும் தாராளமாக அழைத்துப்போய் வருகிறார்கள். நம்முஸ்லீம்களின் கொள்கையை என்னவென்று சொல்வது? கண்டகோவில்களில் தெய்வம் இருக்கிறதென்று கையெடுக்கும் இந்துக்

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

சுயமரியாதை வீரய்ய செட்டியாருக்கும் சுய ஆக்ஷி சுப்பையருக்கும் சம்பாஷணை.

(சித்திர புத்திரன்.)

சு. ம. வீரைய்யசெட்டியார்— என்ன ஓய்! சு. ஆ. சுப்பைய்யரே நேற்றெல்லாம்சீமை வேட்டி கட்டிக்கொண்டிருந்தீர் இன்று திடீரென்று கதர் வேஷ்டியும், கதர் குல்லாயும், தடபுடலாயிருக்கின்றதே?

சு. ஆ. சுப்பையர்-ஒன்றும் விசேஷமில்லை. இன்று முதல் காங்கிரசில் சேர்ந்து விட்டேன்.

சு. ம. வீ-அதென்ன திடீரென்று சேர்ந்து விட்டாய் காங்கிரசைப்பற்றி குற்றம் சொல்லிக் கொண்டிருந்தாயே?

சு. ஆ சு-நான் பி. எ. பாஸ் செய்து எத்தனை நாள் ஆச்சுது?

சு. ம. வீ-3 வருஷமாச்சுது.

சு. ஆ. சு-உத்தியோகத்திற்கு எத்தனை விண்ணப்பம் போட்டேன் உனக்குத் தெரியாதா?

சு. ம. வீ-ஆம். சுமார் 50, 60 விண்ணப்பம் போட்டாய் அதற்கென்ன இப்போது?

சு. ஆ. சு-ஒரு விண்ணப்பத்திற்காவது பதில் கிடைத்ததா சொலபார்ப்போம்?

சு. ம. வீ-அது சரி அதற்கு யார் என்ன செய்வார்கள். உத்தியோகம் இருந்தால் தானே கிடைக்கும்.

சு. ஆ. சு-உத்தியோகம் காலியாகவா இல்லை? எனக்குப் பிறகு எஸ். எஸ். எல். சி. பாசு பண்ணின அப்துல் ரகிமான், பறக்கருப்பன், ஜோசப்பு, இராங்கசாமி நாய்க்கன், இராமசாமி நாடான் இவர்களுக்கு எல்லாம் வேலை கிடைத்துக்காயமாகிஒன்றுஇரண்டு பிரமோஷன்கூட ஆகிவிட்டது.நான் பி. ஏ. பிரசிடென்சி 9தாவதாகப் பாசு பண்ணி இருக்கின்றேன். என் விண்ணப்பத்திற்குப் பதில் கூட இல்லை. இந்த கவர்ன்மெண்டை என்ன பண்ணுவது?

சு. ம. வீ-அது ஏன் அப்படி? உன் விண்ணப்பங்கள் போயச் சேருகிறதில்லையா?

சு. ஆ. சு. இல்லையப்பா உங்கள் எளவுதான்.

சு. ம. வீ-என்ன சங்கதி?

சு. ஆ. சு-சுயமரியாதை என்று ஒரு கலகத்தை உண்டாக்கி அதில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்று கூச்சல் போட்டுக் கடைசியாக அது எங்கள் தலையில்வந்துவிடிந்தது.

சு. ம. வீ-அடபாவி அதற்கு நாங்களா ஜவாப்புதாரி. ஜஸ்டிஸ் கட்சிக்காரரல்லவா? அந்தப்படி கேட்டது.

சு. ஆ. சு-அது எனக்குத்தெரியும். ஜஸ்டிஸ்க்கட்சிக்காரர் முக்கி முக்கிப்பார்த்தும் ஒன்றும் முடியாமல்போய் கடைசியாக அவர்களே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாம் என்கின்ற போது உங்க எளவு சுயமரியாதைக் கலகம்வந்து அதற்கு உயிர் உண்டாக்கி எங்கள் தலையில் கையை வைத்து விட்டது.

சு. ம. வீ-சரி அதற்கும்—கதருக்கும், காங்கிரசுக்கும் என்ன சம்பந்தம்?

சு. ஆ. சு-அதனால்தான் காங்கிரசில் சேர்ந்தேன்.

சு. ம. வீ-ஏன்?

சு. ஆ. சு- இந்தக் கவர்ன்மெண்டை ஒழித்துவிட்டு வேறு வேலை பார்ப்பது என்றுதான்.

சு. ம. வீ- உங்களால் ஒழித்து விடமுடியுமா?

சு. ம. சு-ஏன் முடியாது? மாளவியாவே சொல்லி விட்டாரே. ஒரு மாதத்தில் சுயராஜியம் வரப்போகின்றது என்று சொல்லிவிட்டாரே. ஒரு சமயம் காந்தி சொன்னாலும் சந்தேகப்படலாம். அவர் இப்படியே 5, 6 தாம் சொல்லிச் சொல்லி ஏமாற்றி விட்டார்.மாளவியாவாக்குத்தவறாது.

சு. ம. வீ-அப்படியே சுயராஜியம் வந்து விட்டதாகவே வைத்துக்கொள். அப்போது மாத்திரம் உனக்கு உத்தியோகம் கிடைத்து விடுமா?

சு. ஆ. சு-ஏன் கிடைக்காது? இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவமெல்லாம் தவுடு பொடியாகி விடாதா? அதற்காகத்தானே சுயராஜியம் கேட்பது. இந்த வெள்ளைக்கார ஆட்சி கூட வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுப்பதில்லை என்றுசொன்னால்அதனிடம்எங்களுக்குஎன்னசண்டை?

சு. ம. வீ-வகுப்புகள் இருக்கும்வரை வகுப்புவாரி உரிமை வேண்டாமா?

சு. ஆ. சு-வகுப்புவாதம் கூடாதுஎன்றதானே காங்கிரஸ் சொல்லுது.

சு.ம வீ-வகுப்புவாதம்கூடாது என்பதுசரிதான். வகுப்பு போக வேண்டும்என்றும்காங்கிரஸ் சொல்லவேண்டாமா?

சு. ஆ சு-அதுவும் போகத்தான்வேண்டும்.

சு. ம. வீ-அப்படியானால் உங்கள் சுயராஜியத்தில் இந்தியன், மகமதியன், கிறிஸ்தவன் முதலாகியவகுப்பெல்லாம்போய்விடுமா?

சு. ஆ. சு-இவைகளை எப்படிப் போக்கமுடியும்?

சு. ம. வீ- அப்படியானால் அவாவர்களுக்குள்ள உரிமை கொடுக்கத்தானே வேண்டும்.

சு. ஆ. சு- ஒவ்வொருவருக்கும் தனித்தனி உரிமை கேட்டால் அது வகுப்புவாதமில்லையா?

சு. ம. வீ-வகுப்பு போகாத சுயராஜியத்தில் வகுப்பு உரிமை வெண்டாமா?

சு. ஆ சு- அது எப்படியோ போகட்டும். இந்துக்களுக்குள் கூட வகுப்புவாதம் எதற்கு?

சு. ம. வீ-உங்கள் சுயராஜியத்தில் இந்துக்களுக்குள் சூத்திரன், பஞ்சமன்என்கின்றதாகியவகுப்புகளாவதுஇல்லாமல் போய்விடுமா

சு. ஆ. சு-இப்படிப்பேசுவதுதான் வகுப்பு வாதம் என்பது?

சு. ம. வீ-எப்படி?

சு. ஆ. சு வெகுகாலமாய் பெரியவாள் காலம்தொட்டு இருக்கின்ற வழக்கத்தை கேவலம் இந்த சுயராஜியத்திற்காக ஒழிக்கவேண்டும் என்று சொல்வது நியாயமாகுமா? இதனால் தான் உங்களை தேசிய பத்திரிகைகள் வகுப்புத்துவேஷிகள் என்று கூப்பிடுகின்றார்கள். சுயராஜியம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. சூத்திரன், பஞ்சமன் ஆகிய வகுப்புகள்இல்லாமல் செய்ய நாங்கள் சம்மதிக்கமாட்டோம்.

சு. ம. வீ-ஏனப்பா அது என்ன அவ்வளவு கஷ்டம்?

சு. ஆ. சு-இன்றைக்கு சூத்திரன் என்கின்ற வகுப்பு வேண்டாம், நாளைக்கு பஞ்சமன் என்கின்ற வகுப்பு வேண்டாம், நாளான்னைக்கு பிராமணன் என்கின்ற வகுப்புவேண்டாம் என்பதாக வரிசையாய் சொல்ல ஆரம்பித்துவிடுவீர்கள்.

சு. ம. வீ-சொன்னால் என்னப்பா முழுகிப்போகும்.

சு. ஆ. சு-குதிரையும், கழுதையும் ஒன்று என்றால் நீ ஒப்புக்கொள்வாயா?

சு. ம. வீ-அப்படியானால் பிராமணன், சூத்திரன், பஞ்சமன் என்கின்றவர்களில் யார் குதிரை யார் கழுதை? அதற்கு என்ன அடையாளம்? சொல் பார்ப்போம் என்று சட்டையை முழங்கைக்குமேல் ஏற்றிச் சுருட்டினார் வீரைய்யன்.

சு. ஆ. சு-அதெல்லாம் எனக்குத்தெரியாதப்பா சங்கராசசாரி சுவாமிகளிடமிருந்து "பிராமணாள் எல்லாரும்காங்கிரசில் சேருங்கள்" என்று ஒரு ரகசிய ஸ்ரீமுகம் வந்ததாக எங்கப்பா சொன்னார் அதனால் சேர்ந்தேன். எங்கப்பாவும் எங்க மாமாவும் பேசிக்கொண்டிருந்ததை நான் சொன்னேன். என்மேல் கோபித்துக்கொள்ள வேண்டாம். என்னமோ என்வேலையை நான் பார்க்கின்றேன் உன்வேலையை நீபார். நமக்குள் சண்டையெதற்கு என் அபிப்பிராயமெல்லாம் உனக்குத் தெரிந்ததுதானே? நான் போகிறேன் நேரமாச்சுது என்று சொல்லிக்கொண்டே நழுவிவிட்டார்.

மன்மத ஸ்தம்பன குளிகை

ஒரு மணி நேரத்தில் குணம்!

பலர் பல பெயரிட்டு விளம்பரப்படுத்தி யிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்க மாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பன குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. கோழியைப்போல் அதி சீக்கிரத்தில் ஸ்கலிதமாகும் புருஷர்கள் இந்தக்குளிகையில் ஒன்றை மாலை 6-மணிக்குச் சாப்பிட்டு இரவு பால் வெற்றிலை அருந்தி முயன்று பார்ப்பாராகில் பெருத்த சுகானந்தம் உண்டாகும். அநுபவித்துப் பார்ப்பவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். நீற்றுப்போன இந்திரியத்தைக் கெட்டிப் படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உடனே எழுதுங்கள்.

உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

டப்பி 1-க்கு விலை ரூ. 2—0—0

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஈ. வெ. இராமசாமி உபன்யாசம்.

திரு ஈ. வெ. இராமசாமி, மாயவரம், பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் செய்த பிரசங்கத்தின் குறிப்புகள்:-

தலைவரவர்களே!
சகோதர சகோதரிகளே!!

இன்று இக்கூட்டத்தில் நான் "காங்கிரஸ் புரட்டும்-காந்தியின் தவறும்" என்னும் விஷயத்தைப் பற்றி பேசவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தத்தலைப்பைப்பார்த்த சிலருக்கு ஆத்திரமுண்டாகி யிருக்கலாம். கலகம் செய்யலாமா என்றுகூட கருதிக்கொண்டு வந்திருக்கலாம். இந்தப்படி ஆத்திரம் ஏற்படுவது சகஜமேயாகும். ஆனால், நான் மாத்திரம் 5, 6 வருஷ காலமாகவே காங்கிரஸை ஒரு புரட்டு ஸ்தாபனம் என்றும், அது பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஏற்பட்ட ஸ்தாபனமென்றும் சொல்லி வந்திருப்பதோடு, 'திரு காந்தியவர்கள் பார்ப்பனப்பிரசாரகர் என்றும், பார்ப்பனீயத்திற்கு பாடுபடுகின்றவர்' என்றும் சொல்லி வந்திருக்கின்றேன். இந்த அபிப்பிராயம் எனது அனுபவத்தில் நாளுக்கு நாள் பலப்பட்டுக்கொண்டு வந்திருக்கின்றதேயொழிய சிறிதாவது குறைவுபடவே இல்லை.

காங்கிரசு ஒரு வகுப்புவாத சபையேயாகும். 'தேசீய'ப்போர்வையை போர்த்தவகுப்பு வாதக்குரங்கே யாகும். அதாவது பிடிவாத வகுப்பு வாதமாகும். தேசியம் என்னும் பித்தலாட்ட வார்த்தையைச் சொல்லிக்கொண்டே வகுப்புவாதங்களை அதாவது 'உயர்' வகுப்புஉரிமைகளைக் காப்பாற்றுவதற்கு ஏற்பட்டஸ்தாபனமாகும்.

இந்திய தேசியம் என்னும் வார்த்தையொழிந்தா லொழிய வகுப்புவாதம் நமதுநாட்டைவிட்டு ஒருநாளும் ஒழியப்போவதில்லை. பித்தலாட்டமாகவும், வஞ்சகமாகவும், சூக்ஷியாகவும், வகுப்பு வாதத்தை வலியுறுத்துவதுதான் இந்திய தேசியம் என்பதை நினைவில் வையுங்கள். இதை எங்கு வேண்டுமானாலும் ருஜுப்படுத்தத்தயாராயிருக்கிறேன். தேசியப்புரட்டு ஒழிந்துதீரவேண்டியது எல்லாவற்றையும்விட மிகமிக அவசியமென்றே எனக்கு இப்போது பலமாய்த்தோன்றி வருகின்றது.

நமது பாமரமக்களின் பகுத்தறிவு அற்றதன்மையும், ஜீவனத்திற்கு வேறு யோக்கியமான வேலையற்றதன்மையுமே வகுப்புவாத தேசியத்திற்கு இவ்வளவு ஆதரவு கொடுக்கப்பட்டுவந்திருக்கின்றது. இனி அது ஒரு குண்டுமணி அளவும் இருக்கமுடியாது. வகுப்புவாத தேசியத்தின் செல்வாக்கையும், அதனின் காலித்தனத்தையும் கண்டே மக்கள் பயந்து, வெளியில் உண்மையைப்பேசத்தயங்கிக்கொண்டிருக்கின்றார்கள். ஒருவர் இருவராவது இந்த வகுப்புவாத தேசியப் புரட்டை வெளியாக்க உயிர்த்தியாகம் செய்து தீரவேண்டியது மிக்க அவசியமாகும். என்றாலும் சமீபகாலத்தில் அதன் யோக்கியதை வெளியாகிவிடும் என்கின்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நன்றாய் சிந்தனாசக்தியுடன் யோசித்துப்பார்த்தால் வகுப்புவாத சூக்ஷி இல்லாத வெறும் தேசியம் என்னும் வார்த்தையேவகுப்புவாதத்தை அடிப்படையாகக்கொண்டதுதான் என்பது தெளிவாய் விளங்கும். தேசியத்தின் அடிப்படையே வகுப்புவாதம்தான்.

இன்றையதினம் நமதுதேசியம் என்பது ஐரோப்பியம், இந்தியம் என்னும் வகுப்புவாதத்தைக் கொண்டதே தவிர வேறில்லை. இந்தியாவில் ஜாதிப்பிரிவு இருப்பதால், இதன் தேசியம் ஜாதி வகுப்பு வாதமாகவும், மேல்நாடுகளில் தொழில் பிரிவுகள் இருப்பதால் அங்கு தொழில் வகுப்புவாதமாகவும், தேசியங்கள் நடைபெற்று வருகின்றன. 'இந்தியாவை இந்தியர்கள் ஆளவேண்டும்' என்பதே வகுப்புவாதமா? அல்லவா? என்று யோசித்துப்பாருங்கள். இந்தியாவை இன்னவிதமான கொள்கை, இன்னவிதமான ஆட்சி முறைமையில்தான் ஆளப்படவேண்டும் என்று சொல்வதானால் அதில்வகுப்புவாதம் இல்லை என்று சொல்லலாம். ஆனால் அந்தப்படி சொல்லுவது என்பது நமது தேசியத்தில் கடுகளவுகூட காணமுடியவில்லை. 'ராணுவம் இந்தியமயமாக்க வேண்டும், உத்தியோகம் இந்தியமயமாக்கவேண்டும். அதிகாரம் இந்தியமயமாக்க வேண்டும்' என்கின்றதான இந்திய வகுப்புவாதமேதான் இந்திய தேசியத்தில் மேலோங்கி நிற்கின்றதே தவிர அதில்எவ்விதகொள்கையாவது மேலோங்கி நிற்பதாகக் காணப்படவில்லை.

அந்தப்படி ஏதாவது ஒரு கொள்கை மேலோங்கி நிற்கின்றது என்று சொல்லுவோமானால் இந்திய தேசியம் என்பதிலுள்ள எந்தக்கொள்கைக்காவது இந்திய மக்களின் 100-க்கு 10-பேர்களுடைய ஆதரவாவது இருக்கின்றதா? என்று யோசித்துப் பாருங்கள். மக்களின் ஆதரவில்லாத கொள்கைகளை யாரோ சிலர் வாயில் சொல்லிக்கொண்டோ அதிகார உத்தியோக ஆதிக்க சுயநல ஆசைக்கு வியாபாரமுறையில் ஆட்களை வைத்துப் பேசிக்கொண்டோ இருப்பதில் என்ன பயன் ஏற்படக்கூடும்?

ஆகவே தேசியசபை என்னப்படும் காங்கிரஸ், வகுப்பு வாதத்தை வேறு முறையில் நடத்தும் ஒரு புரட்டு ஸ்தாபனமே தவிர வேறு அல்ல என்று தைரியமாய்ச் சொல்லுகின்றேன். இந்த இலக்ஷணத்தில் அது மற்றவர்களை அதுவும் கஷ்டப்படும், மிதித்து, அழுத்தி நசுக்கப்படும்,—இழிவுபடுத்தப்படும் மக்களின் கஷ்டத்தையும், கூக்குரலையும் பார்த்து சிறிதும் அனுதாபப்படாமல்----பரிதாபப்படாமல், அவற்றையெல்லாம் ஒரே மூச்சில் வகுப்புவாதம் என்று சொல்லுகின்ற போக்கிரித்தனத்தைப் பார்த்தால் தேசியத்தில் உள்ள புரட்டுமாத்திரமல்லாமல் அதில் இருக்கும் வகுப்புவாதத்திமிரும் நன்றாய் விளங்கும். இழிஜாதிக்காரனென்று மதத்தின்பேரால் தீர்மானிக்கப்பட்ட பறையன், சக்கிலி, பள்ளன் என்று சொல்லப்பட்ட மக்கள் ஒருபுறம் குடிக்கத்தண்ணீர் இல்லாமல், நடக்கத் தெருவில்லாமல் திண்டாடுகின்றார்கள். தொழிலாளி, குடியானவன் என்று சொல்லப்படுகின்றதான 'சூத்திர' வகுப்பு என்கின்ற மக்கள் பாடுபட்டும் கஞ்சியில்லாமல் தவிக்கிறார்கள். 'மிலேச்ச' வகுப்பு என்பதில் சேர்க்கப்பட்ட மகமதியர்கள் தாங்களும் இந்தியர்களாக இருந்தும் தங்களது உரிமை தங்களுக்கு அளிக்கப்படவில்லை என்று கூக்குரலிடுகின்றார்கள்.

இவ்வளவையும் பார்த்தும், கேட்டும் சிறிதும் ஈவு இரக்கமின்றி ஒரே வார்த்தையில் "இதெல்லாம் வகுப்புவாதம், வகுப்பு வாதக்காரர்கள் எல்லாம் தேசத்துரோகிகள், இது தேசியத்திற்கு முட்டுக்கட்டை" என்கின்ற ஒரே ஆயுதத்தால் அடித்து நொறுக்கி விடப் பார்த்தால் இதை யார் பொறுத்துக்கொண்டு இருக்க முடியும்? என்று கேட்கின்றேன்.

காங்கிரஸ் காரியக்கமிட்டியார் தீர்மானங்களையும் அவற்றிற்கு திரு. காந்தியின் மேலொப்பத்தையும், சற்று நாணயத்துடன் கவனித்துப்பாருங்கள். அது வகுப்பு வாதமா? அல்லவா என்று கேட்கின்றேன். அதுவும் நாம் எந்த வகுப்பு வாதத்தை ஒழிக்க வேண்டும் என்று கூப்பாடு போடுகின்றோமோ அந்த வகுப்பு வாதத்தை நிலைநிறுத்த உறுதிப்படுத்தச் செய்யும் வகுப்பு வாதமா? இல்லையா? என்று கேட்கின்றேன். ஆகவே காரியக்கமிட்டியின் தீர்மானம் என்ன? என்பதைச்சொல்லுகின்றேன். கேளுங்கள்.

அதாவது:- "இந்தியாவிலுள்ள சகல வகுப்பாருக்கும், அவர்களது சாஸ்திரங்கள், பாஷைகள், கல்வி, தொழில், மதசம்பந்தமான பழக்கவழக்கம், மத தர்ம ஸ்தாபனங்கள் ஆகியவைகள் தேசியத்தில் காப்பாற்றப்படும்" என்பதாகும்.

இந்தத்தீர்மானம் வகுப்புவாத தீர்மானமா? அல்லவா? என்று கேட்கின்றேன். பறையன் தொடக்கூடாதவன் என்பதும், முஸ்லீம் தொடக்கூடாதவன் என்பதும், "சூத்திரன்" மற்ற வருணத்தாரை தொடகூடாதவன் என்பதும் இந்துமதத்தின் பழக்கவழக்கமா? அல்லவா? என்று கேட்கின்றேன். அன்றியும், இது வகுப்புவாதமா? அல்லவா? என்று கேட்கின்றேன். இந்த முறை ஒழிக்கப்படவேண்டுமென்பது வகுப்பு வாதத்தை ஒழிப்பதாகாதா? என்று கேட்கின்றேன், இப்படி இருக்க இந்த வகுப்புவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்கின்ற முயற்சிகளையெல்லாம் வகுப்புவாதம் என்று சொல்லிவிட்டு இன்று இந்நாட்டில் இருக்கின்ற இந்த வகுப்புவாதங்கள் காப்பாற்ற உறுதி கூறி காங்கிரஸ் தீர்மானம் செய்திருக்கின்றது. இதற்கென்ன பதில் சொல்லப்போகின்றீர்கள்?

காங்கிரஸ் தீர்மானத்தின் பயனாய் இங்குள்ள மக்களுக்கு சம உரிமை உண்டா? மனிதத்தன்மை உண்டா? என்று யோசித்துப் பாருங்கள் என்று கேட்கின்றேன்.

பார்ப்பனர்கள் வருணாச்சிரம மகாநாடுகளில் செய்யப்படும் தீர்மானங்கள் தான் காங்கிரஸ் காரியக்கமிட்டியில் வேறு பாஷையில் செய்யப்பட்டிருக்கின்றது என்பதல்லாமல் வேறு என்ன? கவனித்துப்பார்க்கப் போனால் வருணாச்சிரம மகாநாட்டுத் தீர்மானங்களைவிட காங்கிரஸ் தீர்மானம் மோசமானதென்று சொல்லுவேன். ஏனெனில், வருணாச்சிரம மகாநாடுகளில் தங்கள் வகுப்பு தர்மங்களில் கவர்ன்மெண்டார் பிரவேசிக்கக் கூடாது என்று மாத்திரம்தான் சொல்லுவார்கள். ஆனால் காங்கிரஸ் தீர்மானத்தில் "வர்ணாச்சிரம தர்மங்களை, வகுப்பு தர்மங்களை நாங்கள் காப்பாற்றித் தருகின்றோம்" என்று உறுதி கூறி யிருக்கின்றார்கள்.

ஆகவே இப்போது நமது நிலை "பிச்சைபோடவேண்டாம். தயவு செய்து நாயைப்பிடித்துக் கட்டு" என்பதுபோல்தான் இருக்கின்றது. நமக்கு சுயராஜ்யம் வேண்டியதில்லை, வகுப்பு தர்மம் காப்பாற்றப்படாமல் இருந்தால் அதுவே போதும் என்று கேட்டுக் கொள்ளவேண்டியவர்களாயிருக்கின்றோம். இவைகள் எல்லாம் திரு காந்திக்கு தெரியாத விஷயம் என்று கருதிவிடாதீர்கள். அவர் சூதாட்டத்தில் இறங்கிவிட்டார். அவர் படித்ததெல்லாம் சீமையில் இருக்கும் போது சட்டபுஸ்தகமும், இந்தியாவுக்கு வந்த பிறகு டால்ஸ்டாய் உபதேசமும், மற்றபடி துளசிதாஸ் இராமாயணமும், பகவத் கீதையுமேயாகும். மற்றபடி. இதைத் தவிர அவருக்கு உலக அனுபவம் போதுமானது இல்லை என்றே சொல்லுவேன் ஏனெனில் மடாதிபதிகள்போல் சிஷ்யர்களிடம் பேசுவதும், பக்தர்கள் கூட்டத்தில் தனக்குத் தோன்றியதைப் பேசுவதுமே தவிர வேறு வழியில் உலக ஞானம் பெற அவருக்கு சந்தர்ப்பம் இருந்ததே கிடையாது. அவரிடம் தெய்வத்தன்மை இருக்கின்றது என்பவர்களுக்கு நான் இதைச் சொல்ல வரவில்லை. அவரும் ஒரு மனிதர்தான் என்று கருதி இருக்கின்றவர்களுக்கே நான் இதைச் சொல்லுகின்றேன். ஆகையால் நாம் திரு காந்தியிடம் இராமாயணத்திற்கும் கீதைக்கு மேற்பட்ட விஷயங்களையும், சட்டத்திற்கும் டால்ஸ்டாய் உபதேசத்திற்கும் மேல்பட்ட விஷயங்களையும் எதிர்பார்ப்பது நமது பிசகேயாகும்-பார்ப்பனர்கள் ஆதரவிலிருக்கும்படியான நிலை

[தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க]

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மூன்றாவது (மாகாண)

சுயமரியாதை மகாநாடு.

ஆகஸ்டு-மீ 8, 9உ சனி ஞாயிற்றுக்கிழமை

களில் இந்திய சட்டசபை உபதலைவர் கோவை உயர்திரு.

R. K. ஷண்முகம்

B. A., B. L., M. L. A., அவர்கள் தலைமையில்

விருதுநகரில்

நடைபெறும்.

மீனும்பள்ளி ஜமீன்தாரர் உயர்திரு.

K. C. M. வெங்கிடாசல ரெட்டியார் M. L. C.

அவர்கள் மகாநாட்டைத்திறந்து வைப்பார்கள்:

திருவனந்தபுரம் சட்டசபை அங்கத்தினர் உயர்திரு.

K. நாராயணபெருமாள் B. A., M. L. C., அவர்கள்

தலைமையில் வாலிபர் மகாநாடு நடைபெறும்.

V. V. தனுஷ்கோடி B. A., அவர்கள்

(வாலிபர் மகாநாட்டு வரவேற்புக்கழகத்தலைவர்.)

திருமதி இந்திராணிபாலசுப்பிரமணிய

அம்மையார் அவர்கள் தலைமையில் பெண்கள் மகாநாடு நடைபெறும்.

திருமதி பத்மாவதி திருவண்ணாமலை

அம்மையார் அவர்கள் (வரவேற்புக்கழகத்தலைவி.)

ஒலி பரப்பும் கருவிக்கும், மின்சார விளக்குக்கும்,

சென்னையிலிருந்து திருச்சி வழி தனி ரயிலுக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

V. V. இராமசாமி.
காரியதரிசி.

உயர்திரு. W. P. A. சௌந்திரபாண்டியன்.
வரவேற்புக்கழகத்தலைவர்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு

ஈரோடு 1931௵ ஜூலைமீ 26௳

மௌலானா ஷௌகத் அலி.

மௌலானா ஷௌகத் அலி அவர்கள்முஸ்லீம்களுக்குபிரதி நிதியல்லவென்பதாகக் காங்கிரஸ்காரியக்கமிட்டி முடிவு செய்து விட்டதுஎன்பதாகஉயர்திரு.காந்தியவர்கள் தமது 16-7-31 தேதி "யங் இந்தியா" பத்திரிகையின் தலையங்கத்தில் எழுதிவிட்டார். இதற்கு பதிலாக மௌலானா அவர்கள்ஒருஅறிக்கைவெளியிட்டிருக்கிறார். அதன் சுருக்கம் மற்றொரு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. மௌலானா ஷௌகத்அலி அவர்களை "முஸ்லீம்கள் பிரதிநிதியல்ல"வென்றுகாங்கிரஸ் காரியக்கமிட்டி முடிவு செய்திருப்பதைப்பற்றி யோசித்துப் பார்த்தால் காங்கிரசானது யாரையும்இலட்சியம்செய்யாமல்தனது போக்கில் மிகவும் தைரியத்தையும், உறுதியையும் கொண்டுவிட்டதாகத்தான் சொல்லவேண்டும். திரு. காந்தியவர்களும் காங்கிரஸ் காரியக்கமிட்டியின் இந்த முடிவைப்பற்றி சிறிதும் யோசனைசெய்யாமலும், காரியக்கமிட்டியைக் கண்டிக்காமலும்தமது பத்திரிகையில் விளம்பரப்படுத்தி விட்டதிலிருந்து அவரும் துணிந்து விட்டார் என்றுதான் சொல்லவேண்டும்.

அதாவது "காந்தி-இர்வின்" ஒப்பந்தம் முடிந்தவுடன் "இந்து முஸ்லீம் ஒப்பந்தம் ஏற்படாவிடில் மேலால் என்ன செய்வது என்பது எனக்குத் தெரியும்" என்று அவர் சொன்ன காலத்திலேயே இந்த உத்தேசத்தை வைத்துத்தான் சொல்லியிருக்க வேண்டும் என்றும், யார் யார் தனக்கு ஒத்துவரவில்லையோ அவர்களையெல்லாம் இம்மாதிரியாகச்சொல்லி ஒழித்துவிடுவது தான் தனக்குத் தெரிந்த வழியென்று அப்போதே கருதிவிட்டாரென்றும், அந்தஎண்ணத்தின் பிரதிபிம்பமேதான்அவரைஇவ்வளவு தைரியமாய் எழுதச்செய்தது என்றும் தான் நாம் கருதுகின்றோம்.

ஒத்துழையாமை ஆரம்பித்த காலத்தில் அலி சகோதரர்கள் இருவரையும் தன்னுடன் கூடவே கூட்டிக்கொண்டு இவ்விருவரையும் தனது இரு பக்கமும் நிறுத்திக்கொண்டு அவர்களைப் புகழ்ந்து பேசி 'அலி சகோதரர்களுடைய சட்டைப் பையில் நான் இருக்கிறேன். அவர்கள் தான் என்னை நடத்துகிறார்கள்' என்றெல்லாம் பேசி அவர்களுக்கு உற்சாகத்தை யூட்டி அவர்கள் மூலமாகவே காந்தி, மகாத்மா காந்தி, மகாத்மா என்றெல்லாம் சொல்லச்செய்து, இந்தியத் தலைவர் ஆனபின்பு இப்போது ஒரு வரியில் 'மௌலானா சாயபை முஸ்லீம்களின் பிரதிநிதி என்பதாக காரியக் கமிட்டி ஒப்புக்கொள்ளவில்லை' என்று துணிந்து எழுதிவிட்டார். இவரது பத்திரிகையான "யங் இந்தியா" உலகில் பல பாகங்களிலும் செல்லுவதுடன் இந்த வாக்கியத்தை உலகத்திலுள்ள பத்திரிகைகள் எல்லாம் எடுத்துப் போட்டிருக்கின்றன.

எனவே திரு. காந்தி இப்படியெழுதியதின் மூலம் மௌலானாவை ஒழித்துவிடலாம் என்கின்ற அபிப்பிராய மாத்திரமல்லாமல் இந்திய முஸ்லீம்கள் தலையிலும் கையை வைத்துவிடலாமென்கின்ற தீர்மானத்துடன் இருந்து தான் எழுதியிருக்கிறார் என்றே முடிவு செய்யவேண்டியிருக்கின்றது.

அன்றியும், தானாக இப்படிச் சொல்லுவதற்கு பயந்து தான் 'காரியக்கமிட்டி முடிவு செய்திருக்கின்றது' என்பதாக எழுதுகின்றார் என்று தான் கருதவேண்டியிருக்கிறது. அப்படிக்கில்லாமலிருந்தால் உடனே திரு. காந்தியவர்கள் காரியக்கமிட்டியின் இம்மாதிரியான முடிவை கண்டித்திருப்பார். அதுமாத்திரமல்லாமல் தனது பத்திரிகை தலையங்கத்திலும் இவ்வளவு வெளிப்படையாய் பிரசுரித்திருக்கவுமாட்டார்.

நிற்க, மௌலானா ஷௌகத் அலி அவர்களை இந்திய முஸ்லீம் பிரதிநிதியல்லவென்று தீர்மானம் செய்துவிட்டால் பிறகு வட்டமேஜை மகாநாட்டில் இந்தியா முழுமைக்கும் திரு காந்தியே பிரதிநிதி என்றாய்விடுவதோடு அவரது அபிப்பிராயத்தை எதிர்த்துப் பேசவும் ஆட்கள் இருக்கமாட்டார்கள். பிறகு அவருக்கே ஏகநாயகப் பிரதிநிதித்துவம் சித்தித்துவிடும் என்கின்றஉள் எண்ணமே திருகாந்தியின் சிஷ்யர்களை இப்படி முடிவுசெய்ய இணங்கும்படி தூண்டி இருக்கின்றது என்றுமேதான் கருதவேண்டியிருக்கின்றது.

என்றாலும், இந்தமாதிரியான குகூடிக்கு மௌலானா ஷௌகத்அலி கொடுத்த பதிலும் சரியான பதிலேயாகும். என்னவென்றால் "திரு காந்தி இந்தியமக்களுக்கு எவ்வளவு பிரதிநிதியோ அதைவிட அதிகமான அளவு நான் முஸ்லீம்களுக்கு பிரதிநிதி" என்று சொல்லி இருக்கின்றார். இதை நாமும் அப்படியே ஆதரிக்கின்றோம். இதற்கு ஆதாரம் என்னவெனில் இன்றையதினம் இந்தியாவில் மௌலானாஷௌகத்அலியைதங்களுக்கு பிரதிநிதி அல்ல என்று சொல்லும்படியான முஸ்லீம்களை ஒட்டுமொத்த முஸ்லீம் சமூகத்தில் 1000 க்கு ஒருவரையாவது கண்டுபிடிக்க முடியுமா? என்று கேட்கின்றோம்.

சென்னையில் சில முஸ்லீம் கனவான்கள் மைலாப்பூர் திரு சீனிவாசய்யங்காரை தலைவரென்று சொல்லிக்கொண்டிருந்தது போல் ஒரு சில முஸ்லீம்களால் அதுவும் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களால் திரு காந்தி தலைவர் என்று சொல்லிகொள்ளப்படுவதுதவிர வேறு யாரை யாவது காட்டக்கூடுமா?

அன்றியும், இந்தியாவிலுள்ள இந்துக்கள் என்பவர்களிலும் திரு காந்தியை தங்கள் தலைவர் என்றோ, பிரதிநிதியென்றோ சொல்லக்கூடியவர்கள் 100க்கு எத்தனைபேர் இருப்பார்கள்என்பதாக தமிழ்நாட்டையே எடுத்துக்கொண்டு பார்ப்போம். விளக்கமாகப்பேசவேண்டுமானால் திரு காநதியின் இராமராஜியத்தையும், அதன் வருணாச்சிரமதர்மத்தையும் ஒப்புக்கொள்ளுகின்ற மக்களில் பார்ப்பனர்களை தவிர பார்ப்பனரல்லாதார்களில் 100க்கு ஒருவராவது இருக்கின்றார்களா? என்று பந்தயங்கட்டி கேட்கின்றோம், மேலும் பார்ப்பனரல்லாதார்களில் ஒரு குறிப்பிட்ட ஆசாமியின் பெயரையாவது சொல்லக்கூடுமா? என்று மறுபடியும் கேட்கின்றோம்.

உண்டியல் எடுத்துக்கொண்டு பிச்சை எடுப்பவர்கள் செம்புக்கு நாமம் போட்டுக்கொண்டு மஞ்சல் துணிகட்டி "வெங்கிட்டரமணா கோவிந்தா! கோவிந்தா!!" என்று கூப்பாடுபோடுவது போல் தேசியத்தின் பேரால் வாழ்க்கையை நிர்த்தாரணம்செய்துகொண்டவர்கள் காந்திக்கு ஜே! என்று சொல்வதும் அதைக்கேட்டுக்கொண்டு விளையாட்டுப்பிள்ளைகளும், வேலையில்லாத பிள்ளைகளும், மற்றும் ஓட்டுகளை எதிர்பார்த்துத்திரியும் பெரிய ஆட்களும் கூப்பாடு போடுவதுமல்லாமல் மற்றப்படி யாருக்கு திரு காந்தி பிரதிநிதி என்று கேட்கின்றோம்.

பார்ப்பனர்களுடைய பிரசார சாமர்த்தியத்தாலும், இல்லாமல் தீராதஇயற்கை அவசியத்தாலும் யாரோ ஒருவர் சங்காராச்சாரியாகி உலககுரு ஆவதுபோல் பார்ப்பனர்களுடைய பிரசார சாமர்த்தியத்தால் திரு காந்தி அவர்கள் இந்தியப் பிரதிநிதியாகக்காணப்படுகின்றார். உண்மையைச் சொல்ல வேண்டுமானால் காரியக்கமிட்டி தீர்மானத்தை கையிலெடுத்துக்கொண்டு திரு காந்தியவர்கள் கப்பலேறியவுடன் பார்ப்பனரல்லாத மக்கள் சுயமரியாதை உணர்ச்சியுடைய மக்கள், சமதர்மக்கவலையுள்ள மக்கள் "திரு காந்தியவர்கள் எங்களுடையபிரதிநிதியல்ல, அவர் வருணாச்சிரமக்காரருக்கும், மேல் ஜாதிக்காரருக்கும், முதலாளிகளுக்குந்தான் பிரதிநிதி" யென்று வட்டமேஜை மகாநாட்டுக்குத் தந்திகொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் காரியக் கமிட்டி தீர்மானத்தை நினைத்தால் சுயமரியாதைக்காரனுக்கும், சமதர்மக்காரனுக்கும் இரத்தம் கொதிக்குமென்றே சொல்லுவோம்.

ஆகவே, இந்நிலைமையில் உள்ள காங்கிரசைப்பற்றியும், திரு காந்தியைப்பற்றியும், மௌலானா சாயபு அவர்கள் "முஸ்லீகளுக்கு திரு காந்தியைவிட நான் அதிகமான பிரதிநிதித்துவம் பொருந்தியவன்" என்றும்சொன்னதில் கூறிதும் தப்பிதமில்லை என்றே கருதுகின்றோம்.

நிற்கவும் மௌலானா சாயபு அவர்கள் மற்றும் இரண்டொரு விஷயங்களில் உண்மையை தைரியமாய் எடுத்துச்சொல்லி இருக்கின்றார் என்பதையும் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. அதாவது "முஸ்லீம்கள் கடைக்கு முன்னால் நின்றுகொண்டு மறியல்கள் செய்யப்படுமானால் கண்டிப்பாகக் கலகங்கள் உண்டாகும்" என்றும், இந்தியாவில் ஏதாவது "இரத்தம் சிந்தும்படியான ரணகளம் ஏற்பட்டால் அதற்கு திரு காந்தியே ஜவாப்தாரியாவார்" என்றும் எச்சரிக்கை செய்யும் முறையில் எடுத்துச் சொ

ல்லி இருக்கிறார். இன்றைய நிலைமையைப் பார்க்கும்போது தேசியக்கிளர்ச்சி என்பதின் பலன் நாட்டிற்கு இந்த நிலைமையைத்தான் கொண்டு வந்து விடக்கூடும் என்றே நாமும் கருதுகின்றோம். முஸ்லீம்களுக்கும்—இந்துக்களுக்கும் மாத்திரம் தான் கலவரம் நடக்கும் என்பது மாத்திரமல்லாமல் பார்ப்பனர்களுக்கும்--பார்ப்பனரல்லாதார்க்கும், ஜாதிஇந்துக்களுக்கும்—தாழ்த்தப்பட்ட இந்துக்களுக்கும் கூடகலவரமும், ரணகளமும ஏற்பட்டுத்தான் தீரும் என்றேகருதுகின்றோம். யார் தோற்பார்கள், யார் ஜெயிப்பார்கள் என்கின்ற சங்கதி ஒருபுறமிருந்தாலும், நிரபராதிகள் பலர் கஷ்டமும், நஷ்டமும், தொல்லையும் அடையக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், மௌலானா சாயபு சொல்லியிருப்பது போல் அதாவது 'காங்கிரஸ் ஆரம்பித்த காலம் முதலே அது முஸ்லீம்களிடம் விஷமத்தனமாகவே நடந்து வந்திருக்கின்றது என்று சொல்லியிருப்பது போலவே காங்கிரஸ் ஆரம்பமான காலம்தொடங்கியே பொது ஜனங்களின் பெயரைச்சொல்லிக்கொண்டு அவர்களுக்கு துரோகமாகவே நடந்து வந்திருக்கின்றது என்பதோடு காரியக்கமிட்டி தீர்மானம் என்பதில் இதை காயம் செய்யப்பட்டுவிட்டது.

ஆகவே இந்தநிலையில் இருக்கும் காங்கிரசும், திரு காந்தியும் "மௌலானா ஷௌகத்அலி முஸ்லீம்களின் பிரதிநிதியல்ல" என்று சொல்லி முடிவுகட்டி இருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

மேலும் காங்கிரசும், அதன் தலைவர்களும் எப்போதுமே தங்கள் சொற்படி தாளம் போடாத இந்துக்களையும் கூட அவர்கள் யாராயிருந்தாலும் இந்தப்படியே அதாவது அவர்கள் "இந்தியப்பிரதிநிதிகளல்ல" என்று சொல்லிவிடுவதிலும் அதிசயமொன்றுமில்லை, காரியக்கமிட்டிக்கு மாத்திரமல்லாமல், திரு. காந்தியவர்களுக்கு மாத்திரமல்லாமல் காங்கிரசுக்கு யார் தலைவர்களாய் வந்தாலும் அவர்களுக்கெல்லாம் இந்த குணம் தான் இருந்து வந்திருக்கிறது.

உதாரணம் வேண்டுமானால் தமிழ் நாட்டிலும் ஒரு சமயம் பார்ப்பனரல்லாதாரில் சிலர் பார்ப்பனரல்லாதார்களுடைய உரிமையைப்பற்றிக் கேட்டவுடனே இங்குள்ள பார்ப்பனர்கள் காங்கிரஸ் தலைவர்கள் ஸ்தானத்தில் இருந்த காலத்தில் அடியோடு தங்களை தலைவர்களாக்கினவர்களை யெல்லோரையுமே அதாவது திருவாளர்கள் வரதராஜலு நாயுடு, ஆரியா, கல்யாணசுந்திர முதலியார், சக்கரை முதலிய அநேகரை பெயர்களைக்குறிப்பிட்டே "இவர்களை யெல்லாம் காங்கிரசை விட்டு ஒழித்தால் தான் காங்கிரஸ் பரிசுத்த மடையும்" என்று சொன்னதே போதுமான உதாரணமாகும்.

தமிழ் நாட்டைப்பொருத்தவரை பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் விஷயம் இருப்பது போல் இந்தியாவைப் பொருத்தவரை இந்துக்கள்-முஸ்லீம்கள் விஷயம் இருந்து வருகிறது.

ஆதலால்இரண்டும் ஒன்றுபோலவேதான் நடைபெறுகிறது. தமிழ் நாட்டிற்கு திருவாளர்கள் சீனிவாசையங்காரும், ராஜகோபாலாச்சாரியுமானால் இந்தியாவுக்கு திருவாளர்கள் மாளவியாவும் காந்தியுமாவார்கள். இதில் ஒன்றும் புதிய நடவடிக்கைகள் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

எனவே மௌலானா ஷௌகத்அலி அவர்கள் முஸ்லீம் பிரதிநிதியல்ல" என்று காரியக்கமிட்டி முடிவு செய்து அது காந்தியின் மூலம் வெளிப்பட்டிருப்பதின் யோக்கியதையைப்பற்றிசுருக்கத்தில் ஒருவார்த்தையில் சொல்லி முடித்துவிடவேண்டுமென்றால் திரு. காந்தி தலைவர் பதவிக்கு ஏறிச்சென்ற ஏணியையே உதைத்துத்தள்ளி விட்டாரென்றுதான் சொல்லவேண்டும்.

விருதுநகர் மகாநாடு.

மூன்றாவது சுயமரியாதை மகாநாடு விருதுநகரில் ஆகஸ்டு மாதம் 8, 9 தேதிகளில் திருவாளர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் தலைமையில் நடத்த தீர்மானமாகி எல்லா ஏற்பாடுகளும் வெகு மும்மரமாய் நடைபெற்று வருவதை வாசகர்கள் பத்திரிகைகளின் மூலம் அறிந்திருக்கலாம். இம்மகாநாடு இதற்கு முன் இரண்டுதடவை தேதிகள் குறிப்பிடப்பட்டு எதிர் பாராத சம்பவங்களால் தடைப்படுத்தப்பட்டு விட்டது.

ஆனாலும், இப்போது முன் நடத்தப்பட்டிருந்தால் எவ்வளவு விசேஷமாய் நடைபெற்றிருக்குமோ அதைவிட பன்மடங்குவிசேஷமாக நடந்தேற காரியங்கள் நடந்து வருவதானது தலைவர் திருவாளர் சௌந்தரபாண்டியன் அவர்கள் தீவிர முயற்சி எடுத்து சுற்றுப்பிரயாணம் முதலியவைகள் செய்து வருகின்றதைப்பார்த்தாலே விளங்கும். கால நிலைமையும் முன்னையைவிட இப்போது சற்று திருப்திகரமாகவே காணப்படுவது மற்றொரு விசேஷமாகும்.

அதாவது வெய்யில் கொடுமை தணிந்திருப்பது ஒன்று. தண்ணீர் சௌகரியத்திற்கு சற்று அனுகூலமேற்பட்டிருப்பது மற்றொன்று. இவ்விரண்டையும்விட சுயராஜ்யம் என்னும் அரசியல் கிளர்ச்சி என்பதின் இரகசியம் பம்பாய் காரியக்கமிட்டியின் தீர்மானத்தால் ஒரு வகையில் வெளியானதின் பயனாய் சுயமரியாதை இயக்கத்தின் அவசியத்தை, அதை குற்றம் சொல்லிக்கொண்டு இருந்த மக்கள் முதல்யாவரும் அறிய நேர்ந்தது மூன்றாவதாகும். இப்படியாக இன்னும் பல நன்மைகள் ஏற்பட்டது முக்கிய அனுகூலங்களாகும்.

இந்த மகாநாடானது முன்னைய இரண்டு மகாநாடுகளைவிட சற்று முக்கியமானதென்றே சொல்லுவோம். சுருக்கமாய்ச் சொல்லுவதானால் இம்மகாநாட்டில் இயக்கத்தின் முற்போக்கை ஒருவிதம் நிர்ணயிக்கக்கூடியதாக இருக்கும். வரவேற்புக் கமிட்டியார் அறிக்கைகளிலிருந்து ஏராளமான பிரதிநிதிகள் வருவதாய் தெரிவித்துக் கொண்டிருக்கின்றதாய் தெரியவருகின்றதானாலும் எல்லாப்பாகங்களிலிருந்தும் வாலிபர்கள் தாராளமாய் வந்துசேரவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கின்றோம்.

மற்றும் மகாநாட்டிற்கு விஜயமாகும் பிரதிநிதிகள் அவசியம் தங்கள் தங்கள்வீட்டுபெண் மக்களையும் அழைத்து வரவேண்டியது மிகவும் அவசியமென வேண்டிக்கொள்ளுகின்றோம். பெண்கள் வருவதன் மூலமும், அவர்கள் உணர்ச்சி பெருவதன் மூலமும் தான் நமதுகொள்கைகள் வீரிட்டெழ முடியுமேயொழிய ஆண்களின் 'வீரஉரைகளால்' மாத்திரம் காரியங்கள் சாத்தியமாகிவிடாது.

ஆதலால் பெண்மணிகளும் தாராளமாய் விஜயம் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம். பெண்மக்களுக்கு சாப்பாடும், பிரவேசமும் இலவசமென்று வரவேற்புக்கமிட்டியார் தீர்மானித்திருப்பது போற்றக்கூடியதாகும். பெண்கள் மகாநாட்டுக்கு திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அம்மாள் அவர்களும் வாலிபர்கள் மகாநாட்டிற்கு திரு. நாராயணப்பெருமாள் M. L. C. (திருவனந்தபுரம்) அவர்களும் தலைமை வகிப்பார்கள்.

குத்தும், கொலை முயற்சியும்.

பம்பாய் கவர்னர் சுடப்பட்டார்.

இவ்வாரத்தில் அரசியல் சம்பந்தமாய் குத்தும் கொலை, முயற்சியும், கலகமும் நடைபெற்றிருப்பதாக பல இடங்களிலிருந்து செய்திகள் கிடைத்திருக்கிறது.

பம்பாய் கவர்னரை பூனாவில் ஒரு வாலிபன் ஒரு புத்தகசாலையைப் பார்வையிடும போது அவரை கொல்லக் கருதி துப்பாக்கியால் சுட்டிருக்கிறான். ஆனால் அக்கவர்னர் அதிசயமாய் தப்பித்துக்கொண்டிருக்கிறார். அதாவது அவரது சட்டைப்பையில் இருந்த ஒரு தினக்குறிப்புப்புத்தகத்தின் மூடிப் பொத்தானின் பேரில் அக்குண்டு பட்டதால் அது உடலில் பாயாமல்சட்டைப்பையிலேயே அக்குண்டு தாங்கிவிட்டது: மற்றொரு தரம் சுட்டும் அது அவர்மீது படவில்லையாம். ஏனெனில் அவன் குறிபார்க்கும் போதே கவர்னர் அந்த வாலிபனைப் பிடிக்கப் போனதால் வாலிபனின் குறிதவறி குண்டு அவர் மேலே படாமல் போய்விட்டது பிறகும் கவர்னரேதான் அந்த வாலிபனை எட்டிப் பிடித்தாராம்.

இந்தமாதிரி மற்றவர்களுக்கு நேர்ந்திருந்தால் "கடவுளே அந்த சட்டைப் பையிக்குள் வந்து இருந்துகொண்டு குண்டைப் பிடித்துக்கொண்டார் என்றுதான் சொல்லுவார்கள்- ஆனபோதிலும் இந்த கவர்னருடைய தைரியத்தையும், அவருடைய மன உறுதியையும் நாம் மிகவும் பாராட்டுகின்றோம். அவர் தப்பித்துக் கொண்டதைக் கூட நாம் அவ்வளவு பாராட்டவில்லை. என்றைக்கிருந்தாலும் ஏதோ ஒருவகையில் செத்துத் தீரவேண்டிய அந்த கவர்னர் இந்த வாலிபன் குண்டினால் செத்திருந்தால் உலகம் ஒரு புரம் தாழ்ந்து போய் விடாது. ஆதலால் கவர்னர் தப்பித்துக் கொள்வதும் இறந்துபோவதும் ஒன்று என்றேதான் கருதுகின்றோம். ஆனால்அகிம்சை அகிம்சையென்று

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பல்லவிபாடுவதின் தத்துவம் என்ன ஆயிற்று என்றுதான் கேட்கின்றோம். இதுபோலவே பஞ்சாப்பிலிருந்து வந்த இரண்டு இராணுவ அதிகாரிகளையும் யாரோ ஒருவன் குத்திவிட்டு ஓடிவிட்டான் என்றும் தெரியவருகின்றது. இவர்கள் இருவர்களுங்கூட பிழைத்துக் கொண்டார்களாம் இதனாலும் நாம் ஒன்றும் மகிழ்ச்சி அடையவில்லை. ஆனால் அஹிம்சைப் போரால் விளையும் பயன் என்ன என்பதை மக்கள் அறிய இதையும் ஒரு உதாரணமாய் எடுத்துக் காட்டுகின்றோம். அபிப்பிராய பேதப்பட்டவர்களையும் தங்கள் நன்மைக்கு விரோதமாக இருப்பவர்களையும் கொல்லுவதோ கொல்ல நினைப்பதோ மனித இயற்கைதானே ஒழிய வேறில்லை கொல்லாமல் இருப்பது தான் ஆச்சரியம் அதற்காகத்தான் அரசாங்கம் சட்டம்தண்டனை. ஆகியவைகள் இருக்கின்றன ஆதலால் அதிலும்ஆச்சரியப்படயிடமில்லை என்றாலும் தன் உயிருக்கும் துணிந்த ஒருவன் மற்றவனை கொல்ல நினைத்தால் அதற்கு யார்தான் என்ன செய்ய முடியும்? ஆனால் இந்த உணர்ச்சியை தப்பான வழியில் கிளப்பிவிடுவது என்பது மாத்திரம் பிசகு என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம். ஏனெனில் இச்சம்பவத்திற்கு அதாவது அவரைச்சுட்டதற்கு அச்சிறுவன் பொறுப்பாளியல்ல. மற்றப்படி யார் என்றால் அவ்வுணர்ச்சி அவனுக்கு உண்டாகும்படி நடந்து கொண்டவர்களே, உண்டாவதற்குத்தகுந்தபடி பிரசாரஞ் செய்தவர்களே தான் பொறுப்பாளியாக வேண்டும். சுடுபட்ட கவர்னர்இதை அறிந்து அந்த வாலிபனைப்பார்த்து 'இந்த முட்டாள் தனமான காரியம் செய்ய உன்னை தூண்டியவர்கள் யார்' என்று கேட்டிருக்கிறார் எப்படியிருந்தாலும் இனி இம்முறைகள் தான் எல்லா நிலைகளிலும் சகஜமாக இருக்கப்போகின்றது என்பது மாத்திரம் நமது உறுதி. இந்தப்படி இனிநடப்பதற்கில்லாமல் இருக்க வேண்டுமானால்உலகவாழ்க்கைப்பத்ததியானது அடியோடு திருத்திஅமைக்கப்படவேண்டும்.

புதுக்கோட்டை.

புதுக்கோட்டையில் டவுன் முனிசிபல் சங்கத்தார் முனிசிபாலிடி வரியை வழக்கப்படி ஐந்து வருடங்களுக்கொருதடவை பரிசீலனை செய்வது போன்ற முறையில் புதியவரி விதிக்கப்பட்டதின் காரணமாக பொது ஜனங்கள் தங்களுடைய குறைகளை சமஸ்தான தலைமை அதிகாரியாகிய உயர் திரு ராகவையாவிடம் கூட்டமாகச்சென்று சொல்லிக்கொண்டதில் அவர் அளித்தபதில் திருப்தியில்லாமல் போனதின் காரணமாய் ஜனங்கள் ஆத்திரப்பட்டு, பொறுமையிழந்து, பெரிய கலவரம் விளைவித்துவிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கின்றது. அச்செய்திகளில் கலவரத்தின் பயனாய் பலாத்காரங்களும், அடிதடிகளும் உயிர்ச்சேதங்களும், பொருள் நஷ்டமும் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

அதிகாரிகள் கலவரத்தை யடக்க சக்தியற்றவர்களாகி அவர்களும் நிலைமை தவறி நடந்து கொண்டதாகவும், உயிருக்கு பயந்து ஓடிவிட்டதாகவும் தெரியவருகிறது. அதிகாரிகள் ஓடியொழிந்துகொள்ள நேர்ந்ததை நம்மால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

"கலகம் செய்தவர்கள் வரிபோட்டப்பட்டக்காரணத்தைக்கொண்டு கலகம் செய்தார்களென்றாலும், கலகத்தின் தன்மையும், முக்கியமும் பார்ப்பனர் பேரிலுள்ள ஆத்திரமென்றே காணப்படுகின்றது.

அதாவது அந்த சமஸ்தானத்தில் பார்ப்பனர்களின் ஆதிக்கமும், அவர்களால் மக்களுக்கேற்பட்டு வந்த குறைகளே கலகத்தை சுலபத்தில் ஆரம்பிக்கச்செய்து விட்டதாய்த்தெரிகிறது. மெயில் பத்திரிகையில் காணப்படும் ரிப்போர்ட்டின்படி பார்த்தால் கலகக்காரர்களில் ஒருசாரார் பார்ப்பன அதிகாரிகளை உதைக்கவும், பார்ப்பனர் வீடுகளைக் கொள்ளையடித்து நாசமாக்கவும், அவர்களது பெண்களைப்பயமுறுத்தும் வேலையிலுமே ஈடுபட்டிருந்ததாய்த் தெரியவருகின்றது.

புதுக்கோட்டைசமஸ்தானமானது வெகுகாலமாகவே தென்னிந்தியாவில் பார்ப்பன ஆதிக்கத்தில் தலைசிறந்து விளங்கி வந்திருக்கின்றது. அச்சமஸ்தானத்து பார்ப்பனர்கள் காலநிலையையறிந்து, தங்களது நிலைமையைச் சரிபடுத்திக் கொண்டிருப்பார்களேயானால் இக்கலகம் இவ்வளவு கடினமான முறையில் நடைபெற்றிருக்காதென்றே சொல்லுவோம். புதுக்கோட்டை கலகத்தின் தத்துவமானது புதுக்கோட்டையுடன் நின்றுவிடுமென்றோ, பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதாரென்கின்ற முறையுடன் தான் நடைபெறுமென்றோ நாம் தீர்மானித்து விடமுடியவில்லை, மற்ற பிரதேசங்களிலும், பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார், கீழ் ஜாதிக்காரர்-மேல் ஜாதிக்காரர், இந்துக்கள்-முஸ்லீம்கள், முதலாளி-தொழிலாளி, ஜமீன் தாரன்-குடியானவன் காங்கிரசுக்காரன்-காங்கிரசல்லாதவன் என்பன போன்ற முறைகளில் நடைபெற்றுத்தான் தீரும். ஏனெனில், மேற்கண்ட மாறுபட்ட பெயர்களின் மூலம் ஒருவரையொருவர் அடக்கி ஆளுவதும், ஏமாற்றி வருவதும் கஷ்டப்படுகின்ற ஜனங்களுக்கு விளக்கமாய் தெரிந்து விட்டதோடு, மக்களுக்குள் சுயமரியாதை உணர்ச்சியும் தோன்றிவிட்டது. எந்த உணர்ச்சியையும் மனிதன் அடக்கக்கூடுமானாலும், சுயமரியாதையின் உணர்ச்சியை அடக்கக்கூடுமென்பது மிகவும் சிரமமான காரியமேயாகும். ஏனெனில், மனிதர்களுக்கு உயிரைவிட, சுயமரியாதையே பிரதானமென்பதாய்க்கருதுவது மனிதத்தன்மையின் பிறப்புரிமையாயிருப்பதால், அது காக்கப்படும் முறையில் கலவரங்கள் நடைபெற்றுதான் தீரும். அதை இனி எந்த அரசாங்கமோ, எந்த சுயராஜியமோ சுலபத்தில் அடக்கிவிட முடியுமெனக்கருதுவது கனவாகத்தான் வந்து முடியும்.

ஆகையால், ஆங்காங்கு மக்களை ஏமாற்றியதன் மூலம் ஆதிக்கத்தில் உள்ளமக்கள் இதை ஒரு முன் எச்சரிக்கையாகக்கொண்டு நடந்து கொள்ளவேண்டுமாய் விரும்புகின்றோம்.

ஜனாப் எம். ஜமால் முகமது சாயபு பகதூர்.

சென்னை தென்னிந்தியா வர்த்தகசங்கத்தாரினாதரவில் 30-7-31 ந் தேதி மாலை 5 30 மணிக்கு சென்னை கமாண்டர்—இன்—சீப் ரோட்டிலுள்ள வில்லிங்டன் பங்களாவில் ஜனாப் எம். ஜமால் முகமது சாயபு பகதூர் M. L. A. அவர்களுக்கு ஒரு பாராட்டு விருந்து நடைபெறுமென திரு. வி.சி. இரங்கசாமி அவர்களும், ஜனாப் பூசப்சேட் அவர்களும், அறிவிக்கிறார்கள்.

விருது நகர் சுயமரியாதை மகாநாடு.

விளம்பர அதிகாரியின் வேண்டுகோள்.

மகாநாட்டிற்கு வரும் டெலிகேட்டுகளின் சுகாதாரத்தைக்கவனிப்பதற்கு முனிசிபல்சுகாதார இலாக்கா அதிகாரிகள் வேண்டிய ஒத்தாசை செய்வார்கள். டாக்டர் ஸி. கிருஷ்ணசாமி எம். பி. பி. எஸ். டாக்டர் எஸ். நாச்சியப்பராமசாமி எல். எம். பி. டாக்டர் அம்புரோஸ், ஜெக்கப் எல் எம். பி. ஆகியவர்கள் டெலிகேட்டுகளின் ஜாகைகளுக்குச் சென்று வேண்டிய சுகாதார ஒத்தாசை செய்வார்கள். டெலிகேட்டுகளுக்குச்சௌகரியமானஜாகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஜில்லாவிலிருந்து எவ்வளவு பிரதிநிதிகள் வரக்கூடும் என்ற விபரம் முன்னடியே உபசரணைக்கமிட்டியாருக்கு மேற்படி ஜில்லா வாசிகள் தெரிவித்தால் ஜாகைகளை ஜில்லாவாரியாகப்பிரித்து பத்திரிகைகளில் விளம்பரப்படுத்த ஏதுவாக இருக்கும். ஆகையால் ஒவ்வொருவூர் பிரதிநிதிகளும் தங்கள் ஊரிலிருந்து எவ்வளவு பிரதிநிதிகள் வரக்கூடும் என்ற விபரத்தை தெரிவிக்க வேண்டுகிறோம்.

மகாநாட்டு டெலிகேட்டுகளின் ஸ்நானத்திற்காக அதிகசௌகரியம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஸ்நானஸ்தலங்களுக்கும் ஜாகைகளுக்கும் ஸ்பெஷல் கார் சர்வீஸ்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது மகாநாட்டிற்குப்பலர் பலவிதத்தீர்மானங்கள் அனுப்பியிருக்கின்றனர். மேற்கொண்டு தீர்மானங்கள் அனுப்ப விரும்புகின்றவர்கள் தங்கள் தீர்மானங்களை மகாநாட்டுக்காரியதரிசி திரு. வி. வி. இராமசாமி அவர்களுக்கு 31-7-31க்குள் அனுப்பக்கேட்டுக்கொள்கிறோம். மகாநாட்டிற்கு தொண்டு செய்வதற்காக திரு. பி. பி. எ. பி. நடராஜன் அவர்கள் தலைமையின் கீழ் தொண்டர்கள் பயிற்சி செய்து வருகிறார்கள்.

டிக்கட்டுகளும் வெளியூர்களில் விற்பனை செய்ய ஆரம்பித்தாய் விட்டது. உபசரணைக் கமிட்டித் தலைவர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களும் காரியதரிசி திரு. ராமசாமி அவர்களும் டிக்கட் விற்பனைக்காக இந்த மாதம் (ஜூலை) 23ந்தேதி அருப்புக்கோட்டையிலும், 24ந்தேதி மதுரையிலும், 27உ தூத்துக்குடியிலும் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு திருச்சி செல்வார்கள். திருவாளர்கள நாகர்கோவில் பி. சிதம்பரம் அவர்களுக்கும் திருச்சி விஸ்வநாதன் அவர்களுக்கும், காரைக்குடி முருகப்பா அவர்களுக்கும், ஈரோடு ஈ. வெ. இராமசாமி அவர்களுக்கும் சேலம ஜில்லா போர்டு உபதலைவர் இராஜமாணிக்கம் அவர்களுக்கும், கோயமுத்தூர் ஜில்லாபோர்டு தலைவர் சி. எஸ். இரத்தினசபாபதி அவர்களுக்கும், கும்பகோணம் சு. மாரிமுத்து அவர்களுக்கும் டிக்கட்டுகள் விற்பனைக்கு அனுப்பியிருக்கிறது. மேற்படி கனவான்கள் தங்கள் தங்கள் ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம்செய்தும, ஆள் அனுப்பியும் பிரசாரம் செய்து டிக்கட் விற்பார்கள். நமது இயக்க அன்பர்களான திருநெல்வேலி எஸ். குற்றாலலிங்கம், காரைக்குடி பொன்னம்பலம் ஜீவானந்தம் பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி, பி. எஸ். தண்டபாணி, மாயவரம் எஸ். வி. லிங்கம், சி. நடராஜன் அருப்புக்கோட்டை

புதுக்கோட்டையில் பெருங்கலகம்.

திருச்சிக்கடுத்த புதுக்கோட்டை சமஸ்தானத்தில் 15-7-31ந் தேதி செவ்வாய்க் கிழமையன்று முனிசிபல் வரியை உயர்த்தியிருப்பதைக்கண்டித்து 'ஹார்ட்டால்' அனுசரிக்கப்பட்டது. ஜனங்கள் யாவரும் ஒன்றுகூடி திவான் ரெசிடெண்டு அவர்களின் பங்களாவுக்குச் சென்று தங்களுடைய குறைகளைக் கூறி பொருளாதாரத்துறையில் ஜனங்கள் கஷ்டப்படுவதையும் உரைத்ததுடன், எந்த வரியை உயர்த்துவதற்கும் இது தகுந்த காலம் அல்ல என்பதாக தெரிவித்துக் கொண்டனர். ஆனால் திவானவர்களோ அவர்கள் கூறியதைக் கொஞ்சமும் கவனியாமல் அவர்கள் கூறுவதைக் கேட்கவே மறுத்துவிட்டாராம். இக்காரணத்தைக் கொண்டு புதுக்கோட்டையில் இவ்வளவு பெரிய கலகம் உண்டானது. இது முதல் தடவையாகவிருந்தபோதிலும் கவனிக்கத்தக்கவிஷயமேயாகும்.

இக்கலவரத்தினால் சமஸ்தானத்திற்கு அதிகபொருள் நஷ்டம் ஏற்பட்டிருப்பதுடன் சர்க்காரார் தஸ்தாவேஜுகளும் தீக்கிரையாக்கப்பட்டதொருபுறமிருக்க குடிகளின் உயிர், உடல், பொருளுக்கும் அதிக சேதாரம் ஏற்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. தற்போதுள்ள புதுக்கோட்டை மகாராஜாவானவர் பாலிய வயதுள்ளவராயிருப்பதனால் சமஸ்தானத்தின் நிர்வாகம் முழுவதும் திவானும், பிரசமநீதிபதியும் ஒருதலைவருமடங்கிய நிர்வாக சபையார் அரசியலை நடாத்திக் கொண்டு வருகிறார்கள். நிர்வாக சபையின் தலைவர் திவான்பகதூர் டி. ராகவையா அவர்கள் ஆவர். குடிகள் பஞ்சத்தினாலும், பணக்கஷ்டத்தினாலும் அதிகமாக பாதிக்கப் பட்டிருக்குமிச் சமயத்தில முனிசிபல்வரியை உயர்த்தியதுடனின்றி குடிகளின் குறைகளையும், நிர்வாக சபையின் தலைவர் கேட்கவேமறுத்து விட்டதினால் இக்கலகம் உண்டானதாக சொல்லப்படுகிறது. ஜனங்கள் இதனால் ஆத்திரமடைந்து சர்க்காரார் காரியாலயங்களையும், தலைவர்வீட்டையும் சூழ்ந்து கொண்டனர். திவான் முதலியோர் ஆத்திரமடைந்த ஜனங்களை சமாதானப்படுத்த முயன்றும் ஒரு பலனுமுண்டாகவில்லை. கூட்டத்திலிருந்தவர்கள் கற்களைவாரி சமஸ்தான உத்தியோகஸ்தர்களின் மீது எறிந்தவண்ணமிருந்ததாக சொல்லப்படுகிறது.

போலீசார் இச்சமயத்தில் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய நேரிட்டது. கூட்டத்திலிருந்த ஒருவர் அதனாலிறந்ததாகத் தெரியவருகிறது. இதனால் ஜனங்களுக்கு இன்னும ஆத்திரம் ஏற்பட்டு போலீசாரைத்துரத்த ஆரம்பித்தார்கள். சமஸ்தான உத்தியோகஸ்தர்களில் பலர் சர்க்கார் ஆபீஸ்களில் ஒளிந்துகொள்ளநேரிட்டது. சில உத்தியோகஸ்தர்கள் கல்லெறிபட்டதினால் காயமடைந்ததாகவும் தெரிகிறது.

நிர்வாகசபையின் தலைவர் திரு. ராகவைய்யாவின் வீட்டை குடிகள் முற்றுகை போட்டு கதவுகளையும், ஜன்னல்களையும், உடைத்து வீட்டிலுள்ள துணி மணிகள் எல்லாவற்றையும் தீக்கிரையிட்டதாகத்தெரியவருகிறது.

அவருடைய மோட்டார் செட்டிற்கும், தீ வைக்கப்பட்டது.

சமஸ்தான ஆபீஸ்களில் கதவை உடைத்து உள்ளேபிரவேசித்து முக்கியமான தஸ்தாவேஜுகளும், மாசாமான்களும் தீ வைக்கப்பட்டதுடன், பதினாயிரரூபாய் மதிப்புள்ள புஸ்தகங்களடங்கிய பார் லைபரரியும் கொளுத்தப்பட்டது. போலீசர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்இன்ஸ்பெக்டர் ஆகியவர்களுடைய வீடுகளிலும் கூட்டம் நுழைந்துவிலையுயர்ந்தசொத்துக்களையும கொளுத்திவிட்டது.

இன்னும சிலர் போலீஸ் ஸ்டேஷனுக்குச்சென்று போலீஸ்தஸ்தாவேஜுகளையும், துப்பாக்கிகளையும், போலீஸ் உடைகளையும் கைப்பற்றிக்கொளுத்திவிட்டனர்

மற்றொரு கூட்டம் சென்டிரல் ஜெயிலுக்குச்சென்று ஆங்கிருந்த ஜெயிலரை இம்சித்து ஜெயில்கதவுகளை உடைத்து எல்ல க்கைதிகளையும் விடுவித்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

புதுக்கோட்டைக்கு அப்பொழுதுவந்திருந்த மாஜிதிவான் திரு. கணபதி சாஸ்திரி அவர்கள் ஜனங்களுடைய குறைகளை நிர்வாக அதிகாரியிடம் உரைத்து புதுவரியை ரத்து செய்வதாகவும் துடபாக்கி பிரயோகத்தால் இறந்ததாகக்கூறப்படும் திரு பாலகிருஷ்ண பிள்ளை மரணத்தைக்குறித்துவிசாரணைசெய்வதுடன் அவருடைய குடும்பத்தாருக்கு நஷ்டஈடுவாங்கி அளிப்பதாகவும் கூறப்பட்டதின் மீது கூட்டம் சிறிது கலைந்ததாகவும் மாஜிதிவான் திரு. கணபதிசாஸ்திரி அவர்களின் உதவியால் சமஸ்தான நிர்வாக தலைவர் முதல் எல்லாஉத்தியோகஸ்தர்களும் அவரவர்களுடைய வீட்டிற்கு அழைத்துச் செல்லபட்டதாகவும் சொல்லப்படுகிறது.

ஆனால் நிலமை இன்னும்பயம் உண்டுபண்ணுவதாகவே இருக்கிறது. கடைகளும், காப்பி ஓட்டல்களும், இன்னும் திறக்கப்படவில்லை. கவர்னர்ஜெனரலின் ஏஜண்டிற்குத்தந்தி அனுப்பப்பட்டு அவருடைய வரவு எதிர் பார்க்கப்படுகிறது.

சமஸ்தான அதிகாரிகள் இராணுவ உதவிக்காகச்செய்தி அனுப்பியதின் காரணமாக 16-7-31ந் தேதி காலை திருச்சியிலிருந்து 100 பாஞ்சால சிப்பாய்கள் வந்து சேர்ந்தனர். இந்திய சர்க்காரின் ஏஜண்டும் அன்றிரவு திருவனந்தபுரத்திலிருந்து வந்துசேர்ந்தார்.

பிறகு அமைதி யேற்பட்டதாகக்கூறப்படுகிறது. கலகமிப்பொழுது புதுக்கோட்டைசமஸ்தானத்தைச் சார்ந்த கிராமங்களில் நடைபெற்றுக் கொண்டு வருவதாக ஏற்படுகின்றது.

பொ. தி. கருப்பையா, ஸ்ரீ வில்லிப்புத்தூர் பால்வண்ணம், விருதுநகர் டி. சி. கே. மாரியப்பன், எம். வெள்ளையப்பன், பி. பி. வி திருவண்ணாமலை, மதுரை ப. வ. விநாயகமூர்த்தி முதலியவர்கள் டிக்கட் விற்பனைக்காகப் பல பக்கங்களில் பிரயாணம் செய்வார்கள். தமிழ் நாடெங்கும் உள்ள நமது அபிமானிகள் நமது பிரதிநிதிகளுக்கு வேண்டிய ஒத்தாசை செய்து அதிகமான டிக்கட்டுகள் விற்பனை செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

சுமார் 10000 டெலிகேட்டுகளை எதிர் பார்த்து வேலைகள் நடைபெறுகின்றன. கொட்டகையில் ஒலி பெருக்கும் கருவியும், மின்சார விளக்குகளும், மின்சார விசிறிகளும் அமைக்க ஏற்பாடு செய்கிறது வரும் பிரதிநிதிகளின் சௌகரியத்தை உத்தேசித்து, ஓர் வாசகசாலை, புத்தகசாலையும், காபி ஹோட்டல்களும், கடைகளும், என்குயரி (Enquiry) ஆபீசும், இலவச ஆஸ்பத்திரியும், நியூஸ் ஏஜன்ஸியும் அமைக்கப்படும்.

தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி ஜில்லா பிரதிநிதிகளின் சௌகரியத்தை உத்தேசித்து மாயவரத்திலிருந்து ஓர் ஸ்பெஷல் வண்டி விடுவதற்கும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

நமது இயக்கசம்பந்தமான பல முக்கிய விஷயங்கள் விருதுநகர் மகாநாட்டில் முடிவு செய்ய வேண்டியதிருப்பதால், ஏராளமான பிரதிநிதிகள் விஜயம் செய்வதுடன் மகாநாடு சம்பந்தமான அபிப்பிராயங்களை ஒவ்வொருவரும் மகாநாட்டுக் காரியதரிசிக்கு லட்டர் மூலம் தெரிவிக்கக்கேட்டுக்கொள்கிறோம்.

டிக்கட் விபரம்,

பிரவேசக்கட்டணம் சாப்பாட்டுடன் போஷகர் ரூ. 10. உபசரணைக்கமிட்டி ரூ. 5. டெலிகேட் ரூ. 2. பெண்களுக்கு சாப்பாட்டுடன் பிரவேசம இனாமாக அளிக்கப்படும்.

S. உத்தண்டன்
விளம்பர அதிகாரி.

(10ம் பக்கத் தொடர்ச்சி)

மை அவருக்கு ஏற்பட்டு விட்டதால். பார்ப்பனீயத்திற்கு பாடுபடவேண்டியதாகவும் ஏற்பட்டுவிட்டது. ஆகவே இனி எந்தக்காரணத்தை முன்னிட்டும் திரு காந்தியிடம் நாம் சமதர்மத்தை எதிர்பார்க்கக்கூடுமேயானால் நாம் தான் மூடர்களாய்த் தீருவோம். அவரது ஆயுள் காலம் முடியும் வரை அவரிடம் சமதர்மத்தையோ ஒற்றுமையையோ காணமுடியாது. அவர் வடநாட்டுப்பணக்காரர்களையும் தென்னாட்டுப்பார்ப்பனர்களையும் தான் மனிதராய் கருதுகின்றார். அவர்களது சாவகாசம்தான் அவருக்குஉண்டு. அவர்களது குறைகளைத்தான் உலகக்குறைகளாகக்கருதுகின்றார் ஆதலால் திரு. காந்தியவர்களின் திட்டமெல்லாம் அவ்விருவருடைய அதாவது பணக்காரன் பார்ப்பான் ஆகிய இவர்களுடையகுறைகளைத்தீர்ப்பதாகத்தான் இருக்குமே ஒழிய ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள் கஷ்டங்களையும், குறைகளையும் நீக்குவதாக இருக்க முடியாது. ஏழைகள் பிழைக்கவும், தாழ்த்தப்பட்டவர்கள் உயரவும் அவருக்கு இரண்டுவழி தான் தெரியும். ஒன்று இராட்டினம் சுற்றுவது இரண்டாவது 'தீண்டாமை பாராட்டுவது பாவம்' என்றுவாயால் சொல்லுவது. இந்த இரண்டும்கூட மில்லுக்காரனையும், பார்ப்பானையும் கண்ட மாத்திரத்தில் தத்து வார்த்தம் சொல்ல வேண்டி வந்துவிடும். ஆகவே சகோதரர்களே! எனக்குத்தோன்றிய விஷயத்தை தலையாய்க்கொண்டு என் மனதில் உண்மையென்று பட்டதை நான் ஒழிக்காமல் சொல்லி விட்டேன். இவை அவ்வளவையும் கலப்பற்ற உண்மையென்றோ, முடிந்த முடிவு என்றோ, கருதி, கண் மூடித்தனமாய் ஒப்புக்கொள்ளாதீர்கள். நான் இந்தபடி சொல்லுவதற்குஎனக்குப் பல காரணங்கள் இருக்கலாம். சுயநலமிருக்கலாம். பொறாமை இருக்கலாம், வெறுப்பு இருக்கலாம், ஆகையால் நீங்கள் இவற்றை ஒவ்வொன்றையும் வைத்து உங்கள் சொந்தப் பகுத்தறிவை நடுநிலை தன்மையையும் கொண்டு ஆராய்ந்து பார்த்து, பிறகு உங்களுக்குப்பட்டபடி முடிவு செய்து கொள்ளுங்கள் என்று பேசினார். பிறகு தலைவர்கள் முடிவுரைகளுக்குப்பின் இரவு கூட்டங்கள் முடிவு பெற்றது.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மௌலானா ஷௌகத்அலியின் அறிக்கை.

“காந்திக்கு ஜே! சப்தம் காந்தி மூளையைக் கெடுத்துவிட்டது”

“காந்தியின் விஷயத்தை முஸ்லீம்கள் அறிந்துகொண்டார்கள்”

“இரத்தம் சிந்தப்பட்டால் காந்தியே ஜவாப்தாரி”

“காங்கிரஸ், மூஸ்லீம்களிடம் குரும்புத்தனமாகவே நடந்துவருகிறது.”

பம்பாயிலிருந்து மௌலானா சௌகத் அலி கீழ்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்.

“காரியக்கமிட்டி முன் நான்சொல்லியதைப்பற்றி திரு. காந்தி “யங் இந்தியா”வில் எழுதியிருப்பதைப்பார்க்க நான் வருந்துகிறேன். காரியக்கமிட்டிக் கூட்டத்திற்குப்போக நான் ஒரு நாளும், விரும்பியதே யில்லை. நான் முஸ்லீம்களுடைய உண்மைப் பிரதிநிதியா? அல்லவா? வென்று திரு. காந்தி வாக்கால் தீர்ப்புப்பெற நான் அங்கு போகவில்லை. திரு. காந்தி என்னைப்பார்க்க ஆசைப்படுகிறாரென்று திரு. அன்சாரி என்னை அழைத்த தாலேயே நான் அங்கு சென்றேன். என்னுடைய அபிப்பிராயத்தை டாக்டர் அன்சாரிக்குத் தெரிவித்து அவர் சொல்லுமபிப்பிராயத்தை முஸ்லீம்களுக்குச் சொல்லலாமென்றே ஆசைப்பட்டேன்.

‘இனி ஒரு பத்து வருடத்திற்கு தனித்தொகுதியே தானிருந்து வரவேண்டும். ஏனெனில், அதற்குள் முஸ்லீம்கள் தங்களுக்குள் சரியான ஒரு ஒழுங்கு முறையை யேற்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காகவேதான். அதன் பிறகு, மௌலானா முகமது அலி சொன்னது போல, 100-க்கு 40 வீதம் முஸ்லீம்களின் ஓட்டுகளை பெற்றபிறகுஇந்துக்கள் ஓட்டைகொண்டு, தேர்தல்முடிவு செய்வதென்கின்ற கொள்கையில் பொதுத்தொகுதி யிருக்கலாம்” என்பதே நான் தெரிவித்த அபிப்பிராயமாகும். அதற்கு நாளதுவரையிலும் யாதொரு பதிலும் வரவில்லை. தேசத்தின் நிலைமையையே திரு. காந்திக்குத் தெரிவித்தேன். அவர் இதை காரியக்கமிட்டியாரிடம் அறிவிக்கும்படி சொன்னார். அதன்பேரில் காரியக்கமிட்டியாரின் அழைப்பை யேற்று, என்மனதிலுள்ளதை தாராளமாய்த் தெரிவித்தேன். ஆனால், காரியக்கமிட்டிக்கு இது பிடிக்கவில்லை. அவர்கள் முஸ்லீம்களிடமிருந்து தானாகவே விலகிக்கொண்ட மௌலானா அப்துல் கலாம் ஆசாத்தை சேர்த்துக் கொள்வார்களென்று எனக்குப் பட்டுவிட்டது. காரியக்கமிட்டியின் அங்கத்தினர்கள் தங்களுக்குள்எவ்வித பிரிவுகளிருந்தபோதிலும் முஸ்லீம்களை நசுக்கும்விஷயத்திலும், முஸ்லீம்களுக் கிஷ்டமில்லாததொன்றை முஸ்லீம்களின்பிடரிமீதேற்றும் விஷயத்திலும் ஒற்றுமையாயிருக்கின்றார் களென்பதையுமறிந்தேன். காரியக்கமிட்டித் தீர்மானம் வெறும் கண்ணைத்துடைக்கும் பாவனையாகவேயிருந்தது. முஸ்லீம் வகுப்பினர்களிதை யேற்றுக்கொள்ளுவதற்கு அவ்வளவு முட்டாள்களல்ல. நேரு அறிக்கை புதைக்கப்பட்டுவிட்டதென்று அவர்கள் சொன்னார்கள். ஆனாலும், மறுபடியும் அவ்வறிக்கையை கொண்டுவந்துவிட்டார்கள். காரியக்கமிட்டி தீர்மானங்கூட என்னை அவ்வளவு புண்படுத்தவில்லை. ஆனால், திரு. காந்தி தமது பத்திரிகையிலெழுதி யிருக்கும் குறிப்பானது, அதாவது நான் காரியக்கமிட்டியில் பேசிய விஷயங்களை யெடுத்துப் போட்டு, என்னைக் கேவலப்படுத்தும் முறையிலெழுதியிருக்கும் வாசகங்கள் என்மனதை அதிகமாகப் புண்படுத்துகின்றது. அன்றியும், காரியக்கமிட்டியானது என்னை முஸ்லீம்களுடைய உண்மையானப் பிரதிநிதியாக ஒப்புக்கொள்ளவில்லை யென்று அதில் தீர்ப்புக்கூறியிருக்கின்றார். திரு. காந்திக்கு இந்திய பொது ஜனங்களின் பிரதிநிதியாயிருப்பதற்கும், மற்றவர்களுக்கு நடுநிலைமையான தீர்ப்பளிப்பதற்கு மெவ்வளவு உரிமையிருக்கின்றதோ, அதைவிட அதிகமான உரிமை (நான் ஒரு நாளும் கொண்டாடாவிட்டாலும்) எனக்கு முஸ்லீம்களின் பிரதிநிதியாயிருப்பதற்கு இருந்துவருகின்றதென்பதை தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

“காந்தியிடம் முஸ்லீம்களுக்கு சிறிதும் நம்பிக்கை கிடையாது. பாஞ்சாலத்தில் காந்தியை ஆதரித்தவர்களே இப்பொழுது, மயக்கம் நீங்கி, காந்தியையும், காங்கிரசையும் பலமாய்க் கண்டிப்பதை அவர் கவனிப்பாராக. காந்தி வார்த்தையை நம்பி சிறை சென்ற முஸ்லீம்கள் பஞ்சாபில் சீக்கியரைக் கொண்டும், சிந்துவில் இந்துக்களைகொண்டும் காந்தி விஷமம் செய்துவருவதை அறிந்து கொண்டார்கள். நாட்டில் கலகமும், குழப்பமுமேற்பட்டு, இரத்தம் சிந்தப்படுமானால் “சமாதான மூர்த்தி”யான திரு. காந்தியே தான் ஜவாப்தாரியாவார்.

காங்கிரசானது முஸ்லீம்களிடம் சதாகாலமும் குரும்புத்தனமாகவே நடந்து கொள்ளுவதோடு, தாழ்த்தப்பட்ட மக்களின் அபிப்பிராயத்தை அலட்சியம் செய்துகொண்டு தேசத்தில் பல் வேறு சமூகங்களுக்குள் கலகத்தையுண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றது.

‘முஸ்லீம்கள்தங்களுக்குள்ளாகவே சச்சரவிட்டுக்கொள்ளவேண்டு மென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஜவஹர்லாலின் யெண்ணம் ஒருநாளும் வெற்றிபெறுதென்று நான் உறுதி கூறுகிறேன். ஜவஹர்லால் நாணயமாக நடந்துகொள்ள வில்லை என்று அவருடைய நண்பர்களே அறிந்துகொண்டார்கள். திரு. காந்திக்கு சூக்ஷியான முறையிலன்றி, நேரான வழியில் காரியம் நடத்த ஏன் முடிவதில்லை?

‘காந்திக்கு ஜே!’ என்றுஎங்கும் கூச்சலிடும் சப்தமானது அவரது மூளையைக்கெடுத்து விட்டது. தலைவர்களாயிருக்க வேண்டியவர்களுக்கு யிருக்கவேண்டிய நிதான புத்தியை அவர் இழந்துவிட்டாரென நான் எண்ணுகிறேன்.

‘திரு. காந்தியும், காங்கிரசும் என்னதான் செய்தபோதிலும், முஸ்லீம்கள் மாத்திரம் சமாதானத்துக்காகவும், நன்மைக்காகவும் வேலைசெய்ய, தயாராயிருக்க வேண்டும். அதற்காகவே நான் சென்னை முதலான இடங்களுக்குச் சுற்றுப்பியாணம் செய்கின்றேன்.”

டில்லி முஸ்லீம் சங்கம்.

காங்கிரஸ் காரியக்கமிட்டித் தீர்மானத்தில் முஸ்லீம் மகாநாட்டின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப் படவில்லை யென்றும், தனித்தேர்தல் தொகுதி அவசியமென்றும், சர்க்கார் உத்தியோகங்களில் 100க்கு 30-வீதம் முஸ்லீம்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்றும், டில்லி முஸ்லீம் சங்கக்காரியதரிசி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்.

பிரபல விவாகம்.

கார்குடி.

13-7-31ந்தேதி பகல் 1-30 மணிககு மேல் 2மணிக்குள்ளாக கார்குடி திரு. ஆர். சின்னையா அவர்களின் குமாரர் திரு. சி. எம். இரத்தினம் அவர்களுக்கும், காசிங்கம் திரு. எஸ். குப்புசாமிபிள்ளை அவர்களின் குமாரத்தி திருமதி ராஜம்மாளுக்கும் மணமகளினில்லத்தில் திருமணம்நடந்தேறியது. பிறகு, 15-7-31ல் தம்பதிகள் கார்குடிக்கு (மணமகனில்லத்திற்கு) அழைத்து வரப்பட்டு, சங்கீதக் கச்சேரியும், சதிர்கச்சேரியும் பெரிய விருந்தும் நடந்தது. ஆங்கில முறையில் ஓர் சிற்றுண்டியும் நடந்தது.

அறிவிப்பு.

விருதுநகர் மகாநாட்டு டிக்கட்டுகள் இங்கு கிடைக்கும். வேண்டுவோர் இங்கெழுதவும்.

விலாசம் மானேஜர்,
“குடி அரசு”
ஈரோடு.

அறிவித்தல்.

இப்பொழுது (திருச்சிக்கன்னியர் மடத்தில்) கததோலிக்கக் கன்னிகாஸ்திரீபதவிக்குப் பயின்றுவரும் ஓர் கன்னிகையின்

“காதற் கடிதங்கள்”

எனும் பெயருடனும், தூத்துக்குடி பிஷப்புவினதும், பழையபாயல் “பங்குக் குரு” வெனும் (Rev: Mr. Benedict Fernando) பெனிடிக்ற் பெர்னாந்துவினதும் கபட சூட்சிகளையும், விபரீத நடத்தைகளையும்; திருச்சி வியாகுல மடத்துப் பெரியாத்தாளின் மோசடிக்கூற்றையும் விளக்கி யுரைக்கும் முகவுரையுடனும் ஓர் புத்தகம் தயாரிக்கப்பட்டு வருகிறது. வருகிற செப்டம்பர் மாதத்திற்குள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்துக்கொள்ளும் நபர் ஒன்றுக்குப் பிரதியொன்று இனமாயனுப்பப்படும்

எக்ஸ். எம். பாண்டியா,
மோரிஸ் ரோட், கொழும்பு.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நாடார் மஹாஜன சங்கம் மதுரை.

கவுன்சில் கூட்டம்.

ஜூலை 9ந்தேதி வியாழக்கிழமை மாலை 6மணிக்கு சங்க ஆபீசில் உப தலைவர் விருதுநகர் திரு.மு.ச.பெ. செந்தில்குமார நாடார் அவர்களின் தலைமையின் கீழ் கூட்ட நடவடிக்கைகள் நடைபெற்றன. கூட்டத்திற்கு பதின்மூன்று அங்கத்தினர்கள் ஆஜராகி இருந்தார்கள்.

1. 1931ம் வருஷம் ஜனவரிமீ 1உமுதல் மார்ச்சுமீ 31ந் தேதியோடுமுடிந்த மூன்று மாதத்திய வரவு செலவு கணக்குகளையும வேலைகளையும் பற்றிய ரிப்போர்ட்டு காரியதரிசி திரு. ஆ. உ. ஆறுமுக நாடார் அவர்களால் வாசிக்கப் பெற்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

2. 1931.32ம் வருடத்திற்கு ஏழைமாணவர்கள் ஸ்காலர்சிப் நிதியின் உதவியைக்கோரிவந்தஸகாலர்ஷிப் ஸ்கூல் கிராண்டுவிண்ணப்பங்களை பரிசிலனை செய்து முடிவு செய்வதற்காக அடியிற் கண்ட கனவான்களை ஒரு கமிட்டியாக நியமுகம் செய்யப் பெற்றது.

திருவாளர்கள். 1. பெ. சி. சிதம்பர நாடார் அவர்கள், விருதுநகர், 2. ஆ. உ. ஆறுமுக நாடார் மதுரை, 3. பா. ம. பாண்டிய நாடார் மதுரை, 4. பா. ரா முத்துசாமி நாடார் மதுரை, 5. ப. வ. சோமசுந்திர நாடார் மதுரை, 6. சூ. ஆ. முத்துநாடார் அருப்புக்கோட்டை, 7. எஸ். பி. வின்சென்ட் விருதுநகர்.

மேற்படி கமிட்டி அங்கத்தினர்கள் 12.7-31உ மதுரை சங்க ஆபீசில் காலை 10மணிக்கு கூடி ஸ்காலர்ஷிப்,ஸ்கூல் கிராண்டுவிண்ணப்பங்களை பரிசீலனை செய்து ஸ்காலர்ஷிப்புக்காக ரூ. 2600ம ஸ்கூல் கிராண்டுக்காகரூ. 600ம் கொடுக்க இக்கவுன்ஸில் அதிகாரம் கொடுக்கிறது.

மேற்படி கமிட்டிக்கு கோரம் நான்கு பெயர் கமிட்டியார்கள் செய்யும் தீர்மானம் உறுதியாகக் கருதப்படும்.

3. மதுரை தெற்குவாசல், நாடார் வித்தியாசாலை சுபெரஸ் பாண்டெண்ட் அவர்களிடமிருந்து உயாதர எலிமெண்டரி பாடசாலைக்காக ஸ்பெஷலாய் கிராண்டு கொடுக்க வேண்டுமென வந்த விண்ணப்பத்தை வாசிக்கப்பெற்று ரிக்கார்டு செய்யப்பட்டது.

4. 1929-30-1930-31ம் வருடத்திய கணக்குகளை பரிசோதிப்பதற்காக அடியிற் கண்ட கனவான்களை ஆடிட்டர்களாக தேர்ந்தெடுக்கப் பெற்றது. திருவாளர்கள் 1. பா. ம. பாண்டியநாடார் அவர்கள் மதுரை, 2 கே. துரைசாமி நாடார் அவர்கள் மதுரை,

5: அடுத்த 14வது கான்பரன்சை நடத்தும் விஷயமாய் அடுத்த கவுன்ஸிலுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இரவு 7மணிக்கு வந்தனோபசாரத்துடன் மீட்டிங் முடிவு பெற்றதென நிர்வாகஸ்தர் எழுதுகிறார்.

மதுரை முனிசிபாலிட்டி.

மதுரை முனிசிபாலிட்டியைக் கலைக்க சர்க்காரார் தீர்மானம் செய்து விட்டதாகத்தெரிகிறது.

சாத்தன் குளம்.

ஈ. வெ. இராமசாமி.

மீலாதே ஷரீப் கொண்டாட்டம்.

நாளது ஜூலை மாதம் 28ந் தேதி செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு கமாலியா முஸ்லீம் ஹையர் எலிமெண்டரிப் பாடசாலைக்காம்பவுண்டிற்குள் ஈரோடு "குடி அரசு" ஆசிரியர் திருவாளர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் தலைமையின் கீழ் விழா நடைபெறும். அவ்வமயம் அறிஞர்கள்பலர் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள் என்று மீலாதே ஷரீப் கமிட்டிக் காரிய தரிசி எஸ். எம். முஹம்மது அலி எழுதுகிறார்.

கும்பகோணம்.

சுயமரியாதை வாலிபர் சங்கம்.

5-7-31ந்தேதி மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று திரு. ராமய்பா அவர்களின் தலைமையின் கீழ் கூடி பலத்த வாதத்திற்குப்பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்கள்.

இந்துக்களின் பிரதிநிதியாகவும், இதர தேசிய சங்கங்களின் பிரதிநிதியாகவும், மகாத்மா காந்தியவர்கள் லண்டனில் கூடவிருக்கும் மகாநாட்டிற்கு செல்லுவதால் அவரிடம் நம்பிக்கையில்லையென இச்சங்கம் தீர்மானிக்கிறது.

2. திருவாளர்கள் எல். இராமநாதன் எம். ஏ. பி. எல். மாயவரம், எஸ். இராமச்சந்திரன் பி. ஏ. பி. எல். சிவகங்கை, ஆர். கே. சண்முகம், பி. ஏ. பி. எல். எம்.எல்.ஏ. கோவை ஆகிய மூவர்களையும் வட்டமேஜை மகாநாட்டிற்கு பிரமணரல்லாதாரின் பிரதிநிதிகளாக நியமிக்கவேண்டுமாய் மேன்மை தங்கிய ராஜப்பிரதிநிதி அவர்களையும், சென்னை கவர்னர் அவர்களையும பணிவுடன் இச்சங்கத்தார் கேட்டுக்கொள்கிறார்கள்.

3. இன்று இச்சங்கத்தாரால் தீர்மானிக்கப்பட்டிருக்குமேற்கண்ட இரண்டு தீர்மானங்களையும் இதர ஊர்களிலுள்ள சுயமரியாதைச் சங்கங்களும், சுயமரியாதைக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட இதர சங்கங்களும், இவைகளை ஆதரித்து ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

குறிப்பு;- இத்தீர்மானங்களின் நகல் சென்னை மாகாண கவர்னர் அவர்கட்கும், இராஜப்பிரதிநிதி யவர்கட்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

கோவை. சுயமரியாதைவாலிபர் சங்கம்.

12-7-31 மாலை 6-30 மணிக்கு வெரைட் ஹால் ரோட்டிலுள்ள உயர்தர பாடசாலைக்கு மேற்புர கட்டிடத்தின் மேல்மாடியில் திரு. சுந்தசாமி அவர்களின் தலைமையில் மேற்படி சங்க அங்கத்தினர்களின் கூட்டமொன்று நடைபெற்றது மழையின் காரணமாய் பலர் வராததால் சங்கத்தின் நிர்வாக அங்கத்தினர்களை 19.7-31ல் தேர்ந்தெடுப்பதென நிச்சபித்து அதுவரை கே. சிவப்பிரகாசம் அவர்களே காரியதரிசியாக இருக்கவேண்டுமெனவும், சங்க அங்கத்தினர்களின் பிரவேச கட்டணம் 1 ரூபாயெனவும் மாத சந்தா நான்கணாவென்றும் தீர்மானிக்கப்பட்டு கூட்டம் 8-30க்கு இனிது கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கிறிஸ்தவக்கோவிலுக்கு வெடி குண்டு.

ரோம்நகரத்திலுள்ள செண்ட் பீட்டர்ஸ் என்னும் உலகத்திலேயே முதன்மையாயிருந்த கிறிஸ்துவக்கோவிலைத் தகர்த்தெரிய, அக்கோயிலினோர் மூலையில் ஒரு வெடி குண்டு வைக்கப்பட்டது. அகஸ்மாத்தாக, அதுகண்டெடுக்கப்பட்டதின் மூலம், அக் கோயில் காப்பாற்றப்பட்டது.

(8ம் பக்கத்தொடர்ச்சி)

களின் கொள்கையை பின்பற்றும் இம்முஸ்லீம்கள் தங்களையேன் முஸ்லீம்களென்று சொல்லிக்கொள்ள வேண்டும்? ஏ, முஸ்லீம் சகோதரர்களே! ஏக அல்லா ஹுத்ஆலாவின்நம்பிக்கை எங்கே? உங்கள் பெண்களின் கோஷா முறை எங்கே? ஒரு முஸ்லீம் பெண் இருகண்ணும் தெரியாத குருடன் முகத்தையும் பார்த்தால் குற்றமென்று இருக்கும்போது கோஷா முறையைப்பற்றி நாம் அதிகம் எழுத வேண்டியதில்லை. தவிர, வாய்ப்பேச்சளவில் 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று பறைசாற்றுவதைத்தவிர, நம் இஸ்லாமிய தத்துவங்களையும், தங்கள் நடத்தையின் பேதங்களையும் சற்றே உற்று நோக்குங்கள். 'உன்னையே வணங்குகிறோம். உன்னிடமே உதவி தேடுகிறோம்' என்று உதவியழித்த ஈமான் உண்மையானதாயிருப்பின் திட்டமாக நீங்கள் ஆண்டவனுக்கு மாறுசெய்தவர்களாகி விட்டீர்கள். உடனே பிழையொறுக்கத் தேடுங்கள். எல்லாம் வல்ல இறைவனாகிய ஹக்சுபஹானுவத்தாலா பொறுத்தருள்வானாக! சகோதரர்களே! இக்கூற்றின் முடிவில் மறுமுறையும் தங்களை சந்திக்கிறேன்.

இனிது இனிது, இன்ஜெக்ஷனிலும் இனிது

R. K. பழனிஸ்வாமிகள்

இன்டியன் சக்கி முக்கி ஆயில்.

இவ்வற்புத சஞ்சீவினியை, எந்த ஜீவராசிகளுக்கேனும் உடல் வாதனையேற்பட்ட காலத்தில், டைரக்ஷனில் கூறியவண்ணம் மேல்பிரயோகமாக, சகல வியாதிகளுக்கும் உபயோகிக்க, உடனுக்குடனே நற்குணமளித்து, ஆபத்ரக்ஷகனைப்போல் நன்கு குணப்படுத்துவதால் ஒவ்வொரு குடும்பங்களிலும் பல ஆபீஸ், மில்கள், பற்பல இஞ்சின் சகலடிரைவர்களிடமும், மிஷின்கள் ஓட்டுமிடங்களிலும், நானாவித ஆயுதங்கள் புழங்கும் கிடங்கு, பட்டரை, ஒர்க்ஷாப், முதலானவிடங்களிலும், பல மிருக ஜாதிகளிடம் பழகுபவர்களிடமும், காடுகரை, தோட்டம், மலை, மரம், மண், கவலைக்கவாத்தினுகிவுபரசக்னிகளில் தொழில் புரிபவர்கள் முதலான மகாஜனங்கள் ஒவ்வொருவர்களிடமும், முக்கியமாய் இத்தைலமிருக்குமானால்; உலகத்தில் பம்பரம்போல் சுழன்றோடி ஓடிக்கொண்டிருக்கும் பற்பல அபாய விபத்துகளின் இம்சைகளினின்றும் பல அபமிர்த்துக்களினின்றும், சில கன்ம நோய்களினின்றும் விஷக்கடி, வெட்டுக்காயம், ரண வியாதிகளினின்றும் மீட்கப்படலாமென்பது மிகவும் உறுதி. இதின் முழு விபரங்களைப்பற்றி நமது கேட்லாக் மூலமாய் சகல உண்மைகளும் அறியலாம்.

கேட்லாக் இனாம்.

1 அவுன்ஸ் சக்கி முக்கி ஆயில் விலை ரூ. 2—0—0

1/4 அவுன்ஸ் ... ... விலை ரூ. 0—8—0

கோ. கோவிந்தராஜுலு செட்டியார்,

மளிகை அண்டு ஷாப் வியாபாரம்,

(துறையூர்) முசிரி தாலூகா, திருச்சி ஜில்லா.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

யாணம் செய்திருக்கிறார் என்றும் சொல்லி கடைசியாக வந்தனோபசாரம் கூறினார். பிறகு அடுத்த நாள் பகல் சாப்பாட்டிற்கு பிறகு மாயவரத்திற்கு திருவாளர்கள் இராமசாமி, இராமநாதன் முருகப்பா, கண்ணப்பர், அழகர்சாமி இராமாமிர்தத்தம்மாள் முதலியவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

மாயவரம்.

துலாக்காவேரி கட்டடத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூட்ட தஞ்சை ஜில்லா சுயமரியாதைக்கமிட்டியார் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் பேசப்படும் விஷயம் 'காங்கிரஸ் புரட்டு—காந்தி தவறு' என்பதாக நோட்டீஸ் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அதே சமயத்தில் காங்கிரசின் சார்பாய், மற்றொரு கூட்டமும் திரு கண்ணப்பர் பேசப்போவதாக யேற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஏககாலத்தில் இரண்டு கூட்டம் கூடாது என்று சுயமரியாதைக்கூட்டத்தை நிறுத்தி விடலாம் என்பதாக திரு இராமசாமி, திரு. இராமநாதன் முதலியவர்கள் எவ்வளவோ முயற்சித்தும், கூட்டம் ஏற்பாடு செய்தவர்கள் சம்மதிக்காததால், கடைசியாக மற்றொரு கூட்டம் முடிந்த பிறகே அதாவது 7-மணிக்கு மேல்தான் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அக்கூட்டத்திற்கு தலைமை வகிக்க திரு கே. வி. அழகிரிசாமி அவர்களை திரு சித்தக்காடு இராமய்யா அவர்கள் பிரேரேபிக்க, திரு ரயிலடி சின்னையா அவர்கள் ஆமோதிக்க, திரு. அழகிரிசாமி அவர்கள் தலைமையில் முதலில் திரு ஈ. வெ. இராமசாமி 1.30 மணி நேரமும், திரு சொ. முருகப்பா அரைமணி நேரமும் பேசிய பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவுக்கு வந்தது. பிறகு மறுநாள் காலை திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி, சொ. முருகப்பா, அழகர்சாமி, லிங்கம், வீரப்பா முதலியவர்கள் பட்டுக்கோட்டை சுயமரியாதைச்சங்கக்காரியதரிசி அவர்கள் அழைப்புக்கு இணங்கி பட்டுக்கோட்டைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள்.

பட்டுக்கோட்டை.

பட்டுக் கோட்டைக்கு பகல் 12-30 மணிக்கு வண்டி வந்ததும், ஒரு பெருங்கூட்டம் ரயிலடி மேடையில் வரவேற்று மாலையிட்டு டிராவலர்ஸ் பங்களாவுக்கு அழைத்துச்சென்று பகல் சாப்பாடு ஆனதும் சுற்றுப்பக்கங்களில் இருந்து வந்த பல நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில், திருவாரூரிலிருந்து திரு சாமி சிதம்பரனாரும் வந்து சேர்ந்தார். பிறகு 5 மணிக்கு பட்டுக்கோட்டை தாலூகா போர்டு பிரசிடெண்டும் சட்டசபை அங்கத்தினருமான திரு நாடிமுத்து பிள்ளை அவர்களது கொட்டகையில் கூட்டம் கூட்டப்பட்டது. சுமார் 1500 பேர்கள் விஜயம் செய்திருந்தார்கள். கூட்டத்திற்கு உயர் திரு சொ. முருகப்பா அவர்கள் தலைமைவகிக்கும்படி திரு ப. சு தண்டபாணி அவர்கள் பிரேரேபிக்க தமிழ்பண்டிதர் திரு திருஞானசம்பந்தமவர்கள் ஆமோதிக்க திரு சொ. முருகப்பா அவர்கள் தலைமை வகித்து தலைவர் முன்னுரை ஆனதும் திரு சாமி சிதம்பரனார் 'காங்கிரசு என்பது வருணாச்சிரம சபையாகும்' என்பதாகப் பேசினார். பிறகு திரு அழகர்சாமி அவர்கள் 'வாலிபர்களும் சாக்ரட்டீசும்' என்பதுபற்றி பேசினார். பிறகு திரு ஈ. வெ. இராமசாமி நோட்டீசில் குறிப்பிட்டபடி "காங்கிரஸ் புரட்டு காந்தி தவறு" என்பதுபற்றியே பேசினார். பிறகு தலைவர் முடிவுரையானதும் எல்லோருக்கும் மாலையிட்டு வந்தனோபசாரம் சொல்லி கூட்டம் முடிவுக்கு வந்தது. மறுநாள் காலையில் எல்லோரும் அவரவர்கள் ஊருக்குத்திரும்பி விட்டார்கள்.

சேலம்.

சுயமரியாதைச் சங்கம்:- 15-7-31 மாலை 6-மணிக்கு சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று சங்கக் கட்டிடத்தில் வக்கீல் திரு. எஸ். வ. ஐயாசாமி எம். ஏ. பி. எல். அவர்களின் தலைமையின் கீழ் கூடி கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு 8-மணிக்கு கூட்டம் இனிது முடிந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

தீர்மானம்:- தற்பொழுது லண்டனில் நடைபெற விருக்கும் வட்டமேஜை மகாநாட்டிற்கு சுயமரியாதை இயக்கத்தின் பிரதிநிதிகளாக திருவாளர்கள் [1] எஸ். இராமநாதன் எம். ஏ. பி. எல். மாயவரம், [2] ஆர். கே. சண்முகம் பி. ஏ. பி. எல்., எம். எல். ஏ. கோவை, [3] எஸ். இராமச்சந்திரன் பி. ஏ. பி. எல். சிவகங்கை ஆகிய கனவான்களைத் தேர்ந்தெடுக்குமாறு இந்திய கவர்ன்மெண்டாரை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

சுயமரியாதைத் தலைவர்கள்.

நமது சுயமரியாதை இயக்கத் தலைவர்களிலுயர்திரு இராமசாமிப் பெரியார், உயர்திரு சௌந்திரபாண்டியன் ஆகியஇருவர்களின் போட்டோக்களையும் தனித்தனியாக 1/4" சைசில் (Real Photo) உண்மையான போட்டோ பேட்ஜுகள் செய்து வெளியிட்டிருக்கிறோம். இதர தலைவர்களின் போட்டோ பேட்ஜுகள் சமீபத்தில் வெளியிடப்படும். விலை விபரங்களுக்கு எழுதவும். மாதிரிக்காக தேவையுள்ளோர் 4 அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பினால் மறுதபாலில் ஒன்று அனுப்பப்படும். விலாசம்:—

அ. ப. அர்த்தனாரிப்பிரதர்.
ஜலகண்டாபுரம், (சேலம் ஜில்லா,

குவின் மேரி பட்டுப் புடவை.

இது விலை யுயர்ந்த பட்டில் உடல் முழுவதும் 2," 3" அளவுள்ள தங்கச் சரிகைப் புட்டாக்கள் நிறைந்ததும், கரை, முந்தலை தங்கச் சரிகையினால் கொடி, செடி வேலைப்பாடுள்ளது. பல அழகிய விருப்பமுள்ள கலர்களில் செய்யப்பட்டது.

18 முழம் X 45" புடவை ஒன்றுக்கு விலை ரூ. 75, 85.

மற்றும் உடல் சாதா கரை, முந்தலை சரிகை வேலைப்பாடுள்ளதும், பட்டு வேஷ்டிகள், துப்பட்டாக்கள், பச்சாளுக்கள். ஸில்க் ஷர்டிங் பீஸ், கோட்டிங் பீஸ் முதலானதுகள் விலை நயமாய்க் கிடைக்கும்.

ஆர்டர்களை கவனித்து வி. பி மூலமாய் அனுப்பப்படும்.

எமது விலாசம்:—

V. Raja Ram & Co., Silk Merchants,
38|203 Ramapura, Benares City (India)

தயவு செய்து எமது விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.
வியாபாரிகளுக்கு விலை பிரத்தியேகமாய் கொடுக்கப்படும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

மக்களுக்கு நோக்கூடிய நோய்கள் பலவற்றிற்குக் காரணம், ஜீரணக்குறைவும், மலச்சிக்கலுமே யாகும். உணவு நன்றாக ஜீரணமாகி மலம் தினம் தாராளமாய் கழிந்தால் நோயற்ற வாழ்வும், நீடித்த ஆயுளும் பெற்று வாழலாம்.

ஜீரணி லேகியம்

உண்ட உணவை நன்றாக ஜீரணிக்கச்செய்து நாள்தோறும் மலத்தைக் கழித்து, பசியின்மை, பித்தவாயு, புளியேப்பம், சூலை எரிச்சல், வயிற்றுநோய், குன்மம், மார்புநோய், இடுப்புநோய், இருமல், மயக்கம், வாந்தி, நாவிற் சுவையின்மை முதலிய நோய்களை நீக்கும். அருந்தும்முறை கேட்லாக்கில் காண்க.

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தரின்
தமிழ் வைத்தியசாலை
221. தங்கசாலை வீதி, சென்னை.

தந்திவிலாசம்:— "மருத்துவன்" சென்னை.
டெலிபோன் நெ. 2584

விலை பெரிய டப்பி ரூ. 2-0-0 சிறிய டப்பி ரூ. 1-2-0

இனாம் கேட்டாலனுப்புவோம்; சுகவழி என்ற புத்தகம் இனாம்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கின்றார்கள். முகலாய மன்னர்கள் காலத்தில் அரசாட்சியின் லகானைகையிற்பிடித்திருந்த சூத்திரத்தாரிகள் பார்ப்பனரே. பின்னர் ஆங்கிலம் வந்தகால் அதில் நிபுணத்வம்பெற்று ஆட்சியினராய் விளங்குபவரும் பார்ப்பனரே; இனி இந்தியாவின் ஆட்சியைத் தங்கள் வயப்படுத்த என்னென்ன சூழ்ச்சிகள் புரியவேண்டுமோ, அவையனைத்தும் இப்போதுமுதலே ஆரம்பிக்கப்பட்டுவருகின்றன ஒருபுராணமொழியினை பார்ப்பனர்கள் பலர் ஏற்கனவே அறிந்திருந்தும் அதனை அறியாத பார்ப்பனர்களும் முன்னமே சமஸ்கிருதம் படித்திருக்கக்கூடுமாகையால் அந்த லிபியிலுள்ள ஹிந்தியை இலகுவில் படித்துக்கொள்ளக்கூடும் (சமஸ்கிருதம் படித்தவர்கள் இப்போதும் அர்த்தம் தெரியாமல் ஹிந்திபடித்தல் கூடும்). ஒரு பொது மொழியினைப் பொது மொழியில் மொழி பெயர்த்துவிட்டால் அப்போதும் பார்ப்பனரே அரசாட்சியின் சூத்திரதாரிகளாக்இருக்கலாமன்றோ?' என்று கூறப்பட்டதிலிருந்தும் வருங்காலத்திய சுயராஜிய அரசாங்கத்திலே ஹிந்தியைப் பொதுப்பாஷையாக்கி விட்டால் தாங்கள் எளிதாய் கற்கத்தக்க அல்லது கற்ற ஹிந்திப்பரீக்ஷையில் தேறி உத்தியோகங்களெல்லாவற்றையும் தாங்களே கொள்ளையடித்து இப்பொழுது உத்தியோகத்திலிருக்கும் பார்ப்பனரல்லாதமக்களை வெருட்டிவிட்டு தாங்களே ஏகபோகமாய் ஆண்டு பார்ப்பனரல்லாத மக்களை தாழ்த்தி அவர்களுக்குவேண்டும் கொடுமைகளியற்றி அடிமைகளைப்போல் நடத்திவரலாமென்றஎண்ணத்தினாலன்றோ ஹிந்திப்பிரசாரம் நடைபெறறு வருகிறது.

நமது மக்கள் பகுத்தறிவிற்கு மதிப்புக் கொடுப்பதில்லை. நம்மவர் பகுத்தறிவிற்கு ஒத்திருந்தாலும் சரி, ஒத்திராவிட்டாலும் இது பெரியோர் வாக்கு ஆச்சாரியார் மொழி, நாயன்மார் பாட்டு, மகாத்மாவின் அருள் வாக்கு, என்பதில் நம்பிக்கை கொள்ள ஆரம்பித்தார்களோ அன்றே மூடநம்பிக்கைகள் மலிந்து அடிமை வாழ்க்கைநிலைத்துவிட்டது. இதுபற்றியே தான் திருலெட்பீட்டர் அவர்கள் 'ஒரு விஷயம் பைபிளில்' எழுதியிருக்கிறது என்பதால் அதை நம்புகிறவன் சந்தேகமின்றி அந்த விஷயம் வரைக்கும் மூட நம்பிக்கையுடையவன் எனலாம். ஏனெனில் அந்த நம்பிக்கைக்குத்தகுந்த முகாந்திரம் அவனுக்குத்தெரியவில்லை. அப்படியிருக்க 'மேடம் பிளவட்ஸ்கி அம்மையார் இவ்விதம் சொன்னார்' அல்லது (Secret Doctrine) ல் இவ்விதம் எழுதியிருக்கிறது என்று சொல்லுவதும் மூடநம்பிக்கையைவிட ஒருபடிதான் முந்தி வந்திருக்கிறது. அதுஒரு படிதான். ஏனெனில் 'செயின்ட்பால்' அல்லது மற்ற புராதன ஆசிரியர்களைவிட 'மேடம் பிளவட்ஸ்கி' அம்மையாருக்கு தான் சொல்லும் விஷயங்கள் தெரிந்திருந்தது என்பதற்கு அநேக அத்தாட்சிகள் இருக்கின்றன. என்றாலும் செயிண்ட் ஜேம்ஸ் அல்லது செயின்ட் பீட்டர் அவர்கள் சொன்னார் என்பதைவிட மேடம் பிளவட்ஸ்கி சொன்னார் என்பதால் அது நம்முடைய சொந்த அனுபவமாகப்போகிறதில்லை. நாம் ஒரு விஷயத்தைத்தேர்ந்து கிரஹித்துக்கொண்டுஅதை நம்மறிவோடு அறிவாகச்சேர்த்து அதில் நாம் வளரவேண்டும். அதை நம்மில் வேறன்றவிடவேண்டும். நாம் கிளிப்பிள்ளைபோல் வாசித்ததைச்சொல்லிக் கொண்டிருக்கும் வரையில் விஷயங்கள் எல்லாம் மூடநம்பிக்கைகளே. இங்கே இதை எழுதியிருக்கின்றது, அங்கே எழுதியிருக்கின்றது என்பதைவிட்டு நல்ல முகாந்திரம் தெரிந்து சொல்லாவிடில் உண்மைப்பொருளில் இருக்கும் நம்பிக்கைகூட மூடநம்பிக்கைதான். நம்முடைய மனதோடு மனதாகும் போது 'அது எனது என்னுடைய சொந்தம், நான் ஏன் நம்புகிறேன் என்று எனக்குத்தெரியும், ஆதலால் எனது நம்பிக்கை அறிவோடுள்ள நம்பிக்கை. அதுமூடநம்பிக்கையல்ல' என்றுசொல்லலாம். 'அநேக சந்தர்ப்பங்களில் உண்மையாயிருக்கும் விஷயத்தில் கூட தெரியாத நம்பிக்கைகள் அதிகம் இருக்கின்றன' என்று கூறியுள்ளார். இதையறியாமல் நமது பார்ப்பனரல்லாத மக்கள் இன்னும் ஒருவர் சொல்லும் வார்த்தையின் பொருளையறியாமல் லாமெம்பர் சர் சி. பி. ராமசாமி சொல்லிவிட்டார். சாஸ்திரியார் கூறிவிட்டார். ஆசாரியார் அறைந்துவிட்டார். மகாத்மா சொல்லிவிட்டார் என்று ஒருவர் கூறிவிட்டால் அதை ஆராய்ந்து பாராமல் அவர்கள் வார்த்தைகள் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே கேடு விளைப்பனவாக இருந்தாலும் அவமானத்தை விளைப்பனவாக விருந்தாலும் ஒரு சிறிதும் கவலையின்றி அவ்வார்த்தையைப்பின் பற்றி நடக்க ஆரம்பித்து விடுகிறார்கள். ஆனால் தம்முடன் வாழும்பார்ப்பனர் மனப்பான்மையை ஒரு சிறிதும் ஆராய்ந்தார்களில்லை. திரு காந்தியவர்களானாலும் பார்ப்பனர் ஜாதிப்பெருமைக்கு விரோதமாகவோ, அவர்களின் அதிகாரத்தியிரை அடக்கும் நோக்கம் கொண்டோ, அல்லது அவர்களின் மதக்கொள்கைகளுக்கு விரோதமாகவோஒருவார்த்தைமொழிவாரானால் இன்று விஷ்ணுவின் அவதாரம், மகாத்மா மனிதசிரேஷ்டர் என்றெல்லாம் விளம்பரப்படுத்தும் ஆச்சாரிகளும் சாஸ்திரிகளும் சர்மாக்களும் பார்ப்பனபத்திரிகைகளும் காந்திபேரில் ஏராளமாக வசைபுராணங்கள்பாடி அவருடைய மகாத்மா பட்டத்தைப் பறித்துக்கொண்டுகாந்தி சாந்தியின்று மந்திபோன்று திரிந்து தலைதாழுழலும்படி செய்துவிடுவர். பார்ப்பனர்கள், எம்மனிதராயினும் தங்களுக்கு அனுகூலமாயிருக்கும் வரை அவரைப்பெரியமனிதராக்கி, தங்கள் காரியம் நடக்கும் வரையில் போற்றிக்கொண்டு அப்புறம் அவர்களை ஆழக்குழியில் தள்ளிவிடுவார் என்பதை நம்மக்கள் உணரவில்லை. ஹிந்திப்பாஷை விஷயத்திலும் காந்தியை தம்மிஷ்டம்போல் நடக்கச்செய்து 'ஹிந்தியின் பேரால் ஆண்டொன்றிற்கு பார்ப்பனச்சோம்பேறி கூட்டங்கள் லட்சக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடிக்கும் 'பார்ப்பனர் வயிற்றுப்பிழைப்பு நாடகம்' தமிழ்நாட்டின் பிரதான நகரங்களிலெல்லாம் நடைபெற்று வருகின்றது. இதனால் யான் ஹிந்திபாஷையே படித்தல்கூடாதென்று கூறுவதாக எண்ணிவிடற்க. ஹிந்தியைக் கற்பவர் கற்கட்டும். ஹிந்தியைப்பொதுபாஷையாக்கி பார்ப்பனரல்லாத மக்கள் படித்து முன்னேற முடியாத இப்பாஷையால் பார்ப்பனரல்லாத மக்களின் அபிவிர்த்திக்கு தடையையுண்டாக்கி வகுப்புவாரி பிரதிநிதித்துவமில்லாத வருங்கால சுயராஜிய அதிகாரபதவிகளை தாங்களே கொள்ளை கொண்டுபோக நினைக்கும் சூழ்ச்சியையும் ஹிந்திப்பிரசாரத்தின் பேரால் பார்ப்பனச்சோம்பேறிகள் லட்சக்கணக்கான ரூபாய்களை ஆண்டுகள் தோறும் விழுங்குவதையும் நம் வன்மையாய்க்கண்டிக்கின்றோம். இன்று உண்மையாய்க் கண்டிக்கின்றோம். இன்று உலகப்பொது மொழியாய் விளங்குவது ஆங்கிலமே. எந்நாட்டாருமே ஆங்கிலத்தை அறிந்தவர்களாய் இருக்கின்றார்கள். இங்கிலாந்தின்பிடிப்பினின்று விலகிவாழ நினைக்கும் இந்தியர் உலகப்பொது மொழியாய் விளங்கும் ஆங்கிலத்தை அறவே வெறுப்பது அறிவுடைமையாகாது. நமக்கு எம்மொழியின் பேரிலும் பகையில்லை. ஆங்கிலேயர்களிடமும் பகையில்லை. அவர்கள் ஆட்சிமுறையைத்தான் நாம் வெறுக்கின்றோம், கண்டிக்கின்றோம், அழிக்க விரும்புகின்றோம். எனவே நம் தமிழ் மக்கள் கிணற்றுத்தவளைகள் போன்றில்லாது உலகத்தோடு ஒட்ட ஒழுகவிரும்பினால் ஆங்கிலத்தையே உலகப்பொதுபாஷையாகக்கொள்ளக்கிளர்ச்சி செய்யவேண்டும். வேண்டுமானால் தற்கால ஆங்கிலப்படிப்பு முறைகளை மாற்றிக்கொள்ளட்டும். பின்னர்பிற எம்மொழிகளுக்கும் இலக்கண இலக்கியச்செறிவில் தலைகவிழ்க்கும் தன்மையில்லாத பிறபாஷையின் உதவியை ஒரு சிறிதும் நாடாது தனித்தியங்க ஆற்றலுடைய அமிழ்தினுமினிய தமிழ் மொழியை இயற்கைத்தாமொழியை காவியம், ஓவியம், இலக்கணம், இலக்கியம், நீதிநூல் முதலிய பல அரிய நூற்கள் பலதிகழும் உயர்தனிச்செம்மொழியை இந்தியாவுக்குப்பொது மொழியாக்கவேண்டும். தமிழர்களே! இதற்காக நீங்கள் கிளர்ச்சி புரிதல்வேண்டாமா? உங்களால் கிளர்ச்சிபுரிதல் கூடாதா? உங்களின் உடலில் தமிழரின் இரத்தம் ஓடுகின்றதா? ஓடுகின்றதெனின் உங்கள் தமிழ்த்தாயை இந்திய நாட்டிற்கு அரசியாய் சிம்மாதனத்தின்மீதிருத்தி சக்கிரவர்த்தினியாய்க்கண்டு களிக்கும் விருப்பமில்லையா? ஒரு காலத்தே இந்தியா நாட்டிற்கே—ஏன்?—உலகத்திற்கே ஓர் சக்கிரவர்த்தினியாய்,

சதுமறை ஆரியம் வருமுன்
சகமுழுது நினதாயின்
முதுமொழி நீ அனாதியென
மொழிகுவது வியப்பாமே''

என்று போற்றப்பட்ட தமிழ்த்தாய் ஆரியம் ஹிந்துஸ்தானி, ஆங்கிலம்முதலிய பாஷைகளுக்குக்கீழ் பட்டு தம் அரசுரிமையை யிழந்து இந்தியாவின் தென் கோடியில் அவள் மக்களாலே கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் இன்றி இருப்பதா? இறப்பதா? என்று தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழர்களே! தூக்கத்தினின்று விழித்து உங்கள் தாயின் துன்பந்துடைத்து அவளைச் சக்கிரவர்த்தினி யாக்க வேண்டியது உங்கள் கடமை யன்றோ? நீங்கள் நினைத்தால் முடியாததென்பதில்லை. இன்னும் தமிழ்த்தாயின் விரோதியாகிய சமஸ்கிருதத்தின் மகள் ஹிந்தி என்னும் மாதரசியின் கீழ் உங்கள் தாயாகிய கன்னித் தமிழ்த் தாயார் அடிமையாய் வாழச்செய்யும் காந்தி அவர்களின் சூழ்ச்சிக்கு இடங்கொடாதீர், தமிழர்களே! இடங்கொடுத்துவிட்டால் உங்களுக்கு வரப்போகும் கேடுகள் பலவுள. எமது சகோதரர்களாகிய தமிழ்ப்பண்டிதர்களே! சைவத்தலைவர்களே! எழுந்திருங்கள்! நீங்கள் இத்தனை நாட்களாய்த்துயின்றது போதும். தன்மதிப்பியக்கத்தாரால் தஞ்சை ஜில்லா நன்னிலத்தில் கூடிய மஹாநாட்டிலே 'பழையபுராணக்கதைகளை சொல் வதைத்தவிர வேறு அறிவுவளர்ச்சிக்கும் மற்றப் பொது விஷயங்களுக்கு உதவாத சமஸ்கிருதம் ஹிந்தி முதலிய பாஷைகளைத் தேசியத்தின் பேரால் அரசியல் காரணங்களுக்காக வென்று படிக்கச்செய்வதானது பார்ப்பனீயத்திற்கு மறைமுகமாக ஆக்கம் தேடுவதாகுமென்று இம்மஹாநாடு கருதுவதோடு, தற்கால விஞ்ஞான அறிவை நமது மக்களிடம் பரப்பவும்நவீனதொழில் முறைகளை நாட்டில்ஏற்படுத்தவும் மற்றதேசங்களில் எழும்பியிருக்கும் சீர்திருத்த முற்போக்கு உணர்ச்சிகளை நமது மக்களிடம்புகுத்தவும் உலகபாஷையாக வழங்கி வரும் இங்கிலீஷ் பாஷையையே நமது வாலிபர்கள் கற்க வேண்டுமென்று இம்மஹாநாடு தீர்மானிக்கிறது'' என்றசங்கத்தொனியையும் தமிழ் நாட்டில் ஆங்காங்கே உயர்திரு ஈ. வே. இராமசாமி அவர்கள் "தமிழ்த்தாய்க்கு யோக்கியதை இருந்து அவள் தகுந்த மானமுள்ள மக்களைப்பெற்று இருந்தால் நாட்டுநலனுந்து ஏற்ற சகல விஷயத்தையும் தமிழிலேயே ஆக்கியிருக்க வேண்டும் நாட்டிற்கு தமிழே போதுமான தாயிருக்கவேண்டும். அப்படி யில்லையானால் தமிழ்த்தாயின் தகுதிக்கும் அவசியத்திற்கும் ஏற்றதளவோ அதைக்கொள்ள வேண்டும்'' என்றும் யாண்டும் இடியோசை யென எக்காளம் ஊதிவருவது உங்கள் செவியிலேற வில்லையா? உங்கள் உடன் பிறந்த

சகோதரர்களாம், தமிழ்த்தாய் பெற்ற மக்கள் போல் பாசாங்கு செய்யும் மாற்ருந்தாயாகிய வட மொழி மாதின் புதல்வர்களாகிய பார்ப்பனர் மயக்க மருந்தை யூட்டி தூக்கத்திலே உங்கள் அரிய காலத்தை யெல்லாம் வீணாக்கி உங்கள் தாயை இன்னலுறச்செய்தது போதும். "படமுடியா தினித்துபரம் பட்டதெல்லாம் போதும்" என்று உங்கள் தாய் அலமருகின்ருள். அவள் கூப்பாட்டிற்கு செவி சாய்க்காது உங்களுக்குள்ளே பிளவு பட்டு ஒருவரை யொருவர் திட்டிக்கொண்டு உங்கள் தாயின் பழைய நிலையையும் உடையையும் அழகையும் புகழ்ந்து கொண்டிருக்கப் போகின்றீர்களா? பண்டித சகோதரர்களே! சைவசபைகளிலேயும் தமிழ்ச்சங்கங்களிலேயும் நீரிலங்கும் நெற்றியினராய் உடலில் உருத்திராக்கம் புரள 'சிவ சிவ' என்னும் சீரிய மந்திரத்தை யுச்சரித்து நூற்றிற்கு தொண்ணூற் றொன்பதின்மர் விளங்கிக்கொள்ள முடியாத பிற மொழிகப்பில்லாத தூய தனித்தமிழ்ப்பிரசங்கத்தை ஆரம்பித்து இடையே,

"கடையுழி வருந்தனிமை
  கழிக்க வன்றோ அம்பலத்துள்
உடையார் உன் வாசகத்தில்
  ஒரு பிரதி கருதினதே"

என்ற ராவ்பஹதூர் சுந்தரம் பிள்ளை எம்.ஏ. அவர்கள் பாடிய தமிழ் வணக்கச்செய்யுளேயும்,

"முடுக்க வின் பெற கண்டனும்
  தென் திசை நோக்கி
அடுக்க வந்து வந்து ஆடுவான்
  ஆடலின் இளைப்பு நீங்கி
விடுக்க வார மென் கால்
  திருமுகத்திசை வீசி
மடுக்கவும் தமிழ் திருச்
  செவி மார்தவு மன்றே"

என்ற பாடலேயும் இன்னும் "தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்ததும்" என்ற பாடலேயும் இன்னும் தமிழின் பெருமையைக்குறித்து பாடிய பலபுலவர்களின் அழகிய பாக்களேயும் பாடிவிட்டு "தென்னாடுடைய சிவனே போற்றி, என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற கூப்பாடு போட்டு விட்டுப்போவதில் பயனில்லை. அல்லது தமிழ் ஆரியத்துக்கு முந்திய மொழி தமிழ். உலகிலே அதிக மூச்சை செல வழியாது இலகுவில் பேசும் இயற்கை மொழி என்று அதன் தொன்மையையும் நன்மையையும் 50 பக்கத்தில புத்தக ரூபமாய் வெளியிட்டு இரண்டு ரூபாய் விலைக்கு விற்பதினுல் தமிழுக்கு நன்மை யுண்டாகப்போவதில்லை இன்னும் எச்சங்க விழாவிற்கு சொற்பொழிவாற்ற அழைத்தாலும் ஒரு பிரசங்கத்திற்கு 300 ரூபாய்க்குக்குறைந்து செல்லும் வழக்கம் கிடையாதென்று கூறிக்கொண்டிருக்கும் துறவிகளினுலோ, அல்லது நமக்குத்தான் தமிழ் பண்டிதர் உத்தியோகத்தில ரூ. 80 சம்பளம் கிடைக்கிறதே! தமிழின் முன்னேற்றத்தை கருதியுழைக்கப்போய் அங்கு காந்தியின் "ஹிந்தி" க்கொள்கையைக்கண்டித்து காங்கிரயர்களின் தூற்றலுக்கும் மிரட்டலுக்கும் நாம் ஆட்படுவதோடு ஒரு சமயம் நம் உத்தியோகத்திற்கே அபாயம் வந்தாலும் வந்துவிடும் என்றஞ்சி தன் சாப்பாட்டின் பேரிலே கண்ணுயிருக்கும் தமிழ்பண்டிதராலேயாவது 'நன்மை யான தாயிருந்தாலும் சுயமரியாதைக் காரர்கள் சொல்லி விட்டால் நான் அதை ஒத்துக்கொள்ள மாட்டேன்' என்று கூறும் முதலியார்களாலவது தமிழ்ப் பாஷை முன்னேற்ற மடையப்போவதில்லை. சுய நலத்தை தியாகம் செய்து எதற்கும் அஞ்சாது உண்மைக்கு உழைக்கும் உத்தமர்கள் தமிழ்த்தாயின் இன்னலே நீக்க முன் வந்தால் ஏதாவது நடைபெறும். அன்றேல் வருங்கால சரித்திரத்திலே "தமிழ்" என்ற ஒரு பாஷை இருந்தது என்று தான் எழுதப்படும் என்பது உறுதி என்று தமிழர்களுக்கு எச்சரிக்கை செய்கின்றேன். பார்ப்பனரல்லாதார் நலங்கள் வருங்காலத்தில் "ஹிந்தி" பாஷையால் பறிக்கப்படு மெனப்பகர்கின்றேன். ஆகையால் அன்பர்களே! ஹிந்தியைக்காந்தி பொதுப்பாஷையாக்கத்துணிவது பார்ப்பனரல்லாதார் பார்ப்பனர்களோடு உத்தியோகத்துறைகளிலும் இதர துறைகளிலும் போட்டி போட்டு தங்கள் உரிமையைப் பெற வொட்டாது தடுக்கும் பார்ப்பன சூழ்ச்சி யென்பதை நன்கறிந்து தமிழறிஞர் களெல்லாம் உலகத்திற்குப்பொது மொழி ஆங்கில மாக இருக்கவேண்டு மென்றும் இந்திய நாட்டிற்கு பொது பாஷையாக தமிழ் இருக்கவேண்டும் என்றும் கிளர்ச்சி செய்யுங்கள். இக்கிளர்ச்சியைப்புரிய நம் தமிழ் நாட்டில் ஒரு மஹாத்மா இல்லேயா? அடிகளும், முதலியாரும், பிள்ளேயும், நாட்டாரும் முன்வரப்போகின்ருர்களா? இல்லேயா? பார்ப்போம்!

மணமகன் தேவை.

சைவவேளாள மரபிலுதித்து அம்மரபிலே ஒருவரை மணஞ்செய்து கொண்ட பெண், தன்கணவன் இரண்டாவது விவாகம் செய்து கொண்டதை முன்னிட்டு, விவாக ரத்துச்செய்து கொண்டதால் ஷை பெண்ணுக்கு மணமகன் தேவை. மணமகளுககு வயது 23 ஆகிறது. மணமகன் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தவராகவும், ௴ 1க்கு ரூ. 30 அல்லது 25 க்குக் குறையாத வருமான முள்ளவராகவும், நன்ருய்ப் படித்தவராகவும் சுயமரியாதைக் கொள்கைக் குழைக்கும் நோக்குடையவராகவுமிருக்தல் வேண்டும். ஷை பெண் சிறிது கல்வி கற்று வருவதால் கற்பிக்கும் அவாவுடையவராயிருக்க வேண்டும். மணமகன் எந்த மரபெனினும் பாதகமில்லை. விருப்ப முள்ளவர்கள் 'குடி அரசு' பத்திராதிப ரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளலாம். விவாகம் சிக்கன முறையில் சுயமரியாதைக்கொள்கைப்படி நடை பெற வேண்டும்.

X C/o "குடி அரசு" ஈரோடு

சுயராஜியமென்பது பார்ப்பன ராஜியம்.

கோடையிலே இளைப்பாறிக்கொள்ளும் குளிர் தரு எது?

எஸ். தருமாம்பாள் தயாரிக்கும்

சித்தர் மகா சந்தனாதித் தைலம்.

ஈ. வெ. இராமசாமி பெரியார் கூறுவது:—

"சித்தர் மகா சந்தனாதித்தைலம் என்பது மிகவும் வாசனை பொருந்தியதாகவும், ஸ்நானம் செய்து கொண்டால் மிக்க குளிர்ச்சியைத் தரக்கூடியதாகவும், கூந்தல் வளரவும், கூந்தல் உதிர் வதைத் தடுக்கவும், தலைவலி, கண்ணோய் முதலிய சூட்டினுல் உண்டாகும் வியாதிகளைத் தடுக்கவும், மிகவும் உபயோகப்படக் கூடியதாயிருக்கின்றது. தலைவாரிக் கொள்ளவும், ஸ்நானம் செய்யவும் இரண்டிற்கும் உதவும்படியான சிறந்த தைலம் இதுவே

கொடிய வெய்யிலாலும், அதிக வேலையாலும், இன்பநுகர்ச்சியாலும், மூளை கொதிப்புற்று அழல்கண்ட திரேகங்கட்கு இரண்டு, மூன்று ஸ்நானங்களில் உடனே குணமில்லா விடில் பணம் வாபீஸ். வழுக்கைத்தலையிலும் கூந்தல் வளரும், கை கண்டது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி M. B. & C. M. கூறுவது:—

"சகோரி தருமாம்பாள் அவர்களால் முடிக்கப்பட்ட சித்தர் மகா சந்தனாதித் தைலத்தின் குணத்தைப்பற்றி நற்சான்றுகூற நான் மிகவும் மகிழ்கின்றேன். இத்தைலம் மூளைக்குக்குளிர்ச்சி தருவதில்மிக இன்றியமையாதது. கூந்தலுக்குச்சிறந்தது. இதுமனோகரமாயிருத்தலோடு, நல்ல மணமும் உடையதாகும்......நமது மூளையையும், கூந்தலையும் நல்ல நிலையில் வைத்திருக்க விரும்புவோர்களுக்கு நான் இதனை உபயோகிக்கும்படி பாராட்டிக் கூறுகிறேன்.

6 அவுன்சு 1—0—0, 12 அவுன்சு 1—14—0, 24 அவுன்சு 3—12—0

சித்தானந்த வைத்திய சாலை, 35, அண்ணு பிள்ளை தெரு, சென்னை.

(4ம் பக்கத்தொடர்ச்சி)

போக்கியங்களை தீங்கிழைக்க கனவிலும் நினைக்கவில்லையாம்! அதே சமயத்தில் சமத்துவத்திற்தும் உழைக்கிறாம்! ஒரு தாரசின் இரு தட்டுகள் ஒன்றுகீழும் ஒன்று மேலுமாக இருந்தால் கீழிருக்தும் தட்டை (ஏழைகளை) உயர்த்தும்போது மேலே இருக்தும் தட்டு (பணக்காரர்கள் ஜமீன்தாரர்கள் ராஜாக்கள்) தாழாமலிருக்க முடியுமா? என்னே விந்தை! என்னே புரளி!! என்னே ஜாலம்!!! கடவுள் வாக்கியமென்று, வேதவாக்கியமென்று எப்படி ஆராய்ச்சியில்லாமல் நம்பி ஏமாந்தார்களோ, அம்முறையிலேயே மகாத்மா வாக்கியம் காந்தியடிகள் வாக்கியம், மகாத்மா மணிவாசகம் என்று பத்திரிகைக்காரர்கள் பிரமாதப்படுத்துவதை நம்பி மூடத்தனமாகப் பின்பற்றுகிறார்களே ஒழிய அதில் அர்த்த புஷ்டி உண்மை உண்டா? இல்லையா? என்று பார்ப்பதில்லை.

ஒவ்வொரு சார்பாருக்குப் பயந்து ஒவ்வொரு கொள்கையை நழுவவிடும் ஒரு கட்சியினால் ஒவ்வொருவருக்காக பயந்து சாமர்த்தியமாய், சூட்சியாய் பதங்களை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கும் அந்த ஸ்தாபனத்தினால் எந்த உருவமான காரியத்தை சாதிக்க முடியும்? என்பது எனக்கு விளங்கவில்லை.

ஒரு வைத்தியன் காய்கரிவாங்க கடைக்குப்போய் இது பித்தம், அது உஷ்ணம், உருளைக்கிழங்கு வாய்வு என்று ஒன்றும் வாங்காமல் திரும்பி வந்ததைப்போலவே யாதும்.

மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வை போக்குவது என்ற உயர்ந்த லட்சியத்தைக் கொண்ட எந்தக் கட்சியானாலும், அதில் சேருவதில் ஆக்ஷேபணை இல்லை. காங்கிரஸ் மேலே சொன்ன லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல வென்பதையும், காங்கிரஸ் கர்த்தாக்கள் சமதர்மத்திற்கு நேர் விரோதிகளான "கடவுள் செயல் பிதுர்லோகம், ராமராஜியம்" முதலியவைகளை மிகவும் நேசித்து அளவளாவிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் யாவரும் அறிந்ததே. அப்படியிருக்க காந்தி பக்தர்களும், ஜவஹர்லால் பக்தர்களும் முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைத்த மாதிரி 'காந்திக்கும், ஜவஹர்லாலுக்கும் உள் அபிப்பிராயம் அது தான். ஆனால் அதை இப்பொழுது வெளியில் சொல்லக்கூடாது என்ற கொள்கையுடனிருக்கிறார்' களென்றும், ஜோசியம் சொல்லுவதும் பெரிய ஆராய்ச்சிக்காரர்கள் மாதிரி இன்னொருவருடைய மனதிலிருப்பதைப்பற்றி யாதொரு பொறுப்புமின்றி வெளியிடும் யோக்கியதையைப்பார்த்தால் அழுவதா? சிரிப்பதா? வென்று தெரியவில்லை.

சமதர்மம் எதை வேரோடு தகர்த்து வீழ்த்த வேண்டுமென்று சொல்லுகிறதோ, அதையே நாட்டி தண்ணீர்பாய்ச்ச வேண்டுமென்றும், அதற்குத்தீங்குவராதபடிவேலி போடவேண்டுமென்றும் காங்கிரஸ் முடிசூடா மன்னர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் சமதர்மத்திற்கும், காங்கிரசுக்கும் 'கீரிக்கும் பாம்புக்கு'முள்ள சம்பந்தம் என்று வெள்ளையாய் சொல்லுவதுடன் பந்தயங்கட்டி நிரூபித்துக்காட்டவும் முடியுமென்பதை கோபுரத்தின் மீதிருந்து நாங்கள் கூறுவோம்.

நண்பர்களே! நான் எழுதியதைப் பற்றி யோசித்துப்பாருங்கள். நம் சுயமரியாதை சமதர்மக்கட்சியில் சேர்ந்தவர்களுக்கு காங்கிரஸில் அனுதாபமிருக்க முடியுமா? நம் கொள்கைகளுக்கு, சமதர்மக்கொள்கைக்கு, நெஞ்சாணியாயுள்ள 'காந்தியையும், காங்கிரசையும், 'காந்தியம் வீழ்க! காங்கிரஸ் ஒழிக' என்று சொல்லாமலிருக்க முடியுமா? சமதர்மக்கட்சி என்று சுயமரியாதைக்கட்சியோ, நவஜவான் பாரத சபையோ அல்லது இந்தக்கட்சிகளின் தலைவர்களோ நம் சமதர்மக் கொள்கைக்கு விஷம் போலுள்ள காங்கிரசில் சேருங்கள் என்று சொன்னால் அல்லது சம்பந்தப்பட்டுக்கொண்டிருந்தால் அத்தலைவர்கள் உண்மையாளர்களாயிருக்க முடியுமா என்று யோசித்துப்பாருங்கள். அத்தலைவர்கள் சொல்வதில் ஏதாவது நாணயமிருக்க முடியுமா? என்று நன்றாய் ஆழ்ந்து அறிவை செலுத்திப்பாருங்கள். இரும்பு அடிக்கும்பக்கம் ஈக்கு என்னவேலை? சமதர்மத்திற்கு உலை வைக்கும் காங்கிரசில் சமதர்மக்கொள்கையுடையவன் என்று தன்னை விளம்பரம் செய்து கொள்பவருக்கு என்ன காரியமிருக்கிறது என்று ஊன்றிப்பாருங்கள். யாராவது ஒருவன தான் காங்கிரசிலிருந்து கொண்டு தன்னை சமதர்மக்காரன், நான் சுயமரியாதைக்காரன் நான் நவஜவான் பாரத சபை அங்கத்தினன் என்று சொல்வார்களேயானால் அவர்களை நம்பி ஏமாறுதீர்கள்! ஏமாறுதீர்கள்!! ஜாக்கிரதை!!! ஜாக்கிரதை!!!!

உடுமலை, கனகராஜன்.

இங்கிலீஷ் 'சிசர் விட்சு' குதிரைப் பந்தய லாட்டரி.

14-10-31-ல் நியூவ் மார்க்கட்டில் 'மியூட்சுவல் கிளப்பாரால் நடக்கும் பிரைசுக்கு கொடுப்பது 90,000 பவுன். டிக்கட் 1-க்கு ரூ. 4-8-0. 3-க்கு ரூ. 13. டிக்கட்டிற்கு முன் பணத்துடன் முந்துங்கள்!

அதிகாரம்பெற்ற ஏஜண்டு:—

S. K. வரதராஜுலு,

ஆனந்தநிலயம், திருச்செங்கோடு S. I.

குடி அரசு கிடைக்குமிடம்.

திருப்பூர்.
ஆர். கருப்புசாமி,
பல்லடம் ரோடு.

சாத்தூர்.
எம். ஏ. முத்துசாமி பிள்ளை,
சுப்பிரமணியசாமி கோயில் வீதி.

சுயமரியாதைத் திருமணம்.

குண்ணத்தூர்.

13-7 31ந்தேதி ஷையூர் வெங்கிடசாமி நாயுடு குமாரர் திரு. கொண்டையா நாயுடுவுக்கும், ஷையூர் மடாதிபதி நல்லசாமி நாயுடவர்கள் புத்திரி திருமதி சீத்தம்மாளுக்கும் சுயமரியாதைத்திருமணம் நடைபெற்றது. அவ்வமயம் உள்ளூர் கனவான்களும். அயலூர் மிராசுதாரர்களும் விஜயம் செய்திருந்தனர். மணமகளின் தாய் மாமனார் திண்டுக்கல் திரு. கே, ஆர். வெங்கிடசாமி நாயுடு அவர்கள் ஷை திருமணத்தை சுயமரியாதை முறையில் செல்வையாய் நடத்தி வைத்தார். அடுத்து திரு. என். சங்கரையா சீர்திருத்த சுயமரியாதையின் அவசியத்தைப்பற்றி ஓர் சொற்பொழிவாற்றினர் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

சென்னையில் "குடி அரசு" பத்திரிகையும், புஸ்தகங்களும் கிடைக்குமிடம்.

T. சுப்ரமணியம்,
3, செங்கல்வராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

மட்டற்ற வீர்யம்!



ஒரு வேளை மருந்தில் குணம்.

நமது மருந்தை குணமில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம். இன்றே நமது பிரசித்திபெற்ற சக்திலேஹ்யமும் தங்கபஸ்பமும் சாப்பிடுங்கள். நரம்பு தளர்ச்சி, வீர்யக்குறைவு நபும்ஸகத்வம் முதலியவற்றை உடனே பறக்கடிக்கும். விலை ரூ. 5—0—0 தான்.

Neo Sakthi & Co.,
10 th Beat
Vepery Madras.

ஓர் அதிர்ஷ்ட ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினால் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணையை உபயோகியுங்கள்.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்று தர்மார்த்தமாக குறைந்த விலைக்கு வெளியிட்டு வருகிறது.)

சகோதர, சகோதரிகளே, வெட்டவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, கெர்ப,—வித்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேகவாய்வு என்று பெயர் பெற்ற கொடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, தொனரல், கொக்கிருமல், காசமாகவும், கீல்களில் தங்கி, சூலைகளாகவும் நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயிற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு, சூதககட்டிகள், பக்க விலா இழுப்பு குத்தல் கெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் (விரிக்கின் பெருகும்) அனந்த வெட்டவாய்வு ரோகிகளும், 3 நேரம் கம், பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நாள் பாலிய தேசசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்றுவருவது பிரத்தியக்ஷம்

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள தூர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும் பிரம்ம முடிகோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1க்கு ஏழைகளுக்கு ரூ. 7—0—0.

பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவும் வேண்டும்.

பிரம்மமுடி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

க்கியர், பொய்யர் என்று சொல்வது போலவே ஆகும். காந்தியை இப்படிச் சொல்வதென்றால் உடப்பு நடுவிலேயே தீரவேண்டும். உண்மையாய்ச் சொல்லுமிடத்து எனது நண்பர்களில்சிலர் சொல்வதுபோல்அவர்தனக்கு நம்பிக்கை யில்லாததொன்றைச் சொல்கிறார் என்பது உண்மையானால் அவர் 'ராமராஜ்யப்பிரசாரம்' பண்ணுவதில் நான் திடுக்கிடக் காரணமில்லை. திரு. காந்திக்கு அதிகாரம் வந்ததும் இந்தியாவை நவீன நாகரீக முறைப்படி இரகசிய இராஜதந்திரத்தோடும், நாகரீகக் கல்வி முறை, ஆஸ்பத்திரி, இயந்திர சாதனங்கள், பெருத்த ராணுவம் முதலியவைகளோடும் அரசாளுவதற்கு வேண்டிய அமைப்புகளை ஆரம்பித்து நடத்துவதாயிருந்தால் எனக்குக்கவலையில்லை. ஆனால், அவருடைய நூதனமான சுயதருமும், ஐரோப்பாவினுடைய கிறிஸ்துவ நாகரீகத்திற்குப் போட்டியான வேகமும், அவரை தற்கால நாகரீகத்திற்கே இடைஞ்சலாயும் இந்தியாவிற்கே ஒரு ஆபத்தாயும் செய்து விடும் என்றே கவலைப்படுகிறேன். நான் சம்பந்தப்பட்டமட்டில், நாகரீகம் என்பது ஒன்று, அதுவும் பொதுவானதே யென்பது என் அபிப்பிராயம். சமூக ஸ்தாபனங்களிலும், பானவகைகளிலும், மதங்களிலும் வேற்றுமைகள் இருக்கலாம். சிலர் இந்தியர்கள், சிலர் ஐரோப்பியர்களாக விருக்கலாம். சிலர் கிறிஸ்துவர்கள், சிலர் முஸ்லீம்கள், சிலர் இந்துக்களாக விருக்கலாம். ஆனால் நாகரீகம் என்பதிலும், விஞ்ஞான அறிவிலும், தத்துவ ஞானத்திலும், பகுத்தறிவிலும் பிரிவு இருக்கவே முடியாது. இவைகளெல்லாம் மனித சமூகத்தினுடைய பொதுச்சொத்துக்களாகும். உண்மை, அச்சு, ரயில்வண்டி, ஆகாயக்கனி, பீரங்கி, வெடிகுண்டு ஆகாய விமானம், ஒரு ஜெஜத்துணி ஆச்பிரான்சிஸ், வின்ஸ்டின், முசோலினி, காந்தி-ஆகிய இவைகளெல்லாம் நாகரீகமென்பது பெற்ற குழந்தைகளாகும். ஆகவே, மனித சமூகத்திற்கே சொந்தமான நாகரீகம் என்பதைப் பலப்படுத்தவும், வளர்க்கவும் உந்த சாதனங்களே மேற் கண்டவைகளாகும் என்பதே என கருத்து. [தொடரும்]

திருநெல்வேலி.

சாலியர் மாகாஜன சங்கம்:—

10-7-31 இரவு 8 மணிக்கு சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று, சங்கத்தலைவர் திரு. அருணகிரியார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் திரு. எஸ். வி. தொந்தி அவர்கள் 'சமூக முன்னேற்றம்' என்பதைப்பற்றி ஓர் சொற்பொழிவாற்றினார். அனைவருக்கும் தாம்பூலம் வழங்கப்பட்டு, வந்தனோபசாரம் கூறியபின் கூட்டமினிது முடிந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

திருத்துறைப்பூண்டி.

சுயமரியாதைத் திருமணம்:—

13-7-31 காலை 9 மணிக்கு திருமதி துளசியாயம்மாளுக்கும், திரு. உத்திராபதி அவர்களுக்கும் திரு. B. R. நாயுடு அவர்களின் தலைமையின் கீழ் சுயமரியாதைத்திருமணம் நடந்தேறியது. அவ்வமயம், திரு. கணபதி அவர்கள் 'பன்லட மணத்தின் பெருமை' என்பதைப்பற்றி ஓர் சொற்பொழிவாற்றினார். திரு. கோவிந்தராஜுலு அவர்கள் மன்னார்குடி சுயமரியாதை சங்கத்தின் சார்பாகவும், திரு. தக்ஷிணாமூர்த்தி அவர்கள் முத்துப்பேட்டை சுயமரியாதைச் சங்கத்தின் சார்பாகவும், ஜனாப் முகமது இஸ்மாயில் அவர்கள் முத்துப்பேட்டை முகமது இளைஞர் சங்கத்தின் சார்பாகவும இத்திருமணத்தை ஆதரித்துப் பேசினார்கள். பிறகு யாவருக்கும் சந்தனம், தாம்பூலம் வழங்கப்பட்டு விவாகம் இனிது நடைபெற்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

தூத்துக்குடி.

சுயமரியாதைச் சங்க விஷயாலோசனைக் கூட்டம்:—

12-7-31 மாலை 7-30 மணிக்கு தூத்துக்குடி சுயமரியாதைச் சங்கக் காரியதரிசியும், பிரசாரக் கமிட்டித் தலைவருமாகிய திரு. எம். வைகுண்டம் அவர்களின் தலைமையின் கீழ் விஷயாலோசனைக் கமிட்டியாரின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அவ்வமயம் திரு. வைகுண்டம் அவர்களால் சமீபத்தில் நடைபெறும் வட்டமேஜை மகாநாட்டிற்கு நமது இயக்கப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றி உரைக்கப்பட்டு கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிது முடிந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

தீர்மானம்:—[அ] பல்லாயிர ஆண்டுகளாக பார்ப்பன ஆதிக்கத்தின் கீழ் அடிமையுற்று தன்மதிப்பிழந்து சமய, சமுதாய, அரசியல் உரிமைகளை இழந்து நிற்கும் பார்ப்பனரல்லாத மக்களின் ஜீவாதார உரிமைகளை நாடிபாடுபடும் சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த மூன்று பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கவேண்டுவது இந்திய சர்க்காரின் கடமையென இச்சங்கம் தீர்மானிக்கிறது.

[ஆ] திருவாளர்கள் எஸ். இராமநாதன் எம். ஏ., பி. எல்., ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் எம். எல். ஸி. சிவகங்கை வக்கீல் எஸ். இராமச்சந்திரன் பி. ஏ., பி. எல்., ஆகியவர்களை நமது பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்க வேண்டுமென இச்சங்கம் அபிப்பிராயப்படுவதுடன் ஏனைய சுயமரியாதை சங்கங்களுக்கும் தெரிவிக்கிறது.

சுயமரியாதைத் திருமணம்.

12—7—31 ஞாயிற்றுக்கிழமையன்று இவ்வூர் பென்சனர் திரு பா. இராமசாமி நாயுடு அவர்களின் குமாரர் திரு. ஆர். வரதராஜுலு அவர்களுக்கும், வீராகவபுரம் திரு. த. குப்புசாமி நாயடு குமாரத்தி திருமதி லட்சுமியம்மாளுக்கும், சீர்திருத்த சுயமரியாதைத் திருமணம் சிக்கனமுறையில் தமிழ்ப்பண்டிதர் திரு. அழகிரிசாமி நாயடு அவர்களால் வெகு சிறப்பாக நடத்தி வைக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

பொது ஜனங்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நமது நாட்டிலுள்ள விதவைகளின் துயரத்தை நீக்கி விதவா விவாகங்களை நடத்தவும் ஜாதி-சமய கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து காதல் மணத்தை பெருக்கி கலப்பு மணங்களைச் செய்விக்கவும் நாங்கள் உறுதிகொண்டிருப்பதனால், விதவா விவாகம் கலப்புமணம செய்யத் தயாராகவிருக்கும் சகலரும் நேரிலோ அல்லது ஆள்மூலமாகவோ கடிதமூலமாகவோ விபரங்களை கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தெரியப்படுத்தக் கேட்டுக்கொள்கிறோம். விபரங்களை எல்லாம் இரகசியமாக வைக்கப்படும். விலாசம்.

காரியதரிசி,
திருநெல்வேலி ஜில்லா
சுயமரியாதை இளைஞர் சங்கம்,
T. M, 120 H. கண்ணம்மன்
கோவில்தெரு,
திருநெல்வேலி ஜங்ஷன்.

நாகை.

சுயமரியாதைச் சங்கம்:—15-7-31 மாலை 6-மணிக்கு டிசங்க அங்கத்தினர்களின் பொதுக்கூட்டமொன்று சங்ககட்டிடத்தில் தலைவர் திரு. துருவையர் அவர்களின் தலைமையில் கூடி நாகை தாலூகா சுயமரியாதை மகாநாட்டை ஆகஸ்டு மாதக்கடைசி வாரத்தில் சிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி நடத்துவதெனவும் சங்கத்தின் பழைய அங்கத்தினாகள் புதிய நிபந்தனைப்படி சந்தாத்தொகையை ஜுலை பதினைந்திற்குள் கொடுக்கத்தவறினால் அங்கத்தினர்பதவியிலிருந்து விலக்கப்படுமென்பதை ஜுலை 30-ந் தேதிக்குள் என்று மாற்றப்பட்டதெனவுமாகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் கலைந்ததென பொதுக்காரியதரிசி எழுதுகிறார்.

17-7-31 மாலை 6-30 மணிக்கு நாகை தாலூகா சுயமரியாதை மகாநாட்டின் வசூல் கமிட்டிக் கூட்டம் சங்கத்தலைவர்கள் திரு. துருவையர் அவர்களின் தலைமையின்கீழ் கூடியது. டி வசூல் கமிட்டிக்காக திருவாளர்கள் கே. லெட்சுமணன் அவர்களைத் தலைவராகவும், எஸ். நாராயணசாமி அவர்களைக் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டபின் கூட்டம் கலைந்ததென திரு. கிருஷ்ணசாமி எழுதுகிறார்.

நாகபட்டணம் தாலூகா சுயமரியாதை மகாநாடு.

அறிக்கை நெ. 1.

நாகை தாலூகா சுயமரியாதை மகாநாடு நாளது ஆகஸ்டு மாதம் கடைசி வாரத்தில் இவ்வூரில் நடைபெறும். அதற்காக பொருளுதவி செய்பவர்கள் வசூல் கமிட்டியாரிடம் கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எஸ். பி. கிருஷ்ணன்
பொதுக்காரியதரிசி.

நாச்சியார் கோவில்

முஸ்லீம் மகாநாடு.

10-7-31-ந் தேதி மாலை 3-30 மணிக்கு நாச்சியார் கோவில் முஸ்லீம் மகாநாடு மன்னார்குடி ஷம்சுல் ஹுதா பத்திராதிபர் ஜனாப் பாவலர் சி. முகமது யூசுப் சாகிப அவர்களின் தலைமையில் கூடி. 'திருப்போலி முஸ்லீம்களை இட்டாலி கவர்ன்மெண்டார் அக்கிரமமாக கொடுமைப் படுத்துவதை கண்டிப்ப'தாகவும், 'முஸ்லீம்களுக்கு அரசாங்க சபைகளில் தனிதொகுதி பிரச்சினையையே யேற்படுத்தும்படி சவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுவ'தாகவும் 'முஸ்லீம் வாலிபர்களை ஒன்று சேர்த்து தொண்டர்படை யேற்படுத்தி அவர்களுக்குத் தேகப்பியாசம் கற்றுக்கொடுக்க வேண்டுமென தீர்மானிப்ப'தாகவும், 'முஸ்லீம்களுக்கு பொதுச் சாலையொன்று ஏற்படுத்தி அதற்கு நாச்சியார்கோவில் முஸ்லீம் லீக் என பெயரிட்டு கல்வி, சமூக சீர்திருத்தம், ஆகிய வைகளை கவனிக்க வேண்டுமென தீர்மானிப்ப'தாகவுமாகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மகாநாடு இனிது கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

வேற்றுமை
விருக்ஷம்
வேரோடு வீழ்க.

பஞ்சமா பாதகங்கள்
எவை?
ஏன் நிகழ்கின்றன?
அவற்றை நிறுத்தச் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?
இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள், 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணா ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:—
கோவை அ. அய்யாமுத்து
புஞ்சைப்புளியம்பட்டி,
(கோயமுத்தூர் ஜில்லா)

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ...	0—8—0
மனு நீதி மருமம் ...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ...	0—2—0
சோதிடப் புரட்டு. ...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) ...	0—2—0
சுயமரியாதைப் பாடல் ...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். ...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ...	0—4—0
ஞானசூரியன் ...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்	0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ...	0—8—0
யேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)	0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ...	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ...	0—2—0
*குறள் ...	0—8—0
* இயற்கைமதம் ...	0—8—0
* சிதம்பர ரகசியம் ...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.	0—4—0
* சுயமரியாதைத் தத்துவ சித்தங்கள் ...	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது] ...	0—6—0
* ஆராய்ச்சி அணிகலம்	0—12—0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட் ...	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி. கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

"குடி அரசு" ஏஜண்டுகள்.

R. ராமலிங்கம், வியாபாரம்
கோட்டார்.

*ராஜரத்னம், தமிழன் ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை

*சாஸ்மாபாலிட்டன் கிளப்
விருதுநகர்.

*A. V. பாலசுப்ரமணியம்
23, எடய தெரு,
திருவாரூர்.

பி. சாமுவேல் பிள்ளை,
ஜெனரல் நியூஸ் ஏஜண்ட்
தூத்துக்குடி.

*எஸ். மாசிலாமணி பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்,
பாலக்கரை திருச்சி.

S. குற்றாலலிங்கம் பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்
மீனாட்சிபுரம் திருநெல்வேலி.

S. P. கிருஷ்ணசாமி,
நாகப்பட்டணம்.

P. பழனியாண்டி செட்டியார்,
நாகூர்.

T. சேத்துநாயடு
சித்திரக்காரத் தெரு,
மதுரை.

K. கணபதி, சாக்கோட்டை
கும்பகோணம்.

மானேஜர், 'புதுவைமுரசு'
புதுச்சேரி.

P. R. C. எல்லப்பன்,
மரக்கடை வியாபாரம்,
கொசதெரு, காஞ்சீபுரம்.

A. S. முருகேசம், பஜார்
திண்டுக்கல்.

*T. சுப்ரமணியபிள்ளை,
3, செங்கல்வாராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை.

A. R. M. சுந்திர பாண்டியன்
கடை வீதி,
அருப்புக்கோட்டை.

G. V. ராமசாமி
பெரிய கடைவீதி,
கரூர்.

*B. ரங்கசாமி, டைலர்
பெரிய கடைவீதி,
கோயமுத்தூர்.

ஹாஜி முகமது ஷேக்உசேன்,
57. சுண்ணாம்புக்காரத்தெரு,
காரைக்கால்.

*M. ரத்னம்,
கிரோசினாயில் டிபோ,
நெல்லிக்குப்பம்.

K. N. தங்கவேலு,
காரியதரிசி
சமூகசீர்திருத்த சங்கம்
கல்லிடைக்குரிச்சி.

C. S. ஜோசப்
159 கேவல்ரி ரோடு,
பெங்களூர் Can'.

M. N. M. பாவலர்,
நியூஸ் ஏஜண்ட், விழுப்புரம்.

S. ராமசாமி
செங்குந்தர் தெரு,
துறையூர்.

முத்துசாமி
நாடார் ஹைஸ்கூல்,
பொறையார்.

P. S. ஜீவரத்னம் பிள்ளை,
2. மலாய்வீதி, ஸ்லேவ்ஐலண்டு,
கொழும்பு.

A. S. பரமசிவம்
நியூஸ் ஏஜண்ட்,
பம்பலபிட்டியா,
கொழும்பு.

எட்வர்ட்பால்
திருமலாபுரம்

செல்வராய கவுண்டர்
திருப்பத்தூர்.

S. அப்பாதுரை
மண்டி, ராசிபுரம்

M. N. M. பாவலர்
நியூஸ் ஏஜண்ட்,
திருப்பாபுலியூர்.

S. C. கந்தசாமி,
26, குமாரசாமி செட்டி வீதி
செவ்வாய்ப்பேட்டை, சேலம்

சிதம்பரம்.
எம். கலியாணசுந்திர முதலியார்
கதாஸ்டோர் மேலவீதி

சாத்தான் குளம்.
பெரியசாமி நாடார்
ஷாப் வியாபாரம்

பட்டுக்கோட்டை
கே. சாரங்கபாணி
கொண்டப்பநாயடுபாளையம்

ஸ்ரீவில்லிப்புத்தூர்.
பி. ஞானதேசிகம்.

மாயவரம். எம். கலியாணசுந்திர
முதலியார் கதர்ஸ்டோர்,

* இந்த புள்ளியுள்ள விலாசதார்களிடம் குடி அரசு பதிப்பு புஸ்தகங்களும் கிடைக்கும்.

கீழ்கண்ட நகரங்களிலுள்ள ஹிகின்பாதம் புஸ்தகசாலைகளில் குடி அரசு பிரதிகள் கிடைக்கும்.

காட்பாடி.
திருநெல்வேலி.
அரக்கோணம்.
சென்ரல் ஸ்டேஷன்.
மதுரை.
மாயவரம்.
நாகபட்டணம்,
சேலம்.
தஞ்சாவூர்.
பௌரிங்பெட்.
ஈக்மூர்.
ஜோலார்பேட்டை.
திருச்சி.
போத்தனூர்.
ஈரோடு.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road

கோலாலம்பூர்.

R. . Naidu,
86, Ampang St.

O. M. Ali Saiboo & Co,
27, Java Stree

The Selanger Stamp Co.,
Market Street

S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang

Sorojini Vilas Coffee Club.
85: Paul Street,
Seramban N. S.

The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சொ. முருகப்பா.

விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

—

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

—

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0

ஆசிரியர்: S. குருசாமி B.A.

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

—

'நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு " 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

—

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O
கோலார் தங்கவயல் (S. I.)

—

'சண்டமாருதம்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0

ஆசிரியர்: அ. பொன்னம்பலம்

மானேஜர், "சண்டமாருதம்"
கோட்டையூர்,
ராமநாதபுரம் ஜில்லா

—

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

—

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட்,
சிங்கப்பூர்

சித்தர் பார்மஸி

விஷகடிகளினாலுண்டான ஊரல் தடிப்பு பதது குணமடையும். 3 நாள் சாப்பிடும் விஷமை ரூ. 2. சூதபதம்பம், நாட்பட்ட வயிற்று வலி, வாய்வு ரோகங்கள் 7 வேளையில் குணமடையும். ரூ. 3-8-0. சேட்லாக் இனும்.

Dr. P. M.
சங்கரலிங்கம் பிள்ளை,
கோவில்பட்டி, S. I. R.

அநேக பரிசுகளும், தங்க மேடல்களும், ஏராளமான நற்சாட்சிகளும் பெற்று உலகமெங்கும் புகழ்பெற்று விளங்குவதோடு
25—8—23-ல் சென்னையிலும், 14—4—27-ல் மதுரையிலும் நடந்த வைத்திய மகாநாடுகளில் இவர் மருந்துகள்
முதல்தர தேவ ஔஷதங்களென தங்க மேடல்களும், வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்.

பழநி, சி. எம். சாமி.

குருதாம்பர பஸ்பம்

இது சகல வியாதியையும் வேரற நீக்கும் சக்தியுடையது. முக்கியமாய் சூலை, கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம், நீராம்பல், சொரிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், கபாலகுஷ்டம், குறைநோய், சில்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம், அழுகி துர்நாற்றமுடைய பெருவயிறு, மகோதரம், நீர்க்கவுசை அண்டவாய்வு, ஆனைக்கால், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்கள், கிரேகம் அழுகி துர்நாற்றமுடை யவர்கள், ஆணிப்புண்கள், கிராணி இன்னும் அநேக விதமான கொடிய கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். 100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 50. 50-வேளை ரூ. 25. 25-வேளை ரூ. 12-8-0. ஏழைகளுக்குப் பாதிவிலை. பிரபுக்களுக்கு ரேட் வேறு.

இழந்த பலத்தை திரும்பப் பெறவேண்டுமா? மூளைக்கொதிப்பும், பலஹீனமும் நீங்க வேண்டுமா? எமது

மன்மத குளிகையை

உபயோகியுங்கள்

திடகாத்திரர்களாய், வீர புருஷர்களாய், நல்ல ஆரோக்கியமும் ஆயுள் விர்த்தியு மடைந்து உலக வாழ்க்கையில் இன்புற்று வாழ்வீர்கள்.

இழந்த ஆண்மையும பலமும் திரும்பி வரும். நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி, இவற்றைத் தரவல்லது. தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். எவ்வித பலஹீனம், தாதுநஷ்டம், துரித ஸ்கலிதம், இடுப்புவலி உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே உண்மை விளங்கும் 60 குளிகை ரூ. 5, 30 குளிகை ரூ. 3, மாதிரிக்கு கு. 20 ரூ. 2.

குரு அப்ரேக் சேந்தூரம்—நீரழிவுக்குக் கைகண்டது
புட்டி 1-க்கு ரூ. 15.

பிரமேக நிவாரணி:—பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர் எரிச்சல், குத்துதல் நிற்க்கும் புட்டி 1-க்கு ரூ. 2.

குறிப்பு:—பினாங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் அட்வான்ஸ் ரூ. 5 உடன் ஆர்டரும் வி. பி. யில்லாத தேசவாசிகள் ரூ. 2 தபால் செலவும், மருந்துக் கிரயமும் சேர்த்து முன் பணத்துடன் ஆர்டரும் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளையும், மற்ற அவிழ்தங்களையும் கியாட்லாக்கில் பார்க்கலாம்.

வைத்திய ஆசிரியர் சி. மஹலயப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை, பழநி S. I.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு [illegible] நாகம்மாளால் வெளியிடப்பட்டது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை